www.onlineuthayan.com

# உதயன்

சுடர் 27
கதிர் 144

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 06 புதன்கிழமை (18/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# இந்தியக் குழுவின் கேள்விகளால் நிலை தடுமாறிய இலங்கை அரசு

## நாடாளுமன்றில் நேற்று நடந்த சந்திப்பில் கூட்டமைப்பு, ஐ.தே.க. இணைந்து தாக்குதல்

கொழும்பு, ஏப்ரல் 18

கொழும்பு வந்துள்ள இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, இலங்கைத் தமிழர் பிரச்சினைத் தீர்வு, நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கை நடைமுறைப்படுத்தல் விவகாரம் தொடர்பில் இலங்கைத் தரப்பிடம் சரமாரியாகக் கேள்விக்கணைகளைத் தொடுத்ததால், உரிய முறையில் பதிலளிக்க முடியாமல் திக்குமுக்காடி - வாயடைத்து - சங்கடத்துக்குள்ளாகியது இலங்கைத் தரப்பு.

ஐ.தே.க., தமிழ்க் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி குற்றச்சாட்டுக்களை அடுக்கியதுடன் இலங்கை அரசின் காலத்தை இழுத்தடிக்கும் கபடத்தையும் அக்கு வேறு ஆணி வேராகப் புட்டுப்புட்டு வைத்தன. இதனால் அரச தரப்பு பெரும் சங்கடத்துக்குள்ளானது.

உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய நாடாளுமன்றக் குழு நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இலங்கை அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் முக்கிய பேச்சுக்களை நடத்தியது. இதன்போதே மேற்கண்ட சங்கடத்தை அரசு சந்திக்க நேரிட்டது.

மேலும், இனப்பிரச்சினைக்கு இலங்கை அரசு விரைவில் தீர்வு காண வேண்டும் என்றும், நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அது முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் இந்திய நாடா 04


இலங்கை வந்துள்ள இந்திய நாடாளுமன்றக் குழுவின் தலைவியான சுஷ்மா சுவராஜ் நேற்றுப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (த)

## 13 ஆவது திருத்தம் பற்றி எதுவுமே பேசவில்லை

### இந்தியக் குழுவுடனான சந்திப்புப் பற்றி பீரிஸ்

கொழும்பு, ஏப்.18

13ஆவது திருத்தம் குறித்து இந்தியக் குழு எம்முடன் எதுவும் பேசவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய நாடாளுமன்றக் குழுவினர், தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும், சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்தியக் குழுவுக்கும் இடையில் நேற்று 04

## ஆள்கடத்தல்களாலும் இலங்கைக்குச் சிக்கல்

கொழும்பு, ஏப்.18

எதிர்வரும் ஜூன் மாதம் நடக்கவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அடுத்த கூட்டத் தொடரிலும், மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கையின் மூத்த அரச அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கே அவர் இந்தக் கருத்தைக் கூறியுள்ளார்.

ஆள் கடத்தல்கள் மற்றும் காணாமற்போதல்கள் குறித்த குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை அரசு அடுத்த கூட்டத்தொடரில் பதிலளிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டதாக அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமை மீறல்களை விசாரிக்க வலியுறுத்தும் தீர்மானம் ஒன்று ஐ.நா மனித உரிமைகள் சபையின் கடந்த கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்டது. ஆனாலும் 04

## அரசியல் தீர்வை விரைவில் எட்ட இந்தியாவின் அழுத்தம் முக்கியம்

### சுஷ்மா குழுவிடம் கூட்டமைப்பு எடுத்துரைப்பு

கொழும்பு, ஏப். 18

மீளக் குடியமர்ந்த தமிழ் மக்களுக்கு இந்தியா உதவிகளை வழங்குகிறது. ஆனால் அதைவிட முக்கியமான அரசியல் தீர்வு ஒன்றை விரைவில் காண இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுப்பதே அவசரமும் அவசியமுமான தேவையாகும்.

-இவ்வாறு இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிடம் எடுத்துரைத்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

பாரதிய ஜனதாக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான குழு நேற்று மாலை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசியது.

இலங்கை அரசு நீதியாக, நேர்மையாகத் தம்முடன் பேச்சு நடத்தவில்லை என்ற விடயத்தை கூட்டமைப்பு உறுப்பினர்கள் சந்திப்பில் தெளிவுபடுத்தினர்.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான, இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ஈ.சரவணபவன், எஸ்.சிறிதரன் ஆகியோர் பங்குபற்றினர்.

இலங்கை அரசுடன் இடம்பெற்றுவரும் தீர்வுப் பேச்சு உள்ளிட்ட சமகால அரசியல் 04

### இந்தியாவுக்கு இப்படி வரவேற்பு

முல்லைத்தீவு, ஏப்.18

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் வருகையை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பெயர் பலகை, வீதி என்பன இரவோடிரவாக நேற்றுத் திருத்தி அமைக்கப்பட்டன.

இலங்கை வந்துள்ள இந்திய நாடாளுமன்ற உறுப் 04

## தமிழீழ வாக்கெடுப்புக்கு கருணாநிதி வரவேற்பு

சென்னை, ஏப். 18

இலங்கையில் தனி ஈழம் அமைப்பது குறித்துப் பொதுசன வாக்கெடுப்பு நடத்தும் யோசனைக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் தனி ஈழம் அமைவது தொடர்



பாக பொதுசன வாக்கெடுப்பு நடத்துவதைத் தான் 04

### சுப்பிரமணிய சுவாமியை அழைக்கிறது இலங்கை

சமாதானம் பற்றி உரையாற்றுவதற்காக இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணிய சுவாமிக்கு இலங்கை அரசு அழைப்பு விடுத்துள்ளது. இலங்கை சமாதான முயற்சிகள் தொடர்பில் விரிவுரையாற்றுமாறு இராணுவத்தினர் அவருக்கு அழைப்பு விடுத்துள்ளனர். எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள பாதுகாப்புக் கருத்தரங்கில் விரிவுரையாற்றவே அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

### பொலிஸ் வாகனங்களில் சி.சி.ரி.வி. கமரா

கொழும்பு மா நகரில் சி.சி.ரி.வி. கமரா பொருத்தப்பட்ட வாகனங்களின் நடமாடும் சேவை பொலிஸ் மா அதிபர் என். கே. இலங்கக்கோனினால் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. பொலிஸ் தலைமையகத்தில் மாலை 4 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெற்றது. சி.சி.ரி.வி. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொழும்பு நகரத்தை பாதுகாத்தல் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### நிலநடுக்கம்

பபுவா நியூ கினியாவின் வடக்கு கரையோரப் பகுதியில் 7 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. 125.5 மைல்கள் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் பதிவானதாக அமெரிக்க பூகோளவியல் ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது. எனினும் இந்த நிலநடுக்கத்தால் ஆழிப்பேரலை ஏற்படவாய்ப்பில்லை.

### சிறுமி சாவு

அம்பலாங்கொட பலப்பிட்டிய பிரதேச வீடொன்றின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் 17வயது சிறுமி உயிரிழந்தார். மேலும் , 12 வயது சிறுமியும் காயமடைந்தார். அவர் கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிறுமிகள் இருவரும் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த போது சுவர் இடிந்து வீழ்ந்துள்ளது.

### அமைச்சரின் வீடு மீது தாக்குதல்

மஹியங்கனையில் அமைந்துள்ள அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்னவின் வீட்டின் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த சந்தேகநபர்கள் பதுளை மற்றும் மஹியங்கனைப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன குறிப்பிட்டார்.

### கைவிடப்பட்ட ஆண் குழந்தை

உடுகம, பார் சந்தி பிரதேசத்தில் வீதியில் கைவிட்டுச் செல்லப்பட்டிருந்த நிலையில் ஆண் குழந்தையொன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர். சுமார் ஒரு வருடம் நான்கு மாதங்கள் நிரம்பிய குழந்தையே மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். குழந்தையின் பெற்றோருக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக தந்தையினால் இந்த குழந்தை தெருவில் கைவிடப்பட்டுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80,000 மெற்றிக்தொன் நெல் வடக்கில் இம்முறை விளைச்சல்


## அரசு 10,000 மெற்றிக்தொன்னை மட்டுமே கொள்வனவு செய்யுகிறது

யாழ்ப்பாணம், ஏப்.18
வடமாகாணத்தில் பெரும் போகத்தில் இந்த முறை சிறப்பான விளைச்சலாக 80 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. எனினும் அரசு 10 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லையே கொள்வனவு செய்யும் என்று அநுராதபுரத்தில் அமைந்துள்ள நெல் சந்தைப்படுத்தல் இயக்குநர் பந்துல குமார தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணம் பெரும் போக நெற்செய்கையில் இந்த முறை சாதனை படைத்துள்ளது. மொத்தமாக 110 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்பட்டுள்ளது. அறுவடை 80 ஆயிரம் மெற்றிக் தொன் வரையில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இருப்பினும் அரசு வட மாகாண விவசாயிகளிடம் இருந்து 10 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லையே கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளது.

**வடபகுதியில் இருந்து ஏற்கனவே 400 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதுவே போர் முடிவடைந்த பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட அதிக தொகையாகும் என்கிறார் நெல் சந்தைப்படுத்தல் இயக்குநர்.**



ஏற்கனவே வடபகுதி விவசாயிகளிடம் இருந்து 4 ஆயிரத்து 400 மெற்றிக் தொன் நெல் வரையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும், இது போர் முடிவடைந்த பின்னர் நடக்கும் மிகப் பெரிய கொள்வனவு எனவும் பந்துல குமார தெரிவித்தார்.

''நெல் கொள்வனவுக்கான 7 நிலையங்கள் மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

மன்னாரில் கடந்த முறை 33 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டபோதும் இந்த முறை 40 ஆயிரம் ஏக்கரில் அது பயிரிடப்பட்டுள்ளது. மன்னார் விவசாயிகள் ஒவ்வொருவரிடம் இருந்தும் 5 ஆயிரம் கிலோகிராம் நெல்லைக் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது'' - என்றார். (த-5)

## எரிபொருள்களின் விலை மீண்டும் அதிகரிக்காது

கொழும்பு, ஏப்.18
எரிபொருள்களின் விலைகளில் எந்தவொரு மாற்றமும் ஏற்படாது எனவும் மேற்குலக நாடுகளில் உருவாகி வரும் பொருளாதார நிலைமைகளின்படி எதிர்காலத்தில் எரிபொருளின் விலை குறைவடையக்கூடிய சாத்தியம் நிலவுவதாகவும் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.



**மசகு எண்ணெய் பீப்பா ஒன்றின் விலை 131 அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்திருந்தது. எனினும் அது தற்போது 122 அமெரிக்க டொலர்கள் வரை குறைவடைந்துள்ளது.**

கடந்த தினங்களில் மசகு எண்ணெய் பீப்பா ஒன்றின் விலை 131 அமெரிக்க டொலராக அதிகரித்திருந்தது. எனினும் அது தற்போது 122 அமெரிக்க டொலர் வரை குறைவடைந்துள்ளது எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

மேலும், எரிபொருள் கொள்வனவின் போது மேற்குலக நாடுகளாலேயே அதிகளவு எரிபொருள்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. மேற்குலக நாடுகளில் ஏற்பட்டுவரும் பொருளாதாரப் பின்னடைவு காரணமாக அவற்றின் எரிபொருள் கொள்வனவு நிச்சயமாகக் குறைவடையும்.

இதனால் அந்த இலாப வாய்ப்பு இலங்கைக்குக் கிடைக்கும் எனவும் அமைச்சர் மேலும் கூறினார்.

இதற்கமைய, மசகு எண்ணெய் பீப்பா ஒன்றின் விலையும் குறைவடைவதால் இலங்கையில் எரிபொருள்களின் விலையைப் 10 ரூபாவினால் குறைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (த-22)

## 400 வீதியோரக் கடைகளுக்கு புறக்கோட்டையில் 'சீல்' வைப்பு

கொழும்பு, ஏப்.18
சுமார் 9 கோடி ரூபா வாடகையை இதுவரையில் வழங்காத வீதியோரக் கடைகள் மற்றும் ஏனைய கடைகள் உட்பட 400 கடைகளை சீல் வைத்து மூடுவதற்கு நேற்று முதல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என கொழும்பு மாநகரசபைப் பொருளாளர் கே.பீ. சித்ர பால கூறியுள்ளார்.

புறக்கோட்டை ஒல்கோட் மாவத்தையில் அமைந்துள்ள 400 கடைகள் 7 வருட காலத்திற்கு 2 லட்சம் ரூபா முதல் 10 லட்சம் ரூபா வரையில் வாடகைப்பணம் செலுத்தாதுள்ளமை தெரியவந்துள்ளதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

குறித்த கடைகளின் உரிமையாளர்கள் தமது வாடகைப்பணத்தைச் செலுத்திவிட்டு, அந்தக் கடைகளை மீண்டும் பெற்றுக்கொள்ளலாம். இல்லாவிடில், அவை ஏலத்திற்கு விடப்பட்டு ஏனையவர்களுக்குக் கையளிக்கப்படும் என நகரசபைத் தலைவரும், மாநகர ஆணையாளரும் தமக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர் எனவும் சித்திரபால கூறியுள்ளார்.

## நீதி வழங்கப்படாவிட்டால் மக்கள் கிளர்ந்தெழுவர்

### பாரத லக்ஷ்மனின் மகள் ஹிருணிகா சீற்றம்

கொழும்பு, ஏப்.18
பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கை முழுநாடும் அவதானித்துக் கொண்டிருப்பதாகவும் நீதி வழங்கப்படாவிட்டால் நாட்டு மக்கள் அதற்கு எதிராகக் கிளர்ந்தெழுவார்கள் எனவும் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகளான ஹிருணிகா பிரேமச்சந்திர கூறியுள்ளார்.



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உயிரிழந்த நிலையில் இரத்த வெள்ளத்தில் காணப்படும் காட்சிகள் அடங்கிய புகைப்படங்களை நீதிமன்ற வளாகத்திலிருந்து ஊடகவியலாளர்களிடம் காண்பித்த ஹிருணிகா, நடுநிலையாகச் செயற்படுமாறு அதிகாரிகளை வலியுறுத்தினார்.

''இங்கு சமுகமளித்திருப்பவர்கள் மாத்திரமல்ல, முழு நாடும் இந்த வழக்கை அவதனித்துக் கொண்டிருக்கிறது. அனைவரும் நீதியைக் கோருகிறார்கள். நீதி நிலைநாட்டப்படாவிட்டால் அதற்கெதிராக மக்கள் கிளர்ந்தெழுவார்கள்'' என அவர் கூறினார். (த)

## நகரங்களை அண்டியதாக 2,000 பிச்சைக்காரர்கள்

கொழும்பு, ஏப்.18
இலங்கையின் பிரதான நகரங்களை அண்டியதாக 2 ஆயிரம் பிச்சைக்காரர்கள் உள்ளதாக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹ, குருநாகல் மற்றும் கண்டி ஆகிய நகரங்களை பெரும் எண்ணிக்கையில் பிச்சைக்காரர்கள் நடமாடும் நகரங்களாகக் கண் டறியப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சின் அதி காரியொருவர் தெரிவித்தார்.

இந்தப் பிச்சைக்காரர்களுள் 80 வீதமானோர் பல்வேறு நோய்களால் அவதிப்படுவோர் எனவும், நுரையீரல் சம்பந்தமான நோய் அவர்களில் பெரும்பாலானோருக்குக் காணப்படுவதாகவும் ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

மேலும், இலங்கையில் உள்ள பிச்சிசைக்காரர்களில் 21 வீதமானோர் வலுவிழந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

பிச்சைக்காரர்களில் 72 சதவீதமானோர் ஆண்கள் எனவும் 28 சதவீதமானோர் பெண்கள் எனவும் ஆய்வுகள் மேலும் கூறுகின்றன. (த-22)

## அக்குரஸ்ஸ பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கைது

கொழும்பு, ஏப் 18
வயோதிபப் பெண் ஒருவரை மோட்டார் சைக்கிளால் மோதி விபத்துக்குட்படுத்திய குற்றத்திற்காக அக்குரஸ்ஸ பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான தரிந்து மது என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி அக்குரஸ்ஸ நகரப் பகுதியில் வைத்து கே. சோமாவதி என்ற பெண்ணை மோட்டார் சைக்கிளினால் மோதியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த இரு தினங்களில் விபத்துக்குள்ளான பெண்ணின் நிலை மிகவும் மோசமடைந்துள்ள நிலையில் மேற்படி அரசியல்வாதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாத்தறை பொது வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த மேற்படி பெண், மேலதிக சிகிச்சைக்காக அக்குரஸ்ஸ அரச வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார். (த)

## பல்கலை மாணவருக்கு இம்முறையும் பயிற்சி

கொழும்பு, ஏப்.18
பல்கலைக்கழக மாணவர்களுக்கு இம்முறையும் தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் மே மாதம் 20 ஆம் திகதி பல்கலைக்கழக மாண்வர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி ஆரம்பமாகும் எனவும் இரண்டு கட்டங்களாக இப்பயிற்சி வழங்கப்பட உள்ளதாகவும் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக புதிய மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகளை நாட்டின் 30 இடங்களில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த தடவை பயிற்சி பெற்ற மாணவ மாணவியரின் ஆலோசனைகளுக்கு அமைய, கடந்த காலக் குறைகளை நிவர்த்தி செய்து கொண்டு இம்முறை பயிற்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளதாக கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ன குறிப்பிட்டுள்ளார்.

முதல் கட்டத்தில் பத்தாயிரம் மாணவ மாணவியருக்குத் தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. கடந்த தடவை நடைபெற்ற தலைமைத்துவப் பயிற்சியில் மாணவர்கள் [illegible] எதிர்நோக்கியிருந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (த)

## வாதுவ பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம்

கொழும்பு, ஏப்.18
வாதுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கல்கிஸைப் பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண கூறினார்.

இந்தப் பொறுப்பதிகாரிக்கு எதிராக அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்த நபர் ஒருவர் வாதுவ பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தபோது சாவடைந்ததை அடுத்து இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் மற்றும் இரு கான்ஸ்டபிள்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இந்த மரணம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்கின்றனர். (த)


# Wanted Journalist

We are looking for a Journalist, with a minimum experience of five years, competent equally in English and Tamil. Should be proficient enough in translation from English to Tamil and viceversa. Candidates who had worked in print or electronic media will be given preference. Should be within the age limit of 30 to 50 years.

Selected candidate should be willing to work with the editorial team and be enthusiastic and co-operative.
Apply with full bio-data and copies of testimonials
before 25th April 2012
to:

Chief Editor,
New Uthayan Publications (pvt.) Ltd,
361, Kasthuriyar Road,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளை தப்பியது வெட்ட நிரந்தரத் தடை

## யாழ். நீதிமன்றம் தீர்ப்பு; மேன்முறையிட காளை உரிமையாளர் முடிவு

*யாழ்ப்பாணம்,ஏப்.18*

***இறைச்சிக்காக வெட்டப்படவிருந்த நிலையில் அரச அதிபரின் தலையீட்டால் காப்பாற்றப்பட்ட காளைமாட்டை வெட்டுவதற்கு யாழ். நீதிமன்றம் நேற்று தடைவிதித்தது. அத்தோடு காளை மீதான உரிமையை அதன் உரிமையாளருக்கு வழங்கி, காளையை அவரிடமே ஒப்படைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.***



எனினும் உரிமையாளர் காளையைத் துன்புறுத்தக் கூடாது எனவும் தேவை ஏற்படின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் காளையைப் பராமரிப்பதற்கும் அவருக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்யும் வகையில் நியாயமான நஷ்ட ஈட்டை உரிய முறையில் பெற்றுக்கொள்ளவும் முடியும். உரிமையாளர் விரும்பும் பட்சத்தில் காளையை நகுலேஸ்வரத்துக்கு கொண்டு சென்று அங்கு பராமரிப்பதற்கும் முடியும். எனவே அவ்வாறான இணக்கப்பாட்டுக்கு வரும் வகையில் கால அவகாசமும் வழங்குவதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

குடாநாட்டில் பரபரப்பை ஏற்படுத்திய இந்தக் காளை மாட்டு வழக்குத் தொடர்பாக நீதிவான் மா. கணேசராஜா நேற்று தீர்ப்பை வழங்கினார்.

அவர் வழங்கிய தீர்ப்பின் விவரம் வருமாறு:

குறித்த காளை தொடர்பாக எழுந்துள்ள சமய, சமூகப் பிரச்சினைகளை சட்டநோக்குடன் மட்டுப்படுத்தாது, சமுதாய நோக்குடனும் அணுகவேண்டிய தேவை மன்றுக்கு உண்டு. இன, சமய நல்லிணக்கத்துக்கு இது வழிகோலும் எனவும் மன்று கருதுகிறது.

வழக்குத் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட முதல் முறைப்பாட்டு அறிக்கை, சத்தியக்கூற்று, ஆவணங்கள் ஆகியவற்றை மன்று கவனமாக ஆராய்கின்ற போது, விடயப்பொருளான காளை இறைச்சிக்காக வெட்டப்பட இருக்கும் வேளையில் இந்துப் பெரியோர்களின் கோரிக்கைக்கு இணங்க காளையை வெட்டுவதை அரச அதிபர் தடை செய்தமை சட்டத்துக்கு விரோதமானது எனவும், அரச அதிபருக்கு அவ்வாறான அதிகாரம் இல்லை எனவும் அரச அதிபர் பொலிஸாரைப் பிழையாக வழிநடத்தியதாகவும் எதிர்த்தரப்பினால் சமர்ப்பணம் செய்யப்பட்டிருந்தது.

இங்கு அரச அதிபர் தனது அதிகார மரபை மீறிச் செயற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ள போதிலும், இன, மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் நல்லெண்ணத்தின் அடிப்படையில் காளையை வெட்டுவதற்கு தடை விதித்ததாக மன்று கருதுகிறது

எனினும், உரிமையாளரின் காளை மீதான உரிமையை மன்று எந்த விதத்திலும் கேள்விக்குட்படுத்தவில்லை. ஆனாலும் துண்டுப் பிரசுரம் மூலம் காளையை வெட்டுவதாக விளம்பரப்படுத்தி வெட்ட முனைந்தமை குறிப்பிட்டதொரு சமூக, சமய உணர்வுகளை புண்படுத்தியுள்ளதாகக் கூறப்பட்டது.

குறித்த காளையை நகுலேஸ்வர கோயிலுக்கு ஒப்படைக்கவும் உரிமையாளருக்கு வணிகர் கழகம் மூலமாக நஷ்ட ஈட்டைப் பெற்றுத் தருவதாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே காளை தொடர்பாக எழுந்துள்ள சமய, சமூகப் பிரச்சினைகளை சட்டநோக்குடன் மட்டுப்படுத்தாது சமுதாய நோக்குடனும் அணுக வேண்டிய தேவை மன்றுக்கு உண்டு. எனவே காளை வெட்டப்படுவதற்கு தடை விதிக்கப்படுகிறது - என்று யாழ். நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி இ.த. விக்னராஜாவும், எதிராளிகள் சார்பில் சட்டத்தரணிகளான ர.நுஃமான், ஜொனி மதுரநாயகம் ஆகியோரும் முன்னிலையாகியிருந்தனர். இதேவேளை குறித்த தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்போவதாக எதிராளிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ங-4)

பிரதேச செயலகங்களில் பணியாற்றும்

# ஆண் அலுவலர்களுக்கும் இன்று முதல் சீருடை

தென்மராட்சி, ஏப்.18

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அனைத்து ஆண் அலுவலர்களும் இன்று புதன்கிழமை தொடக்கம் சீருடை அணிய வேண்டுமென யாழ்.மாவட்ட செயலகத்தினர் அறிவித்துள்ளனர்.

ஆண் அலுவலர்களுக்கான சீருடைக்குரிய நிறம் தெரிவு செய்யும் வரை இளநீல நிற சேட்டும், கடும் நீல நிற நீளக் காற்சட்டையும் அணிய வேண்டும் எனவும் இது நேற்று முன்தினம் தொடக்கம் நடைமுறைக்கு வருமெனவும் மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகம் உட்பட அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றும் பெண் அலுவலர்கள் நீல நிற சேலை அணிய வேண்டுமென யாழ்.அரச அதிபரினால் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# உணவு நிலையங்களில் திடீர் பரிசோதனை

## தர வரிசை குறைக்கப்படும் என எச்சரிக்கை

தென்மராட்சி, ஏப்.18

சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள உணவு கையாளும் நிலையங்கள் மீது திடீர் சோதனைகளை நடத்தியுள்ளனர்.

இதில் சுகாதார விதிமுறைகளுக்கு எதிராக இயங்கிய வர்த்தக நிலையங்களின் தர வரிசை குறைக்கப்பட்டதுடன் எச்சரிக்கை அறிவித்தல்களும் வழங்கியுள்ளனர்.

குறித்த காலப் பகுதிக்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிடின் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு கடைகள் மூடப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

**உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிடின் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல்.**

கடந்த ஜனவரி மாதம் சுகாதாரப் பகுதியினர் உணவு கையாளும் நிலையங்களை பார்வையிட்டு 'ஏ','பி','சி' என தர வரிசைப்படுத்தி அண்மையில் அதற்குரிய சான்றிதழ்களை வழங்கியிருந்தனர். இந்த நிலையங்களின் முன்னேற்றம் தொடர்பாக சோதனை நடத்திய போது சுகாதார விதிமுறைகளுக்கு எதிராகக் காணப்பட்ட நிலையங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-9)

# நெடுந்தீவு சிறுமி கொலை சந்தேகநபருக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18

நெடுந்தீவுச் சிறுமி வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் சந்தேகநபருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

சிறுமியின் சகோதரர் ஒருவரின் வாக்குமூலம் மன்றில் நேற்றுப் பதிவு செய்யப்பட்டதோடு, மேலும் இரண்டு சாட்சிகளின் சாட்சியத்தை அடுத்தமுறை பதிவு செய்வதற்காக மன்றுக்கு அழைத்து வரும்படியும் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கடந்தபெப்ரவரிமாதம்நெடுந்தீவைச் சேர்ந்த ஜேசுதாசன் லக்சினி (வயது-13) என்ற சிறுமி வன்புணர்வின் பின்னர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரான அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி ஜெகதீஸ்வரன் (வயது-31) என்பவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (10-4)

# சமுர்த்தி முத்திரைக்குப் பணம் இம்மாதம் முதல் வழங்கப்படும்

## பெறுமதியும் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.18

சமுர்த்திப் பயனாளிகளுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டுவந்த முத்திரையின் பெறுமதி இந்த மாதம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் முத்திரையின் பெறுமதிக்குச் சமனான பணத்தொகை சமுர்த்தி வங்கியூடாக பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

இவ்வாறு யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் இ.சிவசிறி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

யாழ். மாவட்டத்தில் 52 ஆயிரத்து 819 சமுர்த்திப் பயனாளிகள் உள்ளனர். இவர்களுக்கு மாதாந்தம் சமுர்த்தி முத்திரை வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை காலமும் சமுர்த்தி முத்திரையின் அரைவாசிப் பெறுமதிக்குப் பணம் சமுர்த்தி வங்கியூடாகவும் மிகுதி அரைவாசிப் பெறுமதிக்கு பொருள்கள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகவும் வழங்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த முத்திரையின் பெறுமதி தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது 250,350,375, 415,525,613,ரூபாவாக இருந்த முத்திரைகளின் பெறுமதி 750 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 900 ரூபா முத்திரையின் பெறுமதி ஆயிரத்து 200 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்து. ஆயிரத்து 500 ரூபா முத்திரையின் பெறுமதியில் மாற்றம் செய்யப்படவில்லை.

அத்துடன் இந்த மாதம் முதல் முத்திரைப் பெறுமதிக்குரிய முழுத்தொகையும் சமுர்த்தி வங்கியூடாக காசாக வழங்கப்படவுள்ளது என்றார். (த-5)

# முதற் கட்டமாக 28 பேருக்கு வீடமைப்புத் திட்டக் கடன்

## வீடமைப்பு அதிகார சபை வழங்கியது

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ். மாவட்டத்தில் நிரந்தர வருமானம் இல்லாதவர்களில் முதற்கட்டமாக 28 பேருக்குப் புதிய வீடுகள் அமைப்பதற்கான வீட்டுத் திட்டக் கடன் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் றோயல் ஜெய்சந்திரன் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது; யாழ். மாவட்டத்தில் நிரந்தர வருமானம் அற்ற நிலையில் வீட்டுத் திட்டக் கடன் திட்டத்துக்கு விண்ணப்பித்தவர்களில் முதற் கட்டமாக 28 பேருக்கு புதிய வீடுகளை அமைக்கவும், 180 பேருக்கு வீடுகளை தரம் உயர்த்தவும் வீடமைப்பு அதிகார சபையினால் 23.2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

புதியவீடு அமைக்க 2 இலட்சம் ரூபாவும் வீட்டை தரம் உயர்த்த 1 லட்சம் ரூபாவும் கடனாக வழங்கப்படவுள்ளது.

நெடுந்தீவில் 3 வீடுகள் தரம் உயர்த்தவும், யாழ். நகரில் 5 புதிய வீடுகள் அமைக்கவும் ஒரு வீட்டை தரம் உயர்த்தவும்,நல்லூரில் ஒரு புதிய வீட்டை அமைக்கவும் இரு வீடுகளைத் தரம் உயர்த்தவும் , சண்டிலிப்பாயில் ஒரு புதியவீட்டை அமைக்கவும் 18 வீடுகளைத் தரம் உயர்த்தவும்; சங்கானையில் 3 புதிய வீடுகளை அமைக்கவும் 5 வீடுகளை தரம் உயர்த்தவும், உடுவிலில் 2 புதிய வீடுகளை அமைக்கவும் 22 வீடுகளை தரம் உயர்த்தவும் கடன் வழங்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழையில் 19 வீடுகளை தரம் உயர்த்தவும் ,கோப்பாயில் 4 புதிய வீடுகளை அமைக்கவும்,25 வீடுகளை தரம் உயர்த்தவும், சாவகச்சேரியில் 7 புதிய வீடுகளை அமைக்கவும் , 43 வீடுகளை தரம் உயர்த்தவும் ,கரவெட்டியில் 7 புதிய வீடுகளை அமைக்கவும்,19 வீடுகளை தரம் உயர்த்தவும் ஊர்காவற்றுறையில் ஒரு வீட்டைத் தரம் உயர்த்தவும் கடன் வழங்கப்பட்டுள்ளது என்றார். (த-13)

### கொலைகார முதலை பிடிபட்டது...



தென்மராட்சிப் பகுதியில் பலநாள்களாக பொதுமக்களின் கால்நடைகளைக் கொன்று தின்றுவந்த 7அடி நீளம் கொண்ட 'கொலைகார முதலை' செம்மணிக் குளத்தில் மீனவர்கள் வைத்த தடத்தில் நேற்று மாலை சிக்கியது. இந்தக் குளத்தில் சில நாள்களுக்கு முன்னர் மீன்பிடிக்க வந்தவர் மீதும் முதலை வாய் வைக்க முயன்றிருந்தது. இதன் பின்னரே அதற்குத் தடம் வைக்கப்பட்டது. தடத்தில் சிக்கிக்கொண்ட முதலையை ஏராளமான மக்கள் பார்வையிட்டனர். (ங-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டமைப்பும் இம்முறை களத்தில் சூடு பிடிக்கிறது கிழக்குத் தேர்தல்

கொழும்பு, ஏப்.18

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் விவகாரம் சூடு பிடித்துள்ளது. இவ்வேளையில், கிழக்குத் தேர்தலில் குதிப்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசியல் காய்நகர்த்தலில் ஈடுபட்டுள்ளது.

கிழக்குத் தேர்தல் களத்தில் இம்முறை கூட்டமைப்பும் களமிறங்குவதால் தேர்தலில் போட்டியிடவுள்ள இதர கட்சிகள் தத்தமது அரசியல் நடவடிக்கைகளை என்றுமில்லாதவாறு பலப்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளன.

அதேவேளை, தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் இதுவிடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழு கூடி ஆராயும் எனத் தெரியவருகின்றது. இந்தத் தகவலை கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் 'உதய'னிடம் உறுதிப்படுத்தினார்.

அத்துடன், கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிடும் என்றும், அதற்கான காரணிகள் உரியவகையில் விளக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

வடக்கு,கிழக்குஇணைப்பு என்ற விடயத்தில் உறுதியாக உள்ள கூட்டமைப்பு, கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முனைவது ஏன் என எழுந்துள்ள விமர்சனங்களுக்கும் அரியம் எம்.பி. விளக்கமொன்றையளித்தார்.

''வடக்கு, கிழக்கு தாயக இணைப்பு என்ற எமது கொள்கையில் நாம் உறுதியாகவே இருப்போம். இறுதிவரை நிலைப்பாட்டைத் தளர்த்திக்கொள்ளப் போவதில்லை. கிழக்கு மாகாணசபைத் தேர்தலிலோ அல்லது வட மாகாணசபைத் தேர்தலிலோ போட்டியிடுவதால் துளியளவேனும் எமது கொள்கை மாறாது. தேர்தலில் போட்டியிடுவதற்கான காரணங்களை நாம் அறிவிப்போம்'' - என்று அவர் அந்த விளக்கத்தில் குறிப்பிட்டார்.

அதுமட்டுமின்றி, தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட பின்னர்தான் எமது கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்று அறிவிக்கப்படும். கிழக்கு மாகாணசபைத் தேர்தல் விவகாரம் தொடர்பில் கூட்டமைப்பு கூடி ஆராயும். அதற்கு முன்னர் அவசரப்பட்டு அது குறித்து கருத்து வெளியிடத் தேவையில்லை என்றும் அரியநேத்திரன் எம்.பி. தெரிவித்தார்.

அதேவேளை, கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் இதர கட்சிகளும் தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளன. வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் நடவடிக்கைகளும் கட்சி மட்டத்தில் இரகசியமான முறையில் இடம்பெற்று வருகின்றன என்றும் அறிய முடிகின்றது.

கிழக்கு மாகாண சபையைக் கலைத்து தேர்தல் வைக்கும் திகதியை அரசு விரைவில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் என்றும் தெரியவருகின்றது.

### 13 ஆவது திருத்தம் பற்றி எதுவுமே பேசவில்லை

01 இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தது தொடர்பாக எந்தக் கருத்தும் முன்வைக்கப்படவில்லை.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவித்ததாவது:-

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது மற்றும் அதற்கு இலங்கை அரசு கொடுக்கும் முன்னுரிமை பற்றி அவர்களுக்கு விளக்கினோம். இந்த நடைமுறைப் படுத்தலுடன் தொடர்புடைய அமைப்புகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது. 13 ஆவது திருத்தம் தொடர்பாக கலந்துரையாடப்படவில்லை.

இந்த விடயம் நாடளுமன்றத் தெரிவுக்குழு மற்றும் அரசியல் தீர்வுக்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தங்கள் என்ற நிகழ்ச்சி நிரலுக்குள் உள்ளது. இந்தியக் குழுவினர் எந்தவிதமான அழுத்தங்களையும் பிரயோகிக்கவில்லை. இலங்கைஅரசின் நல்லிணக்க செயற்பாடுகள் குறித்து அவர்களுக்கு விபரிக்கும் வாய்ப்பு கிடைத்தது-என்றார். (த)

## யாழ். பல்கலை மாணவியின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

நெளுக்குளம், ஏப்.18

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் கிணறு ஒன்றினுள் இருந்து யாழ். பல்கலைக்கழக மாணவி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் தற்போது வவுனியா உக்குளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யாழ். பல்கலைக்கழக மாணவியான நரீனா கென்ராபவ்யா (வயது-25) என்பவர் சடலமாக மீட்கப்பட்டவராவார்.

போரின் போது தனது பெற்றோரை இழந்த இந்த யுவதி வவுனியா உக்குளாங்குளத்தில் உள்ள அவரது உறவினர் வீட்டில் தங்கியிருந்தார். நேற்றுமுன்தினம் மாலையில் இருந்து இவரைக் காணவில்லை. ஆனால் நேற்றுமுற்பகல் 10 மணியளவில் இவரது சடலம் கிணற்றில் கிடப்பது தெரியவந்தது.

பொலிஸார் சடலத்தை மீட்டு வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். அங்கு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைன் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (க-402-435)

## இந்தியாவுக்கு இப்படி வரவேற்பு

01 பினர்கள் குழு இன்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கு செல்லவுள்ளது. இதன் போது முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்களை கையளிக்க உள்ளது.

இந்த நிலையில் பிரதான வீதியிலிருந்து மாவட்ட வைத்தியசாலைக்கு செல்லும் 100 மீற்றர் வீதி நேற்று கிரவல் பரவப்பட்டு அதற்கு மேல் தார் ஊற்றப்பட்டது. அத்தோடு இதுவரை காலமும் அமைக்கப்படாதிருந்த வைத்தியசாலைக்கான பெயர் பலகையும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிகளை அந்தப் பகுதி இராணுவத் தளபதி தலைமையில் இராணுவத்தினர் முன்னின்று மேற் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (10)

## ஆள்கடத்தல்களாலும் இலங்கைக்குச் சிக்கல்

01 இலங்கையில் ஆள்கடத்தல்களும், ஆள்கள் காணாமற் போகும் சம் பவங்களும் அதிகரித்து வருகின்றன.

குறிப்பாக அண்மையில் முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவரான குமார் குணரட்ணம் மற்றும் திமுது ஆட்டிக்கல ஆகியோர் கடத்தப்பட்ட விவகாரம் இலங் கையை மீண்டும் ஐ.நா மனித உரிமைகள் சபையின் முன் பாக இழுத்துச் செல்லும் நிலையை ஏற்படுத்தியுள்ளது- என்றார் அவர். (த)

## அரசியல் தீர்வை விரைவில் எட்ட இந்தியாவின் அழுத்தம் முக்கியம்

01 விவகாரங்கள்குறித்து இதன்போது விரிவாகப் ஆராயப்பட்டுள்ளது.

இந்திய நாடாளுமன்றக் குழுவுடனான சந்திப்புக் குறித்து 'உதய'னிடம் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியதாவது:

இலங்கை அரசுடனான பேச்சுகள் குறித்து நாம் இந்திய நாடாளுமன்றக் குழுவினருக்கு தெளிவுபடுத்தினோம். அத்துடன், இதுவரையில் நடைபெற்று வந்த பேச்சுகள் குறித்தும் விளக்கமளித்தோம்.

இலங்கை அரசு நேர்மையான-நீதியான முறையிலும் பேச்சுக்களில் ஈடுபடவில்லை என்ற விடயத்தையும் இந்தியக் குழுவினரிடம் சுட்டிக்காட்டினோம்.

இலங்கை அரசு சரியான- முறையானதொரு பேச்சுக்கு வரவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அவ்வாறு பேச்சுக்கு வந்து அதில் இணக்கம் ஏற்பட்டால் தெரிவுக்குழு குறித்து பரிசீலிக்கலாம் என்ற கூட்டமைப்பின் நிலைப்பாட்டையும் தெரிவித்தோம்.

வடக்கு,கிழக்கு பிரச்சினைகளையும் இந்தியக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவந்தோம். குறிப்பாக, சம்பூர் பிரச்சினை, முல்லைத்தீவில் அரங்கேற்றப்படும் சிங்களக் குடியேற்றம் ஆகியன பற்றி விரிவாக விளக்கப்பட்டது.

அதுமாத்திரமின்றி, நீண்டகாலமாகச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமைகள் தொடர்பிலும் இந்தியக் குழுவிற்கு நாம் விளக்கமளித்தோம்.

இந்த விடயங்கள் குறித்து இலங்கை ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது இந்தியக் குழுவினர் கலந்துரையாடுவர் என நம்புகின்றோம் - என்றார் சுரேஷ்.

இந்தச் சந்திப்புக் குறித்து கருத்த வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கூறியவை வருமாறு-

போர் முடிவடைந்து மூன்று வருடங்கள் கடந்துள்ள போதிலும் இலங்கை அரசு இன்னும் தீர்வை வழங்குவதற்கு முன்வரவில்லை என தலைவர் சம்பந்தன் இந்தியக் குழுவிடம் எடுத்துரைத்தார்.

அத்துடன், தமிழ் அரசியல் கைதிகள்,காணாமற்போயுள்ளோர் குறித்தும் அவர் இந்திய சர்வகட்சி குழுவின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

வீதி அமைத்துக் கொடுத்தல்,வீதிகளைப் புனரமைத்தல், தகடுகளை வழங்கல் போன்ற உதவிகளை இந்தியா எமக்கு வழங்குகின்றது. ஆனால்''அரசியல் தீர்வு என்றொன்றுதான் எமக்கு முக்கியமானது. அதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற விடயத்தையும் நாம் சுட்டிக்காட்டினோம் .

இலங்கை - இந்திய ஒப்பந்தம்,வடக்கு,கிழக்கு இணைப்பு ஆகிய விடயங்கள் குறித்தும் பேசப்பட்டன -என்றார்.

## தமிழீழ வாக்கெடுப்புக்கு கருணாநிதி வரவேற்பு

01 ஆதரிப்பதாக கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஐக்கிய நாடுகள் அமைப்பினால் நடத்தப்பட்ட இவ்வாறான வாக்கெடுப்பு முறையின் கீழ் சில நாடுகள் அங்கீகாரம் பெற்றுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், ஐ.நா. சபையின் தலையீட்டின் கீழேயே தமிழீழம் அமைப்பதற்கான இந்த வாக்கெடுப்பும் நடத்தப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது தொடர்பான நடவடிக்கைகளில் இந்திய அரசு ஒரு முக்கிய பங்காற்ற முடியும் என்று தெரிவித்துள்ள கருணாநிதி, இதைச் செயல்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு இந்தியா ஆதரவும், அழுத்தமும் தரவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (த)

## இந்தியக் குழுவின் கேள்விகளால் நிலை தடுமாறிய இலங்கை அரசு

01 ளுமன்றக் குழு நேற்று வலியுறுத்திக் கூறியுள்ளது.

அத்துடன், வடமாகாண சபைத் தேர்தலை நடத்தி அங்கு ஜனநாயகத்தை நிலைநாட்டுமாறும் இந்தியக் குழு கூறியது.

ஐக்கிய இலங்கைக்குள் பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டையும் அந்தக் குழு முழுமையாக ஆதரித்தது.

இதேவேளை, இலங்கை அரசியல் தொடர்பில் இந்தியக் குழு தொடர்ச்சியாக பல்வேறு கோணங்களில் கேள்விக்கணைகளைத் தொடுத்தது. அடுத்தடுத்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பதில் இலங்கை அரசியல் பிரமுகர்கள் திக்குமுக்காடிப்போயினர்.

இதற்கிடையே, கொழும்பு வந்துள்ள இந்தியக் குழு நேற்றுக்காலை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

இதன்பின்னர், இந்தியக் குழு இலங்கை நாடாளுமன்றுக்கு சென்றது. அங்கு சென்ற குழுவை சபை முதல்வர் நிமல் சிறிபால டி சில்வா உரிய மரியாதைகளுடன் வரவேற்றார்.

அரசு தரப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் முக்கிய உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயம், நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை விவகாரம் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது, முதற்கட்டமாக, இலங்கை அரசு முன்னெடுக்கும் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெளிவுபடுத்திக் கொண்டிருக்கையில், ''இலங்கை அரசு முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து உங்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் எங்களுக்குப் புள்ளிவிவரங்களுடன் தெளிவுபடுத்திவிட்டார். எனவே, இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை தெளிவுப்படுத்துங்கள்'' என இந்திய குழுவின் தலைவி சுஷ்மா சுவராஜ் அமைச்சரிடம் கூறினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் நிமல், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கிலேயே நாம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்துள்ளோம். இதற்கு கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்குவதில்லை என கூறிக் கொண்டு செல்கையில், இடைநடுவில் குறுக்கிட்ட கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், அரச [illegible] களை புட்டுவைத்தார். இதனால் அரச தரப்பினர் வாயடைத்துப் போயினர்.

''நாங்கள் இலங்கை அரசுடன் 2011 ஆம் ஆண்டு முதல் பேச்சு நடத்துகின்றோம். ஆனால் இதுவரையில் கண்ட பயனேதுமில்லை. இன்னும் இவர்கள் புலிகளைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கின்றனர்.

நாம் எமது தீர்வுத் திட்ட வரைவை அரச தரப்பிடம் கையளித்துள்ளோம். ஆனால் அரசு தமது தீர்வு என்னவென்பது குறித்து இன்னும் தெளிவுப்படுத்தாமல் காலம் கடத்துகின்றது.

இதற்கு ஒத்துழையாத அரசு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை கையாளப் போவது எப்படி என்று எமக்கு சந்தேகமாகவே உள்ளது.

பேச்சில் இணக்கம் அதன்பின்னரே தெரிவுக்குழு விடயம் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக இருக்கிறோம்'' - என்று சம்பந்தன் எம்.பி. இந்தியக் குழுவினருக்கு விரிவான விளக்கமொன்றை அளித்தார்.

சம்பந்தனின் விளக்கமளிப்பையடுத்து கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க, ''அரசு, கூட்டமைப்புடன் நடத்திவரும் பேச்சில் முதலில் ஒரு இணக்கத்தை எட்டவேண்டும். கூட்டமைப்பு இல்லாமல் தெரிவுக்குழுவுக்கு செல்ல முடியாது. கூட்டமைப்பு சென்றால் [illegible]வோம்'' எனத் திட்டவட்டமாக இடித்துரைத்தார்.

''ஐக்கிய இலங்கைக்குள் பேச்சுக்களின் மூலம் தீர்வுக்காணப்பட வேண்மென்ற நிலைப்பாட்டிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது. இதனை அரசு ஏற்க மறுப்பது ஏன்?'' என்று இந்தியக் குழு கேட்டது. இந்தக் கேள்விக்கு அமைச்சர் நிமல் மழுப்பல் போக்கில் பதிலளித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கு இலங்கை அரசால் காலவரையறை ஒன்றை வழங்கமுடியுமா? என இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு ஆறுமாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைத்தால் முடியும் என இலங்கை அமைச்சர் நிமல் பதிலளித்துள்ளார்.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை இலங்கை அரசு முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள் இந்தியக் குழு, தமிழர்களுக்கு இலங்கை அரசு நீதியை வழங்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

13 பிளஸ் குறித்து அரசு பேசுகின்றது. ஆனால் அந்த பிளஸ் என்னவென்று தெரியவில்லை.13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இலங்கை அரசு அமுல்படுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியது.

(த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் இனஅழிப்பு துயர்தோய்ந்த அத்தியாயம்

## நினைவு நிகழ்வுக்கு தமிழர் நடுவம் அழைப்பு

முள்ளிவாய்க்கால் இனப்பேரழிப்பின் மூன்றாம் ஆண்டு கனத்த நினைவு நிகழ்வுக்குத் தமிழர் நடுவம் அழைப்பு விடுத்துள்ளது.

இனஅழிப்புக் கொடுமையின் துயர்தோய்ந்த அத்தியாயமாய் முள்ளிவாய்க்காலில் எம் இனம் பட்ட பேரவலம், கொடுந்துயர், பெருவதை நவீன மனித குலவரலாற்றில் இடம்பெற்றிருக்கின்றன. இந்தப் பேரவலம், மறக்கக்கூடாத மறக்கமுடியாத, தமிழ் இனத்தின் நெஞ்சமதில், ஆழமாகப் பதிந்துவிட்ட நீங்காவடு. மாறா ரணம்.

இந்த நாளை, தமிழர்கள் எல்லோரும், எங்கிருந்தாலும் உணர்வெழுச்சியோடு, கடைப்பிடிக்கவேண்டியது கட்டாயக் கடமையாகின்றது. உயிர் துறந்தவர்களுக்காக நீதி கேட்பதும், உயிர் வாழ்பவர்களுக்காக அவர்களின் சுதந்திர வாழ்வுக்காக போராடுவதும், புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களினதும், உலகத் தமிழர்களினதும் தார்மீகக் கடமையாகும்.

எம்மினம் கொத்துக் கொத்தாய் அழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கொடுமையை, கனத்த உணர்வோடு நினைவுகூரும் வண்ணம், பிரான்ஸில், தமிழர் அமைப்புக்களோடும், பிரான்ஸிய அமைப்புக்களோடும் ஒன்றிணைந்து, தமிழர் நடுவம், இந்த வருடம் நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளது.

நாடுகடந்த தமிழீழ அரசின் பிரான்ஸிற்கான உறுப்பினர்கள், சொலிடாறித்தே தமிழீழம் என்ற பிரான்ஸிய அமைப்பு, பிரான்ஸ் அரசியல் கட்சிகள், பிரான்ஸ் மாணவர் அமைப்புக்கள், அவற்றின் ஒன்றியங்கள், பிரான்ஸ் கலைஞர்கள் என, பல்வேறு அமைப்புக்களும் அமைப்பின் பிரதிநிதிகளும், எமது மக்களுக்கான நீதி கோரும் போராட்டத்தில் அணிவகுக்கின்றனர்.

பிரான்ஸில் இயங்கும் தமிழர் அமைப்புக்களுக்கும், மனித நேய அமைப்புக்களும், இந்தச் சந்தர்ப்பத்தில் நாம், ஒன்றிணைந்து எமது உணர்வுகளை ஒன்றாக வெளிப்படுத்த ஆதரவு நல்கும்படி அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. (ந)

## தமிழீழ தேசியச் சின்னங்களுடன் நெதர்லாந்தில் முத்திரை வெளியீடு



நெதர்லாந்தில் தமிழீழத் தேசியச் சின்னங்களைக் கொண்ட தபால் முத்திரைகள் வெளியிடப்பட்டுள்ளன. நெதர்லாந்தில் நியூவகையன் நகரில் நடைபெற்ற பெண்கள் தினத்தன்று, நியூகின் கட்சித் தலைவரும் மற்றும் பெண்கள் அமைப்பு பொறுப்பாளரும், தமிழீழ தேசியச் சின்னங்களைக் கொண்ட தபால் முத்திரைகளை வெளியிட்டு வைத்தனர். இந்த முத்திரை வெளியீட்டை தமிழர் நடுவம் நெதர் லாந்துக் கிளை ஏற்பாடு செய்திருந்தமை இங்கு குறிப் பிடத்தக்கது.

## ஆயுள்வேத வைத்திய முகாம்

யாழ்ப்பாணம்,ஏப்.18

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் இலவச ஆயுள்வேத மருத்துவ முகாம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை ஊர்காவற்றுறை பிரதேச சபை நாரந்தனை உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி இலவச ஆயுள்வேத மருத்துவ முகாமில் பிரதேச மக்கள் பங்குகொண்டு பயன்பெறுமாறு ஊர்காவற்றுறை பிரதேச செயலர் கேட்டுக் கொண்டுள்ளார். (வ-13)

# ஈழம் குறித்து வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்

## கோருகிறது ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு

ஈழக்கோரிக்கை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று 'ஒபாமாவுக்கான தமிழர்' என்ற அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் 31 ஆயிரம் போலி கையொப்பங்கள் அடங்கிய மனு ஒன்றை அந்த அமைப்பு, அமெரிக்கத் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அந்தப் பத்திரிகையில் வெளிவந்த செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு பிரதிநிதிகள் இரகசியமான முறையில் துணை ராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக்கை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர். இந்த மனு அமெரிக்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரனுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இந்த மனுவில் துருக்கி பிரிவினை வாதிகளும், தமிழர் அல்லாதோரும் கையொப்பமிட்டுள்ளனர். இலங்கை இராணுவம் 70ஆயிரம் தமிழ் பொது மக்களை கொலை செய்ததாகக் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது. சூடானை பிளவுபடுத்தியது போன்றே இலங்கையில் ஈழ இராச்சியம் அமைக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அமெரிக்காவிடம் ஒபாமாவுக்கான தமிழர்கள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது - என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# குவைத் வீதியில் இலங்கையரின் சடலம்

குவைத்தின் - பஹஹீல் நகரில் வீதி ஓரத்தில் இருந்து இலங்கையர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக குவைத் திலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பஹஹீல் நகரில் வீதி ஓரத்தில் நபரொருவர் மயக்கமுற்று விழுந்து கிடப்பதாகக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து அதிகாரிகள் அந்த இடத்துக்கு மருத்துவ முதலுதவிக் குழுவை அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தக்குழு, உடன் அந்த இடத்துக்குச் சென்று பார்த்த போது குறித்த இலங்கையர் உயிரிழந்த நிலையில் கிடந்துள்ளார்.

உயிரிழந்தவர் இலங்கையர் என்று உறுதிப்படுத்தப்பட்ட போதும் அவர் யார் என்பது குறித்து இது வரை தகவல்கள் வெளியாகவில்லை. (வ)

# மகளிர் தின நிகழ்வுகளில் பரிசில் பெற்ற பெண்மணிகள்

தென்மராட்சி, ஏப் 18

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவின் சர்வதேச மகளிர் தின நிகழ்வு அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நாட்டில் அர்ப்பணிப்புடன் பணியாற்றியமைக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இவ்வருடத்திற்குரிய சிறந்த பெண்மணியாகத் தெரிவு செய்யப்பட்ட எட்டுப் பெண்களில் ஒருவரான யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதேச மக்கள் சார்பில் பொன்னாடை போர்த்தியும் நினைவுப் பரிசில் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச பிரிவின் சிறந்த மகளிர் விவகார அமைப்புக்களிடையே நடத்திய பிரதேச மட்டப் போட்டியில் சாவகச்சேரி மகளிர் விவகார அமைப்பு முதலிடத்தையும் மட்டுவில் மத்தி, கைதடி வடக்கு ஆகியன முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களையும் பெற்றன.

பிரதேச மகளிர் விவகார அமைப்புக்களில் இருந்து சிறந்த பெண்மணிகளைத் தெரிவு செய்யும் போட்டியில் சாவகச்சேரி மகளிர் அமைப்பைச் சேர்ந்த திருமதி ம.கீர்த்திநாதன், கைதடி மேற்கைச் சேர்ந்த திருமதி சு.தனபாலசிங்கம் கைதடி மத்தியைச் சேர்ந்த திருமதி தெ.சிவராமலிங்கம் ஆகியோர் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளனர்.சிறந்த பிரதேசப் பெண்கள் அதிகார சபைக்கான மாவட்ட ரீதியிலான போட்டியில் தென்மராட்சி பிரதேசப் பெண்கள் அதிகார சபை 2ஆம் இடத்தையும் பெற்றது.

அத்துடன் மகளிர் விவகார அமைச்சால் நடத்தப்பட்ட இவ்வருடத்திற்குரிய சிறந்த வீட்டுத் தோட்டப் போட்டியில் முதலிடத்தை செல்வி சற்குணராசா சிவப்பிரியாவும் இரண்டாம் இடத்தை திருமதி திருச்சிற்றம்பலம் விவேகினியும் மூன்றாமிடத்தை திருமதி சிவலிங்கம் கௌரிதேவியும் பெற்றுள்ளனர். இவர்களுக்கான பரிசில்களும் இந்த நிகழ்வில் வழங்கப் பட்டன. (வ-9)

> சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச பிரிவின் சிறந்த மகளிர் விவகார அமைப்புக் களிடையே நடத்திய பிரதேச மட்டப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

# திருட்டுக் குற்றவாளிக்கு ஒருவருட கடூழிய சிறை

யாழ்ப்பாணம், ஏப். 18

நல்லூர், செட்டித்தெரு வீதியில் பணம் உட்பட ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிய குற்றவாளிக்கு நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றம் ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை வித்தது.

2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தத் திருட்டில் சந்தேகத்தின் பேரில் கோண்டாவில், புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த சிவலோகநாதன் செந்தூரன் (வயது -35) என்பவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

யாழ். நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்கப் பட்ட போது தலைமறைவாகிவிட்டார்.

அவருக்கு எதிரான வழக்கு நிலுவையில் இருந்து வந்தது. இந்த நிலையில் சந்தேக நபருக்கு எதிராக மன்றினால் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு, கடந்த நவம்பர் மாதம் சந்தேகநபர் மீண்டும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்து வந்தார்.

இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நேற்றுமுன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போதே சந்தேக நபர் குற்றவாளியாக இனங் காணப்பட்டார்.

# கொரிய பொறியியலாளரிடம் ரூ.5 லட்சம் 50 ஆயிரம் சூறை

கொரியாவைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவரை மது அருந்தச் செய்துவிட்டு அவரின் கடன் அட்டை மூலம் 5 லட்சத்து 50,000 ரூபா பணத்தை மீளப்பெற்றார் என்று குற்றம் சுமத்தப்பட்ட இலங்கையர் ஒருவரை இந்தமாதம் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு, கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கொழும்பு துறைமுகத்தில் பணியாற்றும் மேற்படி பொறியியலாளர் இது தொடர்பாக கொழும்பு குற்றப் புலனாய்வுப் பரிவில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டாளர் மது போதையில் இருந்த நிலையில் மேற் குறிப்பிட்ட சந்தேக நபர் ஒரேநாளில் இந்தப் பணத்தை வங்கியிலிருந்து பெற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

வங்கியின் தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திர அறையிலுள்ள கமராவில் பதிவாகியிருந்த வீடியோவை பரிசீலித்த பின்னரே மேற்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பான விசாரணைகள் முடிவடையவில்லை எனவும் சந்தேக நபரை எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கோரிக்கை விடுத்தனர்.

நீதவான் கனிஷ்க விஜேரட்ன இதற்கு அனுமதியளித்தார்.

# சாவகச்சேரி வைத்தியசாலையில் மீண்டும் எக்ஸ் – ரே பிரிவு

தென்மராட்சி, ஏப்.18

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் எக்ஸ்-ரே பிரிவு மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. பழுதடைந்த எக்ஸ்-ரே இயந்திரம் அதன் நிறுவனத்தால் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருத்திய பின்னர் கடந்த வாரம் கொண்டுவரப்பட்டு பொருத்தப்பட்டு செயற்படத் தொடங்கியுள்ளது.

எக்ஸ்-ரே இயந்திரம் பழுதடைந்திருந்த வேளையில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் முயற்சியால் மந்திகை ஆதார வைத்தியசாலையில் மேலதிகமாக இருந்த எக்ஸ்-ரே இயந்திரம் சாவகச்சேரி வைத்தியசாலையில் பொருத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. பழுதடைந்த எக்ஸ்-ரே இயந்திரம் மீண்டும் இங்கு பொருத்தப்பட்டதையடுத்து இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்த எக்ஸ்-ரே இயந்திரம் நேற்று மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. (வ-9)

# ஆயுள்வேத வைத்தியர்களின் வாகனத்துக்கு விசேட சின்னம்

## தேசிய வைத்தியத் துறை அமைச்சு நடவடிக்கை

ஆயுள்வேத வைத்தியர்களின் உத்தியோகபூர்வ வாகனங்களை இனம்கண்டு கொள்வது தொடர்பாக பச்சை நிறத்திலான சிலுவை அடையாளத்தை அறிமுகப்படுத்தத் தேசிய வைத்தியத் துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான கருத்தரங்கு ஒன்று தேசிய வைத்தியத்துறை அமைச்சர் சாலிந்த திஸாநாயக்க மற்றும் பிரதியமைச்சர் பண்டு பண்டாரநாயக்க தலைமையில் தேசிய வைத்தியத்துறை அமைச்சில் 16ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

மேற்படி உத்தியோகபூர்வ சின்னம் ஆயுள்வேத வைத்திய சபையினால் விநியோகிக்கப்படவுள்ளதோடு ஆயுள்வேத வைத்திய சபையின் பதிவு இலக்கம் மற்றும் தொடர் இலக்கம் என்பனவும் அதில் உள்ளடக்கப் படவுள்ளன.

இது சம்பந்தமான ஏதெனுமொரு சிக்கலோ அல்லது பிரச்சினைக்குரிய நிலைப்பாடொன்றோ ஏற்படுமானால் அந்தத் தகவல்களை ஆயுள்வேத வைத்திய சாலையிடம் இருந்து பெற்றுக் கொள்ளத்தக்க வாய்ப்பும் உள்ளது.

தேசிய வைத்தியத்துறை அமைச்சர் சாலிந்த திஸாநாயக்காவின் ஏற்பாட்டுக்கு அமைய இந்த நடைமுறை மேற் கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பிரச்சினை தொடர்பில் நாளை மறுதினம் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.18

ஆசிரியர் இடமாற்றம் உள்ளிட்ட வட பகுதி ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நோக்கிலான கலந்துரையாடல் கல்வி அமைச்சின் வடமாகாண செயலாளர் எஸ்.சத்தியசீலனுக்கும் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலி னுக்கும் இடையே இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகத்தில் நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை இந்தக் கலந்துரை யாடல் இடம்பெறவுள்ளது.

வடமாகாணக் கல்விப் புலத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பாக இந்தக் கலந்துரையாட லின்போது முக்கிய கவனம் செலுத்தப்படும் என்றார் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர்.

இதேவேளை, அன்றைய தினம் வட மாகாணத்திலுள்ள அதிபர், ஆசிரியர்களைச் சந்திக்கும் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர், அவர்களின் குறை நிறைகளை யும் அறிந்துகொள்ளவுள்ளார். (3)

# அச்சுறுத்தியோருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஏப். 18

துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்திய குற்றச்சாட்டில் வர்த் தகர்கள் இருவர் நேற்றுப் பொலி ஸாரால் கைது செய் யப்பட்டனர். அவர் களை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்க மறி யலில் வைக்கும்படி யாழ். நீதிமன்றம் உத்தர விட்டது.

கடந்த ஒக்ரோ பர் மாதம் 23 ஆம் திகதி பலாலி வீதி, கந் தர்மடம் சந்தியில் வைத்து முத்தையா பிள்ளை தம்பிராசா என்பவரை அச்சு றுத்தியதாகக் குறித் தநபர் பொலிஸில் முறைப்பாடு செய் திருந்தார். அரசடி கந்தர்மடத்தைச் சேர்ந்த பாலசிங்கம் சிவசுப்பிரமணியம், பாலசிங்கம் சிவ ஞானம் ஆகிய இரு வருமே விளக்கமறி யலில் வைக்கப்பட் டுள்ளனர்.

மேலும் மூன்று பேர் தேடப்பட்டு வருவதாகவும் தெரி விக்கப்பட்டது. (10-4)

## பஸ் தீக்கிரை

கண்டி, மதுரட் டவில் தனியார் போக்குவரத்து சேவை அமைச்சர் சி.பி.ரட்நாயக்கவின் மைத்துனருக்கு சொந்தமான பஸ் ஒன்று தீக்கிரையாக் கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர் பில் பொலிஸில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பகை மையே இச்சம்ப வத்திற்கு காரண மாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

கடந்த மார்ச் மாதம் வட மத்திய மாகாண சபை தவி சாளரும் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க வின் சகோதரர் சாலிய திஸாநாயக்க வுக்கு சொந்தமான இரு பஸ்கள் இனந் தெரியாத குழு வொன்றினால் தீக்கி ரையாக்கப்பட்டமை குறிப்படத்தக்கது.


## தவறிவிட்டது

RW-1889 எனும் எனும் இலக்கமுடைய உழவு இயந்திரத்தின் இலக்கத்தகடு நுணாவிலுக்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்புகளுக்கு :-0779793362


## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 09 | 12 |
| ★ | ★ |
| 12 | 05 |
| ★ | ★ |



அமரர் திரு. நடராஜா வில்வா (S.L.P.S.)

(முன்னாள் பிரதி அதிபர், பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரி)

திதி: திரயோதசி

நிலையான இவ் உலகில்
நிலையில்லாதது மனித வாழ்வு!
நிலையில்லாத வாழ்க்கையில்
நிலையான புகழைத் தேடி
நிம்மதியாக உறங்கி விட்டீர்களோ?

'அக்கா அகம்',
இணுவில் மேற்கு. மனைவி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

பிள்ளையினார் தங்கம்

பிறப்பு
31★01★1930

இறப்பு
19★03★2012

புங்கைமாநகர் பெற்ற புன்னகையரசி
புவி போற்ற வாழ வைத்த எங்கள் குலவிளக்கு
கண்ணும் இமையுமாய் எமை காத்து நின்று
எண்ணும் எழுத்தும் எமக்களித்து நின்றாய்
எண்மரை பெற்று பெரு எழுச்சிகண்டாய்
ஏங்கித் தவிக்க ஏன் சென்றாய் தாயே
எழுவரை மருகராய் கண்டு மகிழ்ச்சி கண்டாய்
பத்தொன்பது பேரரும் பரிதவித்து நிற்க
பரலோகம் சென்ற மாயம் தான் என்ன
இருவரை பூட்டராய் இவ்வுலகில் கண்டிட
இறைவன் தாள் சேர நினைத்ததுதான் என்ன
ஆற முடியவில்லைத் தாயே அலறுகிறோம்
ஆண்டவன் தாள் சேர பிரார்த்திப்போம்

சுவிற்சர்லாந்தில் மரணமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வை எமது சொந்த மண்ணான புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு அருகில் உள்ள எமது இல்லத்தில் இன்று (18.04.2012) புதன்கிழமை நடத்துகின்றோம்.

உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரும் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

10ஆம் வட்டாரம், புங்குடுதீவு. குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சரோஜினிதேவி ஆறுமுகராசா (கோயில் மாமி)



கொக்குவில், நந்தாவிலைப் பிறப்பிட மாகவும், பிரம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினிதேவி ஆறு முகராசா (கோயில் மாமி) நேற்று (17.04.2012) செவ்வாய்க்கிழமை அதிகாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா ஆறு முகராசாவின் அன்புத் துணைவியும், காலஞ் சென்ற நொத்தாரிசு ஆறுமுகம் - அன்னலட்சுமி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற ரூபரஞ்சினியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுப்பையா - அன்னம்மா தம்பதியரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2012) புதன் கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரம்படி லேன்,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

### இராமநாதன் அரசரட்ணம்

(ஓய்வுபெற்ற எழுது வினைஞர், யா/கொக்குவில் இந்துக்கல்லூரி)



மலேசியா, சிறாம்பானையைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் அரசரட்ணம் 16.04.2012 திங்கட்கிழமை சிவபத மடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன்-சிவ காமிப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான நடராசா-இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் பராலக்சுமியின் அன்புக் கணவரும், அமிர்தவர்சினி (ஆசிரியை, முத்துஐயன் கட்டு வலது கரை அ.த.க பாடசாலை), அர்ச்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்ஷனின் (நில அளவையாளர், கொழும்பு) அன்பு மாமனும் சீதாலட்சுமியின் அன்புச் சகோதரரும் (ஓய்வு பெற்ற ஆசிரியை, யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)காலஞ்சென்ற செல்வவிநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) மற்றும் பரமேஸ்வரி, பராசக்தி, பத்மநாவதி, காலஞ்சென்ற பஞ்சரத்தினம் ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.04.2012) வியாழக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கொக்குவில் மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகுருஒழுங்கை,
கொக்குவில் மேற்கு.

தகவல்:-
மனைவி,பிள்ளைகள், மருமகன்.

## மரண அறிவித்தல்

### முடியப்பர் றோசாறியோ

(பிலிப்பினேஸ்)



17, 1ஆம் குறுக்குத்தெரு, குருநகர், யாழ்ப்பாணம் எனும் முகவரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முடியப்பர் றோசாறியோ நேற்று முன்தினம் (16.04.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17, 1ஆம் குறுக்குத்தெரு,
குருநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.


## தேவை

மில் வேலையில் அனுபவம் உள்ளவரும் பழக விரும்புப வரும் தேவை.

தொடர்பு: பிருந்தா மில்ஸ், இல. 18, றக்கா றோட், யாழ்ப்பாணம். தொ.பே. 0779912304.

## வீடு விற்பனைக்கு

கோயில் வீதி ஒழுங்கையில் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு - 0770553402

## THE ROYAL COLLEGE OF JAFFNA

O/L,A/L, B.A மாணவர்களுக்கான ஆங்கில இலக்கண வகுப்புகள். தனித் தனிப்பிரிவுகள். BY ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, கீரிமலை வீதி, சண்டிலிப்பாய், பிளாக் வீதி, சங்கானை.

(15821) (6-9-12) Tel: 077- 6751649

## கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடு களுக்கே வந்து உரிய முறையில் திருத் தித் தருகிறோம்.

அழையுங்கள்:0779086737 Gunaa Best Pc

(15854)(6-9-12)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சிறுபான்மையினரின் நிலப்பறிப்பு கிழக்கில் அசுர வேகத்தில்...!

கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்தில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கென, முன்னர் வழங்கப்பட்ட நெற்காணிகளில் பெரும்பகுதி இப்போது சிங்கள மக்களுக்குச் சொந்தமாகி உள்ளது. அதுமட்டுமன்றி, அப்பகுதியில் தமிழ் மக்களின் பாவனைக்கு அமைக்கப்பட்ட எண்பது வீடுகளில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி -

1958 ஆம் ஆண்டில் நடைபெற்ற இனக்கலவரத்துக்குச் சில காலத்துக்கு முன்னர், மூதூர் பிரதேச செயலர் பிரிவில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு 1,500 ஏக்கர் நெற்செய்கைக் காணி வழங்கப்பட்டு, அரச விதிமுறைப் பிரகாரம் காணி அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டிருந்தன.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் அமைந்த பகுதியில், சுமார் 300 ஏக்கரை ஊர்காவல் படையினர் 2007 ஆம் ஆண்டில் பலவந்தமாகக் கைப்பற்றினர். அதற்கு அந்தப் பகுதி பௌத்த மதகுரு ஒருவரும் உடந்தையாக இருந்தார் என்பது இப்போது பரகசியம்.

ஏற்கனவே கபளீகரம் செய்த நெற்காணிகளுக்கு அருகில் அமைந்துள்ள தமிழ் மக்களுக்குரிய காணிகளில், அவர்கள் நெற்செய்கையில் ஈடுபட முடியாதவாறு கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தடுக்கப்பட்டு வருகின்றனர். உரிய அதிகாரிகளுக்கு முறையிட்டும் இதுவரை எந்தப் பயனும் இல்லை. அதற்கும் மேலாக சிறுபான்மையினர் இதுவிடயத்தில் அச்சுறுத்தப்பட்டும் வருகிறார்கள்.

தமிழ் மக்களுக்கு, தமிழ் விவசாயிகளுக்கு நேர்ந்த இந்த நிர்க்கதி நிலையை நீக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.யோகேஸ்வரன் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை -

திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமன்றி மட்டக்களப்பு மாவட்டத்திலும், தமிழ், முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான வளம் கொழிக்கும் பிரதேசங்களில் உள்ள காணிகள், சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு, கிழக்கு மாகாண சபையும் அனுசரணையாக உள்ளது; ஒத்துழைக்கிறது - என்று கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் இரா.துரைரத்தினம் குற்றஞ்சாட்டி உள்ளார்; அது குறித்து கடுமையாகச் சாடியுமுள்ளார்.

காணி வழங்குவதற்கான தனது சொந்த நிர்வாக முறைகளையோ, சட்டதிட்டங்களையோ மதித்துப் பொருட்படுத்தாமல், சிறுபான்மையினருக்குச் சொந்தமான காணிகளை மத்திய அரசு பெரும்பான்மையினருக்கு அசுர வேகத்தில் பகிர்ந்தளித்து வருவதாகவும் கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதேசங்களான கோரளைப்பற்று வடக்குப் பிரதேச செயலகம், செங்கலடிப் பிரதேச செயலகம், கோரளைப்பற்றுத் தெற்குப் பிரதேசம், பட்டிப்பளை ஆகிய பகுதிகளில், அமைந்துள்ள பெரும் நிலப்பரப்பு, மத்திய அரசாங்கத்தினால் கையேற்கப்பட்டு அவற்றைப் பெரும்பான்மையின மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் ஏற்பாடுகள் தீவிரமாகி வருவதாகவும் இரா. துரைரத்தினம் புட்டுவைத்திருக்கிறார்.

இலங்கையின் காணி அபிவிருத்தி நடவடிக்கையைச் சற்றுப் பின்நோக்கிப் பார்த்தால், தமிழர்களின் பூர்வீக பிரதேசங்களில் பெரும்பான்மை இனத்தவரை அரச செலவில் குடியேற்றுவதே அதன் கருவியல் நோக்கமாகும்.

1949 ஆம் ஆண்டில் - இலங்கை பிரிட்டிஷாரிடம் சுதந்திரம் பெற்று ஒருவருட காலத்தில் - ஆரம்பிக்கப்பட்ட கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் பிரதான நோக்கம், அபிவிருத்தி என்ற வர்ண முத்திரையுடன், அந்த அகன்று விரிந்த, நீண்ட நிலப்பரப்பில் பெரும்பான்மையினரைக் குடியேற்றுவதே ஆகும்.

இதனைத் தீர்க்கதரிசனத்துடன் கூறியவர் தந்தை செல்வா என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. பல்தேசிய இனங்கள் வாழும் ஒரு நாட்டில், சிறுபான்மை இனம் தொடர்ந்து வாழ்வதற்கு எண்ணிக்கை ரீதியான பலம் குன்றாதிருப்பதும், பூர்வீக வாழ்விடம் பாதுகாக்கப்படுதலும் மிகப் பிரதானமானவை என்பதனை, அவர் 1951 ஆம் ஆண்டிலேயே திருமலை மாநாட்டில் பகிரங்கமாக எடுத்துரைத்திருந்தார்.

கிழக்கில் தமிழர்களின் வாழ்விடங்கள், 1948 தொடக்கம் 1981 ஆம் ஆண்டு வரை திருமலையின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 60 சதவீதமானவை பெரும்பான்மையின மக்களின் வாழ்விடங்களாக மாற்றப்பட்டன; கண்ணுக்குத் தெரியாத விதத்தில் கபளீகரம் செய்யப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் அது 78.3 சதவீதமாக உயர்ந்தது. இப்போதைய புள்ளிவிவரம் மேலும் உச்சத்தை நோக்கியதாகவே இருக்கும் என்பது நிச்சயம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தையும், திருகோணமலை மாவட்டத்தில் அல்லை-கந்தளாய் அபிவிருத்தித் திட்டத்தையும் ஆரம்பித்து ருசி கண்ட, வெற்றி கொண்ட நிலையில் மீண்டும் இரண்டு மாவட்டங்களிலும் சிறுபான்மையினரின் பூர்வீக நிலப்பறிப்புகள் இப்போது திட்டமிட்ட முறையில், பெரியளவில் ஆரம்பிக்கப்படுவதற்கான ஏற்பாடுகளையே மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாகாண சபை உறுப்பினரும் தொட்டுக்காட்டி இருக்கின்றனர்; புட்டுக்காட்டுகின்றனர்.

அபிவிருத்தி என்ற பெயரில், போர்வையில் தமிழ்ப் பிரதேசங்களில், குறிப்பாகக் கிழக்கில் கொழும்பு அரசுகள் பெரும்பான்மை இன மக்களைக் குடியேற்றி, குடியமர்த்தி ருசி கண்டுவிட்டன; வெற்றி கண்டுவிட்டன. அதற்கும் மேலதிகமாக சிங்கள மக்களைக் குடியேற்றி தமிழர்கள் ஒட்டுக்குந்தில் இருக்கும் நிலையைத் தோற்றுவிக்க, சட்ட, நிர்வாக சம்பிரதாயங்களைத் தமது கைகளில் எடுத்துள்ளனர்; அதன்பொருட்டு உறுதியும் பூண்டுள்ளனர்.

கிழக்கைத் தமிழர்களிடம் இருந்து கையகப்படுத்தி உருசி கண்ட அரசின் கண், வடக்கின் மீதும் அகன்று விழுந்திருக்கிறது. அதன் நான்கு மாவட்டங்களிலும் பல்வேறு வகை உத்திகளுடன் சமிக்ஞை காட்டத் தொடங்கிவிட்டன.

மாகாண சபைகளுக்கு காணி அதிகாரங்களை வழங்க முடியாது, அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நாம் சட்டை செய்ய மாட்டோம் என்று இன்றைய அரசு அபசுரம் மீட்பதன் சூட்சுமம் இப்போது புரிகிறதல்லவா?

திட்டமிட்ட இந்தச் சதியை கைவிடக் கோரும், நிறுத்துமாறு வற்புறுத்தும் பலம், இந்தியா என்ன, சர்வதேசத்திடம் தானும் இல்லை என்பதே உண்மையிலும் உண்மை.

# சுற்றுலாப் பயணிகளால் அசிங்கமாகும் முற்றவெளி

### யாழ்.மாநகரசபையும் அசமந்தம்

யாழ்ப்பாணம்,ஏப்.18

தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகளால் யாழ்.முற்றவெளிப் பகுதி அசிங்கப்படுத்தப்படுகின்றமை தொடர்பில் யாழ்.மாநகர சபை இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது பாடசாலை விடுமுறை காலமாக உள்ளமையால் தென்பகுதியில் இருந்து பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் பஸ்களில் யாழ்ப்பாணத்தைப் பார்வையிடுவதற்காக வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களையும் சுற்றிப் பார்வையிடும் அவர்கள் இரவுவேளைகளில் தங்குவதற்கு யாழ்.முற்றவெளிப் பகுதி மற்றும் துரையப்பா விளையாட்டரங்கு, யாழ். முனீஸ்வரன் கோயிலை அண்டிய பகுதிகளைப் பயன்படுத்துகின்றனர்.

இதன்போது அவர்களால் பயன்படுத்தப்படும் பொலித்தீன் பைகள், கடதாசிகள் என்பன அந் தந்த இடங்களிலேயே கண்டபடி வீசப்படுகின்றன. அடுத்தநாள் காலையில் பார்க்கும்போது அந்தப் பகுதிகள் கழிவுப் பொருள்களால் நிரம்பிக் காணப்படுகின்றன. இவற்றை உரியவகையில் மாநகரசபைத் தொழிலாளர்களும் அகற்றுவதில்லை. இதனால் அந்தப் பகுதிகள் அசிங்கப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

இரவில் தங்கும் சுற்றுலாப் பயணிகள் இந்தப் பகுதிகளில் சலம், மலம் கழிப்பதிலும் ஈடுபடுகின்றனர். இதன் காரணமாக அந்த இடங்களில் சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன.

எனினும் இந்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு யாழ். மாநகர சபை இதுவரை ஏற்பாடுகள் எதனையும் மேற்கொள்ளாமை குறித்து விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்.நகரின் முக்கிய பகுதிகளாக உள்ள இந்த இடங்களைச் சுத்த மாக வைத்திருக்க வேண்டிய மாநகர சபை இதில் சற்றும் அக்கறை காட்டாமல் இருப்பது வேதனையளிப்பதாகவும் உடனடியாக இந்தப் பகுதியில் சுகாதாரம் பேணுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு பொதுமக்களைக் கவரும் இடங்களாக அவற்றை மாற்ற வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-17)

## அதிவேக வீதியில் ஒரே நாளில் 51 லட்சம் ரூபா வருமானம்

கொழும்பு,ஏப்.18

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை மாத்திரம் 51 லட்சம் ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளதாக துறைமுகங்கள் மற்றும் பெருந் தெருக்கள் பிரதி அமைச்சர் நிர்மல் கொத்தலாவல தெரிவித்தார்.

இது, அதிவேக நெடுஞ்சாலை திறந்துவிடப்பட்டதன் பின்னர் ஒரு நாளில் பெறப்பட்டுள்ள அதிகூடிய வருமானம் எனவும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

கடந்த 12 ஆம் திகதி 17 லட்சம் ரூபாவும், 13 ஆம் திகதி 34 லட்சம் ரூபாவும் அதிவேக நெடுஞ்சாலையில் வருமானமாகக் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

புத்தாண்டு தினங்களில் வாகனப் போக்குவரத்துக்கு அதிவேக நெடுஞ்சாலை அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளமையே இந்த வருமான அதிகரிப்புக்குக் காரணம் எனவும் பிரதி அமைச்சர் கொத்தலாவல குறிப்பிட்டார். (த-22)

### ஓய்வூதியம் பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி, ஏப்.18

யாழ்.மாவட்டத்தில் விவசாய ஓய்வூதியம் பெற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று அனுப்புமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார்.

தென்மராட்சி பிரதேசத்தில் ஏற்கனவே விவசாய ஓய்வூதியம் பெறுபவர்களும் விவசாய ஓய்வூதியம் பெற விரும்புபவர்களும் பிரதேச செயலகத்திட்டமிடல் பிரிவில் உரிய படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (த-9)

### தனியார் பஸ் உரிமையாளர் சந்திப்பில்

# இரு தரப்பினரும் காரசாரம் இறுதி முடிவு எட்டப்படவில்லை

யாழ்ப்பாணம், ஏப்.18

வடமாகாண தனியார் பஸ் உரிமையாளர் ஒன்றியத்துக்கும் கிளிநொச்சி மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்துக்கும் இடையில் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்று இறுதி முடிவு எட்டப்படாமல் கூட்டம் முடிவடைந்தது.

யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் வடமாகாண தனியார் பஸ் உரிமையாளர் ஒன்றியத்தின் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வெஸ்திரி அலென்ரின் ஆகியோர் கலந்து கொண்டனர். தனியார் பஸ் உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கே கூட்டம் கூட்டப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண தனியார் பஸ் உரிமையாளர் ஒன்றியத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில் அவர் கூறியதாவது:-

இதுவரை காலமும் வடமாகாணத்தின் 5 மாவட்டங்களையும் உள்ளடக்கி எமது ஒன்றியம் செயற்பட்டது. தற்போது கிளிநொச்சி மாவட்டச் சங்கம் தனித்துச் செயற்படுகின்றது. அதேபோன்று வடமராட்சிச் சங்கமும் தனித்து இயங்குகின்றது.

சங்கங்களுக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து ஏனைய மாவட்டங்களுக்குத் (வடமாகாணம் தவிர்ந்த) செல்வதற்கான வழி அனுமதிப் பத்திரம் தரப்படவில்லை.

ஆனால் எங்கிருந்தெல்லாம் பெயர் தெரியாத இடங்களிலிருந்தும் யாழ்ப்பாணத்துக்கு பஸ்கள் வருகின்றன. கொழும்புக்கான வழி அனுமதிப் பத்திரமும் யாழ்ப்பாணத்தவர்களுக்கு குறைவாகவே வழங்கப்படுகின்றது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் அளவுக்கு அதிகமாக தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு வழி அனுமதிப் பத்திரம் வழங்கியுள்ளதால் ஆனையிறவில் 3 நிமிடங்களுக்கு ஒரு தனியார் பஸ் என்ற அடிப்படையில் கடக்கின்றது.- என்றார்.

இதன் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கருத்துத் தெரிவித்தார். அவர் கூறியதாவது:-

போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுப் பின்தள்ளப்பட்ட பிரதேசம் எமது பிரதேசம். இங்கு பெரும்பாலானோர் தனியார் பஸ்கள் எடுத்துள்ளனர். இதனால் ஒருவருக்கு மாதாந்தம் 10 ஓட்டமே வருகின்றது.

முல்லைத்தீவு மக்கள் இடம்பெயர்ந்து பெருமளவில் வவுனியாவில் வசிப்பதால், முல்லைத்தீவிலிருந்து வவுனியாவுக்கான பஸ் சேவைக்கு அதிகளவான மக்கள் வருகின்றனர்.

இதற்கு வவுனியாவிலிருந்து வவுனியா மாவட்ட செயலகத்தால் விநியோகிக்கப்பட்ட வழி அனுமதிப் பத்திரத்துடன் அதிகமான பஸ்கள் இங்கிருந்து முல்லைத்தீவுக்கு வருகின்றன. இதனால் நாம் பெரியளவில் பின்னடைவை எதிர்நோக்குகின்றோம். அத்துடன் வழி அனுமதிப்பத்திரம் இல்லாத பஸ்களும் சேவையில் ஈடுபடுகின்றன.

ஏனைய மாவட்டங்களில் 3 ஆயிரம் ரூபாவுடன் வருடாந்த வழி அனுமதிப் பத்திரத்தை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வழங்குகின்ற போதும் எம்மிடம் வழி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு 2 லட்சம் வரையில் கேட்கின்றனர். இது எந்த வகையில் நியாயம் என்றார்.

இதன் பின்னர் கிளிநொச்சி சங்கத்துக்கும் வடமாகாண ஒன்றியத்துக்குமிடையிலான பிரச்சினை ஆராயப்பட்டது. இரு தரப்பினரும் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களை ஒருவர் மீது ஒருவர் சுமத்தி வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

ஒன்றியத்தில் இணைந்தால் மாத்திரமே கிளிநொச்சி சங்கத்துக்கு நண்பகல் 12 மணிக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து பஸ் எடுப்பதற்கான அனுமதி தரப்படும் என்று வடமாகாண ஒன்றியத்தினர் கூற, வடமாகாண ஒன்றியம் பாரபட்சமின்றி செயற்பட வேண்டும் என்று கிளிநொச்சி சங்கமும் விடாப்பிடியாக நின்றது.

இறுதியில் எதிர்வரும் 29 ஆம் திகதி வடமாகாண சகல அரச அதிபர்களும் ஒன்று கூடி மீண்டும் கலந்துரையாடல் நடத்தி இறுதித் தீர்மானம் எடுப்பது என்று அமைச்சர் தெரிவித்தார். (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்தை கிழக்கில் தொடரும் இராணுவப் பதிவு கெடுபிடிகள்

## பிரதேச மக்கள் சிரமம், அசௌகரியம்

முல்லைத்தீவு,ஏப்.18

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் தொடர்ந்தும் இராணுவ பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் இந்தப் பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கிலுள்ள பாண்டியன் குளம், நட்டாங்கண்டல், மூன்று முறிப்பு, சிறாட்டி குளம், பாலிநகர் ஆகிய பகுதிகளின் நுழைவுப் பாதைகளில் காவலரண் அமைத்து நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் பதிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

**வீதியால் பயணிக்கும் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றையும் இந்த வீதிகளினூடாக பயணிக்கும் மக்களையும் பதிவுகளுக்கு உட்படுத்துவதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.**

வீதியால் பயணிக்கும் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றையும் இந்த வீதிகளினூடாக பயணிக்கும் மக்களையும் பதிவுகளுக்கு உட்படுத்துவதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் முடிவுற்றுத் தற்போது இராணுவமும் பொது மக்களும் பின்னிப் பிணைந்து ஒற்றுமையாக இருக்கின்றனர் என்பதைக் காட்டும் முயற்சியில் இராணுவத்தினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

எடுத்துக்காட்டாக புது வருடத்தையொட்டி விளையாட்டுப் போட்டிகளையும், இனங்களுக்கிடையே கலாசார நிகழ்வுகளையும் நடத்துவதாக வெளியுலகத்துக்குக் காட்டுகின்ற இராணுவத்தினர், புதுவருடதினத்தன்று கூடத் தமது பணிகளைச் சரியான முறையில் மேற்கொள்ள அனுமதிக்கவில்லையென மக்கள் கூறுகின்றனர்.

வருடப்பிறப்பின் போது ஆலயங்களுக்குச் செல்வதற்குக் கூட இராணுவ பதிவுகளை மேற்கொண்ட பின்னர் தான் அனுமதிக்கப்பட்டோம் என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-6)

# இரணைமடுக்குளத்து நீரை குமரபுரத்திற்கும் வழுங்குக

## அப்பகுதி விவசாயிகள் வேண்டுகோள்

அக்கராயன்,ஏப். 18

கிளிநொச்சி பரந்தன் குமரபுரம் கிராமத்தின் விவசாயச் செய்கைக்கு எதிர்காலத்தில் இரணைமடுக்குளத்து நீரை வழங்க வேண்டும் என்று இந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி பரந்தன் பிரதேசத்துக்கு உட்பட்ட குமரபுரம் கிராமம் 1954 இல். உருவாக்கப்பட்டது.

இந்தக் கிராமத்தில் தற்போது 352 விவசாயக் குடும்பங்கள் வசித்து வருகின்றன. 2 ஆயிரத்து 708 ஏக்கர் நிலம் நெற்செய்கை மேற்கொள்ளக் கூடிய நிலையிலுள்ளது. இங்கு இரணைமடுக்குளத்தில் இருந்து வருகின்ற கழிவு நீரின் உதவியுடனும், மானாவாரிச் செய்கையாகவும், பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இரணைமடுக்குளம் புனரமைப்புச் செய்யப்படும் போது எதிர்காலத்தில் தமது பகுதிகளுக்கும் நீர்ப்பாசன முறைகளை ஏற்படுத்துவதுடன் இரணைமடுக்குளத்து நீரைத் தமக்கும் வழங்க வேண்டும் என மேற்படி கிராம விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

# மின்சாரத்தை வழங்குமாறு முழங்காவிலில் கோரிக்கை

அக்கராயன், ஏப்.18

விவசாயக் கிராமமான முழங்காவிலுக்கு விரைவில் மின்சாரத்தை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலேயே மக்கள் மீளக்குடியமர்ந்த கிராமமாக முழங்காவில் விளங்குகின்றது.

கிளிநொச்சி நகரிலிருந்து 50 கிலோ மீற்றர் தூரத்தில் முழங்காவில் கிராமம் விளங்குவதுடன் மாவட்டத்தின் எல்லைக் கிராமமாகவும் உள்ளது. இந்த நிலையில் பெருமளவில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

ஆனால் இங்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. முழங்காவில் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதன் மூலம் விவசாயத்துறை பெரும் வளர்ச்சியடையும் என்று இங்கு வசிக்கும் மக்கள் கூறுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலேயே மரக்கறி வகைகள், வெற்றிலை, கிழங்குவகைகளை அதிகளவில் உற்பத்தி செய்யும் இடமாக முழங்காவில் கிராமம் விளங்குகிறது. ஆழ் கிணறுகளிலிருந்து நீரைப்பெற்றுத் தோட்டப் பயிர்கள் உற்பத்தி செய்யுமிடமாக முழங்காவில் விளங்குவது குறிப்பிடத்தக்கது. (க-18)

### அரச பஸ் சேவையை நடத்தக் கோரிக்கை

**இரு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பிரதேசங்களில் அரச பஸ்கள் சேவையிலீடுபட்டு வந்தன.**

அக்கராயன்,ஏப். 18

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலமைந்துள்ள மிகவும் பின்தங்கிய கிராமங்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இரு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பிரதேசங்களில் அரச பஸ்கள் சேவையிலீடுபட்டு வந்தன. ஆனால் தற்போது இடம்பெறுவதில்லை. இதனால் கிராம மக்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஐயன்கன் குளம், புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி ஆகிய கிராமங்களையும், அம்பலப்பெருமாள் குளம், கோட்டைகட்டிய குளம், தென்னியன்குளம் ஆகிய குளங்களையும் இலக்குவைத்து இந்த அரச பஸ் சேவைகளை நடத்துமாறு பிரதேச மக்கள் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். (க-18)

### அரச சொத்துக்கள் அதோ கதி...



அக்கராயன் கமநல சேவை நிலைய வளாகத்தினுள் பாதுகாப்பில்லாது மழை, வெயிலில் பாதிப்புறும் உழவு இயந்திரங்கள். (18)

# மோட்டார் சைக்கிள் மோதி பெண் சாவு சந்தேகநபருக்கு ரூ.5 லட்சம் ஆள்பிணை

கிளிநொச்சி,ஏப்.18

மோட்டார் சைக்கிளால் மோதி வயோதிபப் பெண்ணின் மரணத்துக்குக் காரணமாக இருந்தவரெனக் குற்றம் சாட்டப்பட்டவர் 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையில் செல்ல கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

கடந்த 12 ஆம் திகதி காலை 9 மணியளவில் கிளிநொச்சிக்கும் பரந்தனுக்கும் இடையில் அமைந்துள்ள ஏ-9 வீதியைக் கடக்க முற்பட்ட 74 வயதான ஜீவரட்ணம் சறோஜினி என்ற வயோதிபப் பெண் மோட்டார் சைக்கிள் ஒன்றினால் மோதப்பட்டு மரணமடைந்தார்.

இந்தச்சம்பவத்தை அடுத்து கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த சம்பவத்தில் தொடர்புடையதாகத் தெரிவித்து சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

நீதிமன்ற விசாரணையின் முடிவில் சந்தேக நபரை 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது. (க-6)

### வவுனியா, இராசேந்திரம் பகுதியில்

# பற்றைக் காட்டுப் பகுதியில் சட்டவிரோதச் செயல்கள்

வவுனியா,ஏப்.18

வவுனியா இராசேந்திரம் குளம் பொது மயானத்துக்கு அருகில் காணப்படும் பற்றைக்காடுகள் அழிக்கப்படாமல் இருப்பதனால், இங்கு சில சட்ட விரோதச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா இராசேந்திரம் குளத்துக்கு அருகில் உள்ள பொது மயானத்துக்கு அண்மையில் உள்ள பற்றைக் காடுகள் இன்றுவரை அழிக்கப்படாமல் வளர்ந்து காணப்படுகின்றன.

இதனால் இந்தக் காட்டுப்பகுதிக்குள் கலாசாரச் சீரழிவான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

அத்துடன் இந்தப் பற்றைகளுக்குள் அமர்ந்து மது அருந்துவோர் வீதியால் செல்பவர்களுடன் தகராறு செய்வதில் ஈடுபடுகின்றனர்.

இத்தகைய சம்பவங்களால் தாங்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதாகவும் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் எனவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

# மன்னாரில் கேட்டுக் கேள்வியின்றி வெட்டிச் சரிக்கப்படும் பனைகள்

## விற்பனைக்காக அவை வேறிடம் செல்கின்றன

மன்னார்,ஏப்.18

மன்னார்ப் பகுதிகளில் பனை மரங்கள் கேட்டுக் கேள்வியின்றி - அனுமதி பெறாமல் - வகை தொகையாக் வெட்டிச் சரித்து அழிக்கப்பட்டு வருகின்றன என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மீளக்குடியமர்ந்த கிராமங்களிலேயே சட்டவிரோதமான முறையில் குறிப்பிட்ட சில்ரால் பனை மரங்கள் வெட்டி அழிக்கப்படுகின்றன.

குறிப்பாக மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இந்தச் செயற்பாடு பெரியளவில் இடம்பெற்று வருகின்றது.



கடந்த போரின்போது ஏராளமான பனை மரங்கள் அழிவடைந்துள்ளன. பல பனை மரங்கள் தலைகள் இன்றி நிற்கின்றன. இந்த நிலையில் எஞ்சியுள்ள பனை மரங்களும் தற்போது அழிக்கப்பட்டு வருகின்றன. தறிக்கப்படும் பனை மரங்கள் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்திலே மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தமது தேவைக்கென மரங்களைப் பெறமுடியாத நிலையில் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். இந்த நிலையில் பனைமரம் [illegible] வேறு பயன்தரு மரங்கள் அனுமதி பெறாது வெட்டப்படுகின்றன. பின்னர் வேறு இடங்களுக்கு இவை எடுத்துச் செல்வதைக் காண முடிகின்றது.

அனுமதி பெறாது பனை மரங்கள் வெட்டப்படுவதை அதிகாரிகள் கண்டும் காணாதிருப்பது மக்களிடையே எரிச்சலையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை தலை மன்னாரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் உள்ள பனை மரங்கள் சட்டத்தை நிலை நிறுத்த வேண்டியவர்களின் உதவியுடன் வெட்டி அழிக்கப்படுகின்றன என்று இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கு தனியாருக்குச் சொந்தமான பல ஏக்கர் காணிகளில் ஆயிரக்கணக்கான பனைமரங்கள் உள்ளன. இவற்றின் மூலம் பல பயன்கள் கிடைத்து வருகின்றன. இந்த நிலையில் சிலர் சட்ட விரோதமான முறையில் பனை மரங்களை வெட்டி விற்று அதிக பணம் சம்பாதிக்கின்றனர்.

இது தொடர்பாகப் பொலிஸாரிடம் முறையிட்ட போதிலும் பயன் எதுவும் கிடைக்கவில்லையெனக் கூறிப் பாதிக்கப்பட்ட மக்கள் அங்கலாய்க்கின்றனர். (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை ஆராய்ச்சி நிலையம் அடுத்த மாதம் திறக்கப்படும்

## 75 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18

இந்திய அரசின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டு வரும் பனை அபிவிருத்திச் சபையின் கைதடி பனை ஆராய்ச்சி நிறுவனம் அடுத்த மாத நடுப்பகுதியில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தத் தகவலை பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

75 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு பனைஆராய்ச்சி நிறுவனத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வந்தன. அந்தப் புனரமைப்பு பணிகளில் 90 வீதமானவை தற்போது நிறைவடைந்துள்ளன. அலுவலகத்தேவைகளுக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த மாத நடுப்பகுதியில் ஆராய்ச்சி நிலையம் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

பனை ஆராய்ச்சி நிலையம் 46 பணியாளர்களைக் கொண்டு ஆரம்பத்தில் இயங்கவுள்ளது. ஆராய்ச்சிக் கூடத்துடன், இயந்திர சாதன அறை, விற்பனை நிலையம், விருந்தினர் தங்குமிடம் உள்ளிட்ட பகுதிகளும் இந்த ஆராய்ச்சி நிறுவனத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன - என்றார். (த-3)

## பண்ணையில் ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு முதலில் 'காப்பெற்'

யாழ்ப்பாணம், ஏப்.18

பண்ணையில் அகலமாக்கிப் புனரமைக்கப்பட்ட வீதிக்குக் 'காப்பெற்' இடும் பணி இந்த வாரம் ஆரம்பிக்கப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கே இந்தக் காப்பெற் இடும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

தொடர்ந்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் குறிக்கட்டுவான்துறை வரையான பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகள் இடம்பெறவுள்ளன.

இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் குறித்து அண்மையில் யாழ்ப்பாணம் வந்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் நேரடியாக ஆராய்ந்துள்ளனர். இதனையடுத்து அந்த வீதி தொடர்ந்து புனரமைக்கப்படவுள்ளது - என்றார். (த-17)


# யாழ். சிறைச்சாலையின் கட்டடப் பணிகள் கிடப்பில்

யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ். சிறைச்சாலையின் கட்டடப் பணிகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

பண்ணையில் யாழ். சிறைச்சாலைக்குரிய கட்டடம் அமைப்பதற்கு அண்மையில் அடிக்கல் நடப்பட்டபோதும் கட்டடப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. சிறைச்சாலை மற்றும் புனர்வாழ்வு மறுசீரமைப்பு அமைச்சால் சிறைச்சாலைக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டது. அத்துடன் வரைபடக் கட் அவுட்டும் அங்கு போடப்பட்டுள்ளது.

எனினும் இதுவரையும் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான தொடர் நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படாத நிலையிலேயே உள்ளன. கிறவல் மண் மட்டுமே இங்கு பறிக்கப்பட்டுக் காணப்படுகின்றது.



இந்த விடயம் தொடர்பாகச் சிறைச்சாலை அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது: ''சிறைச்சாலைக் கட்டடம் அமைப்பதற்கான நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பமாகும்'' என்றார்.

குடாநாட்டில் தற்போது ஒரேயொரு சிறைச்சாலை மட்டுமே உள்ளது. அதுவும் ஒரு தனியார் கட்டடத்தில் அடிப்படை வசதிகள் கூட அற்ற நிலையிலேயே இயங்கி வருகிறது. இவ்வாறான நிலைமைகள் காரணமாகக் கைதிகளுக்குத் தொற்று நோய்கள் பரவும் அபாயமும் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலைகளில் யாழ். சிறைச்சாலையின் கட்டடப் பணியில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படாமை குறித்து பலதரப்பட்டோர் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ம-17)

# பருத்தித்துறை வைத்தியசாலையின் சேவை முழுமையானதாக இல்லை

## வைத்தியர்கள் பற்றாக்குறையே காரணம்

வடமராட்சி, ஏப். 18

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக்குறையால் நூறு வீதம் சேவைகளை வழங்க முடியவில்லை. தேவையான வைத்தியர்களைப் பெற்றுத்தந்தால் சிறந்த வைத்திய சேவைகளை வழங்க முடியும் எனப் பதில் வைத்திய அத்தியட்சகர் எஸ்.சுதோகுமார் தெரிவித்தார்.

வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது, பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் இன்றைய நிலை குறித்து வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் எஸ்.சுதோகுமார் விரிவாக எடுத்துக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வைத்தியசாலைக்கு நிரந்தரமாக மகப்பேற்று வைத்திய நிபுணர், குழந்தை வைத்திய நிபுணர் ஆகியோர் இல்லை. மகப்பேற்று வைத்திய நிபுணர் வாரத்தில் மூன்று தினங்கள் தெல்லிப்பழையிலும் இரு தினங்கள் இந்த வைத்தியசாலையிலும் பணியாற்றுகின்றார்.

நிரந்தரமாக மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவர் சேவையில் இருக்கவேண்டும். இங்கு கடமையாற்றிய குழந்தை வைத்திய நிபுணரும் இடமாற்றலாகிச் சென்றுள்ளார்.

ஆதார வைத்தியசாலைக்குரிய வசதிகள் இங்கு இருக்க வேண்டும். இந்த வசதியில் குறைந்தது 4 யுனிட்டுக்களாவது இருக்க வேண்டும். அதுவும் இல்லை. இந்த நிலையில் நூறு வீதம் சேவைகளை வழங்க முடியாத நிலையில் உள்ளோம்.

வெளி மாவட்டங்களிலிருந்து இந்த வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்கு பல வைத்தியர்கள் விண்ணப்பிக்கின்றார்கள். ஆனால் இங்கு வந்ததும் போதிய வசதிகள் இல்லையென்று திரும்பிப் போய்விடுகின்றார்கள். ஆதலால் வைத்தியர்கள் தங்குவதற்கு குறைந்தது 20 அறைகள் கொண்ட ஒருவிடுதி அமைக்கப்பட்டால் தான் வைத்தியர்கள் தங்கியிருந்து பணியாற்றமுடியும்.

போதிய வைத்தியர்கள் இன்மையால் இந்த வைத்தியசாலையிலிருந்து மாதாந்தம் 146 பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். வைத்தியர்கள் போதியளவு இருந்தால் இந்த நிலை ஏற்படாது - என்றார்.

வைத்தியசாலையில் சிசுக்கள் மரணம் அதிகரிக்கின்றது. பணியாளர்கள் நோயாளர்கள் மீது சீறிச்சினக்கின்றனரென்றும் நோயாளரைச் சரியான முறையில் கவனிப்பதில்லை எனவும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், தனிப்பட்டோரும் பதில் வைத்தியரிடம் சுட்டிக் காட்டினார்கள்.

இதற்குப் பதிலளித்த பதில் வைத்திய அத்தியட்சகர், குறைகளை எடுத்துக் கூறினால் அவற்றைத்தடுப்பதற் கான உரிய நடவடிக்கை எடுப்போம், இனிவரும் காலத்தில் இங்கு கூறப்பட்ட சம்பவங்கள் எதுவும் நடைபெறாமல் பார்த்துக் கொள்வோம் என்று கூறினார்.

பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் கருத்துத் தெரிவிக்கையில், அம்புலன்ஸ் சேவைகளைச் சீர்செய்து குறுகிய காலத்துக்குள் ஏற்படும் மரணங்களைத் தவிர்க்க வேண்டும் எனக்கூறினார். (த-8)

## எரிகாயங்களுடன் பெண் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,ஏப்.18

மண்ணெண்ணெய் குக்கர் வெடித்து எரிகாயங்களுடன் பெண் ஒருவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழையில் நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சிவராஜ் சிவகலா (வயது-18) எனும் குடும்பப் பெண்ணே எரிகாயங்களுக்குள்ளா னார்.

உடனடியாக தெல்லிப்பழை ஆதார வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டார். (த-4)

## எழுதுமட்டுவாழில் திருட்டு

எழுதுமட்டுவாழ் கரம்பகம் பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பின்னர் அங்குள்ள பாக்கியம் தோட்டம் என அழைக்கப்படும் காணிக்கு பாதுகாப்புக்காக கடந்த ஜனவரி மாதம் போடப்பட்ட 30 ஆயிரம் ரூபா பெறுமதியான இரும்புக் கதவுகள் கடந்த வாரம் இனந்தெரியாதோரால் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

போர் வேளையில் இந்தக் காணிக்குள்ளிருந்த வீட்டுக் கூரை உட்பட இரும்புக் கேற் அனைத்தும் தகர்க்கப்பட்டு வீடும் சேதமடைந்தது. மக்கள் மீளக் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பின்னர், வீடு முழுமையாகத் திருத்தம் செய்யப்பட்டு வெளிக் கதவுகளும் புதிதாகப் பொருத்தப்பட்டன. இந்தக் கதவுகளே திருடப்பட்டுள்ளன மே மாதம் அங்கு மீளக் குடியமர்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக வீட்டின் உரிமையாளர் க.துரைரத்தினம் என்பவர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இந்த இடத்திலிருந்து சுமார் 100 யார் தூரத்தில் இருக்கும் முகாமில் உள்ளவர்கள் இந்த வளவுக் கிணற்றை தமது தேவைக்குப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (த-9)

## சுற்றுலா வந்த சிறுமியைப் பாம்பு தீண்டியது

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நின்றிருந்த சுற்றுலாச் சிறுமியை பாம்பு தீண்டியதனால் அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்றது. நிட்டம்புவைச் சேர்ந்த எம்.நிக்கிலா (வயது 11) என்ற இரண்டு வயதுச் சிறுமியே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (த-4)

# பணியாளர் சம்பளத்தை வழங்காத கூ.சங்கங்கள்

## தொழில் திணைக்களத்தில் முறையிடலாம்

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ். மாவட்டத்தில் உள்ள ஒரு சில கூட்டுறவுச் சங்கங்கள் பணியாளர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை வழங்காமல் உள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன என்று வடமாகாணப் பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

கூட்டுறவுச் சங்கங்கள் பணியாளர்களுக்கான மாதாந்தச் சம்பளத்தை சீராக வழங்காவிட்டால் தொழில் திணைக்களத்திடம் முறையிட முடியும். பணியாளர்களின் இந்த முறைப்பாட்டைத் தொழில் திணைக்களம் ஆராய்ந்து உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும். இதுவரை பணியாளர்களிடம் இருந்து எந்த வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை.

ஆயினும், சில தகவல்களின் அடிப்படையில் ஒரு சில சங்கங்கள் பணியாளருக்கான மாதாந்தக் கொடுப்பனவைச் சீராக வழங்கவில்லை எனத் தெரியவருகிறது. எனினும் முறைப்பாடுகள் இல்லாமையால் நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது - என்றார். (த-17)

## கள் அடைக்கும் பணி பாதிப்பு

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் போத்தலில் கள் அடைக்கும் பணி மின்தடையினால் பாதிக்கப்பட்டுள்ளது.

பனங் கள் சீஸன் ஆரம்பமாகியுள்ளதையடுத்து சங்கத்தினால் போத்தலில் கள் அடைக்கும் பணி கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகியது. இயந்திரத்தின் மூலம் அடைக்கப்படும் பணியில் தினமும் ஆயிரம் தொடக்கம் ஆயிரத்து 200 போத்தல் வரை கள் அடைக்கப்படுகிறது. தற்போது ஏற்பட்டுள்ள மின் தடையினால் கள் அடைக்கும் பணி நிறுத்தப்படுவதாகவும் இதனால் அங்கத்தவர்களிடம் கொள்வனவு செய்யப்படும் கள்ளை வடிசாலைக்கு அனுப்ப வேண்டியுள்ளதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மின்தடை ஏற்படும்வேளையில் பயன்படுத்தவெனச் சங்கத்தினால் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட 5 கே.வி. மின்பிறப்பாக்கி பழுதடைந்து போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# பயனற்ற நிலையில் வீதிப் பெயர்ப்பலகை

## பொதுமக்கள் தரப்பில் விசனம்

தென்மராட்சி, ஏப்.18

சாவகச்சேரி பிரதேச சபையினரால் எழுதுமட்டுவாழ் சந்தியில் பெயர்ப் பலகை நடப்பட்டமை தொடர்பில் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். பயணிகளுக்கு பயனுள்ள வகையில் அது அமையவில்லை என அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பின்னர் ஏ-9 வீதிகளில் உள்ள ஊர்களின் பெயர்ப் பலகை போன்று எழுதுமட்டுவாழ் சந்தியிலும் பொருத்துமாறு அந்தப் பகுதி மக்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரைப் பல தடவைகள் கோரியிருந்தும் பயன் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் சாவகச்சேரி பிரதேச சபை அங்கத்தவராக உள்ள இந்தப் பகுதியைச் சேர்ந்த இ.தெய்வேந்திரம்பிள்ளையிடம் மக்கள் இது தொடர்பில் வேண்டுகோள் விடுத்தனர். இந்த உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க பிரதேச சபையினர் எழுதுமட்டுவாழ் சந்திக்கு 300 மீற்றருக்கு முன்பாக ஒரு பக்கத்தில் மட்டும் பெயர்ப்பலகையைப் பொருத்தியுள்ளனர்.

**பயணிகளுக்கு பயனுள்ள வகையில் அது அமையவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.**

கொடிகாமத்திலிருந்து செல்வோர் இந்தப் பெயர்ப் பலகையைப் பார்க்க முடிந்த போதிலும் பளையிலிருந்து வருவோர் பெயர்ப் பலகையின்றி சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறுகல் முற்றுகிறது

## சூடான் - தென்சூடான் எண்ணெய்ப் பிராந்தியத்தில் இழுபறி

ஜூபா,ஏப்.18

சர்ச்சைக்குரிய ஹெக்லிக் எண்ணெய் பிராந்தியத்தில் சூடான் குண்டுத் தாக்குதல்களை நடத்தி வருவதாக தென்சூடான் அறிவித்துள்ளது.

தென்சூடான் இராணுவத்தினர் குறித்த பகுதியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததை அடுத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதல்களால் பெரியளவிலான சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே குறித்த பிராந்தியத்தில் இருந்து தென் சூடான் படையினர் வெளியேறாதவரை பேச்சு நடத்தப்பட மாட்டாது என சூடான் அறிவித்துள்ளது.


எகிப்து வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்தபின்னர் சூடான் அதிபர் ஒமர் அல் பஷிர் இதனைத் தெரிவித்துள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டு தென் சூடான் தனி நாடாக சுதந்திர பிரகடனம் செய்த பின்னர், இரு தரப்பினருக்கும் இடையில் பல்வேறு விடயங்களில் முரண்பாடுகள் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.



தென்சூடான் இராணுவத்தினர் குறித்த பகுதியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததை அடுத்து நடத்தப்பட்ட தாக்குதல்களால் பெரியளவிலான சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒசாமா குழும நிதியின் மூலம் சவுதியில் உயரமான கட்டடம்



டுபாய்,ஏப்.18

சவுதி இளவரசரின் கட்டுமான நிறுவனம் கிங்டம் ஹோல்டிங் கம்பெனி, ஜெட்டா நகரில் உலகின் மிக உயர்ந்த கட்டடத்தை கட்டும் பணியை விரைவில் தொடங்கவுள்ளதாக அறிவித்துள்ளது. இதுகுறித்து இளவரசர் அப்துல் அஜீஸ் அல் சவுத் கூறுகையில்,

''உலகின் மிகப் பெரிய, அதிக தனியார் முதலீடு கொண்ட நிறுவனம் எமது நிறுவனமாகும். இதில் சவுதி அரேபியா, மத்திய கிழக்கு மற்றும் சர்வதேச நாடுகள் அதிகளவில் முதலீடு செய்துள்ளன.

இந்நிறுவனம், ஜெட்டா நகரில் கிங்டம் டவர் என்ற பெயரில் உலகின் மிக உயரமான (1000 மீற்றர்) கட்டடத்தை கட்டும் பணியை ஆரம்பிக்க உள்ளது. அதன் கட்டுமானப் பணிகள் 63 மாதங்களில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு 460 கோடி ரியால் (இலங்கை ரூபாயில் ரூ.19,120கோடி ) செலவாகும் எனத் தெரிகிறது'' என்றார்.

இந்தக் கட்டுமான திட்டத்தில் சவுதி பின்லேடன் குழுமம் எஸ்.பி.ஜி. ரூ. 5,130 கோடி முதலீடு செய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவால் கொல்லப்பட்ட சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடன் குடும்பத்துக்குச் சொந்தமானது எஸ்.பி.ஜி.

இப்போது, டுபாயில் உள்ள 829.84 மீற்றர் உயரமுள்ள புர்ஜ் கலிபா டவர் தான் உலகின் மிக உயரமான கட்டடம் என்பது குறிப்பிடத்தக்கது.

## கல்வி முறைக்கு எதிரான பிரசாரம்: பிரபலமானான் சீனச் சிறுவன்

பீஜிங்,ஏப்.18

சீனாவில் தேர்வை அடிப்படையாக வைத்து கற்பிக்கப்படும் கல்வி முறையை எதிர்த்துப் பாடசாலை மாணவன் பேசிய பேச்சு பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

கிழக்கு சீனாவைச் சேர்ந்த மாணவன் ஜியாங் செங்போ. இவரது பாடசாலையில் நடந்த நிகழ்வில் மாணவர்கள் பேச்சுப் போட்டி நடந்தது.

விழாவில் 3,000இற்கும் அதிகமான மாணவர்கள், அதிகாரிகள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். அங்கு ஜியாங் பேசுகையில், ''சீனாவில் தேர்வை அடிப்படையாக வைத்து கல்வி கற்பிக்கப்படுகிறது. மாணவர்களின் படைப்பாற்றலைத் தூண்டும் வகையில் எதுவும் இல்லை'' என்று காரசாரமாக பேசினான்.

அவனது பேச்சை கேட்டு ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், அதிகாரிகள் என்று அனைத்து தரப்பினரும் ஆச்சரியம் அடைந்தனர்.

மாணவனைப் பலரும் பாராட்டினர். ஜியாங்கின் பேச்சு குறித்து ஊடகங்களில் பரபரப்பாக செய்திகள் வெளியாயின. ஒரே நாளில் சீனாவின் மிகப் பிரபலமானவர் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தான் ஜியாங்.

## தீ பிடித்த அமெரிக்க விமானம்

அமெரிக்காவின் விர்ஜின் அட்லாண்டிக் நிறுவனத்திற்குச் சொந்தமான ஜெட் விமானம் ஒன்று, தீப்பிடித்ததால் லண்டன் கேட்விக் விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டது. இந்த விபத்தில் 4 பேர் காயமடைந்தனர். விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது.


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 26 . 02 . 1986



மறைவு 06 . 03 . 2012

அமரர்
சரவணபவானந்தம் தயாபரன்
(கண்ணன்)

பண்பினில் வளர்ந்து அன்பையே சொரிந்து
அரவணைத்த தெய்வமே!
தொண்டு செய்வதையே கொடையாக்கிய
கொடைவள்ளலே!
என்றும் நீங்காத்துயருடன்....

கடந்த (06.03.2012) அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புச் செல்வத்தின் பிரிவுத்துயரில் பங்கேற்று ஆறுதல் கூறி எல்லா வழிகளிலும் உதவி நல்கி உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் எமக்கு ஆறுதல் தந்த அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (19.04.2012) வியாழக்கிழமை அதிகாலை 4 மணியளவில் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

### காணி தேவை

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு அண்மித்த பகுதியில் அல்லது தும்பளைப் பகுதியில் வெற்றுக் காணி அல்லது வீட்டுடன் 1½ பரப்புக் காணி தேவை.

தொடர்புகொள்ளவும்:
0775151761

### பணிப்பெண் தேவை

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை

சம்பளம் : ரூபா 10,250/=

தொடர்பு : 077 3765628

### மணமகள் தேவை

அரச ஊழியரும், தொழில் முகாமையாளருமான நற்பண்பாளர் ஒருவருக்கு கடந்த கால பேரழிவுகளில் பெற்றோர் உறவினர்களை இழந்த அழகிய, சிவந்த, மெல்லிய, படித்த பண்பான 28 வயதுக்கு கீழ் 5' உயரமான மணமகள் தேவை

தொடர்பு : 077 6935338

### குத்தகைக்கு

மருதனார்மடம், இராமநாதன் கல்லூரிக்கு அருகில் K.K.S Road இல் இருந்து இரண்டாவது காணி குறுகிய நீண்டகால குத்தகைக்கு உண்டு. (தனியார் நிறுவனம் விரும்பத்தக்கது)

தொடர்பு : 077 3945822

### கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள PEUGEOT (300 - xxxx) இலக்கம் உடைய வெள்ளை நிற கார் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 077 3126374

### இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூபா 450 /= மட்டுமே. தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை திறக்கப்படும்.

தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2226944

### கோழிக்குஞ்சு விநியோகம்

No.1 பிறீமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். முன் கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

### நினைவஞ்சலி

நவாலியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நாவலர் வீதியை, புகுந்த இடமாகவும் கொண்டு வாழ்ந்து இறுதியாக டென்மார்க்கில் வசித்தவருமான



மலர்வு 23 ★ 02 ★ 1925

உதிர்வு 18 ★ 10 ★ 2011

திருமதி சரஸ்வதி குமாரசுவாமி
அவர்களின் ஆறாம் மாத நினைவஞ்சலி

மாதம் ஆறு ஆனதம்மா ஆறவில்லை எம் இதயக்காயம்
அன்போடு எமைக்காத்து அறிவுரைகள் பல கூறி
பண்போடு எமை வளர்த்து பாரினிலே உயர வைத்தீர்
எள்ளளவும் உமக்கென்று ஏதொன்றும் செய்யவில்லை
கண்ணீரில் நாம் உறைய எங்கு அம்மா போய் மறைந்தீர்?
காலம் எல்லாம் உங்கள் நினைவை நாம் சுமந்து
கடவுளிடம் வேண்டுகின்றோம் மறுபடியும் உம் திருமுகம் காண
எம் வாழ்விற்கு வழிகாட்டிய ஒளிவிளக்கே
உம் ஆத்மாவின் சாந்திக்காய் இறைவனை வேண்டி நிற்கின்றோம்

பிள்ளைகள்
ஸ்ரீகாந்தா (லண்டன்), யோகேந்திராதேவி (லண்டன்), நந்தகுமார் (கனடா), வத்சலாதேவி (டென்மார்க்)

மருமக்கள்
மாலினி (லண்டன்), ஜெயக்குமாரன் (லண்டன்), சாந்தினி (கனடா), மோகனராஜா (டென்மார்க்)

பேரப்பிள்ளைகள்
வசந்த், ஹம்சாயினி, மாதுஷா, சிந்துஜா (லண்டன்), சஞ்சீவன் (கனடா), அகல்யா, அகிலன் (டென்மார்க்)

எம் அன்னையைப் பிரிந்து வாடிய தருணத்தில் உறுதுணையாய் நின்ற சொந்தம், பந்தம், நண்பர்கள் அனைவரையும் இவ் ஆறாம் மாத நினைவில் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆப்கனில் நடந்த வசந்தகாலத் தாக்குதல்கள்

# நேட்டோவின் தோல்வி




''பயங்கரவாதிகள் காபூலுக்குள்ளும் ஏனைய மாகாணங்களுக்குள்ளும் நுழைய முடிந்தமை எமக்கும் விசேட மாக நேட்டோவுக் கும் ஒரு புலனாய்வுத் தோல்வியாகும்''

காபூல்,ஏப்.18

ஆப்கன் தலைநகர் காபூலில் தலிபான்கள் ஒருங்கிணைக்கப்பட்ட தாக்குதலை நடத்தியமை ஆப்கானிஸ்தான் புலனாய்வுப் பிரிவின் குறிப்பாக நேட்டோவின் தோல்வி என்று ஆப்கன் ஜனாதிபதி ஹமீட் கர்ஸாய் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் படையினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் காபூலில் நேற்றுமுன்தினம் தொட்டு நடைபெற்றுவந்த கடும் தாக்குதல்கள் 18 மணித்தியாலங்களின் பின்னர் முடிவுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது. நாங்கர்ஹார், லோகார், பகிட்டா ஆகிய மாகாணங்களிலும் ஏக காலத்தில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

''பயங்கரவாதிகள் காபூலுக்குள்ளும் ஏனைய மாகாணங்களுக்குள்ளும் நுழைய முடிந்தமை எமக்கும் விசேடமாக நேட்டோவுக்கும் ஒரு புலனாய்வுத் தோல்வியாகும்'' என ஜனாதிபதி கர்ஸாய் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

நடைபெற்ற மோதலை கருத்திற்கொள்ளும்போது பாதுகாப்புப் படையினர் தரப்பில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை குறைவானதாகும்.

எனினும் தலைநகரின் மத்தியில் அதி முக்கிய இலக்குகளை தாக்கும் வலிமை தலிபான்களிடம் உள்ளது என்பதை இது வெளிப்படுத்துகிறது.

இந்தத் தாக்குதலில் 36 கிளர்ச்சியாளர்கள், 11 பாதுகாப்புப் படையினர் நான்கு பொதுமக்கள் உயிரிழந்ததுடன் கிளர்ச்சியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் ஆப்கன் ஜனாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது.

# தாக்குதலுக்கு கண்டனம்



இஸ்லாமாபாத்,ஏப்.18

ஆப்கானிஸ்தானில் நடத்தப்பட்ட ஆயுததாரிகளின் தாக்குதல்களுக்குப் பாகிஸ்தான் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

தலைநகர் காபூல் உள்ளிட்டு ஏனைய பகுதிகளில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களுக்கும் பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சர் ஹினா ரப்பானி கார் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் ஸ்திரத்தன்மையும், அமைதியும் நிலவ வேண்டும் என்பதே பாகிஸ்தானின் முக்கிய நோக்கம் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நோக்கத்தை அடைவதற்குஆப்கானிஸ்தானுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தமது நாடு வழங்கும் எனவும் ஹினா ரப்பானி கார் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்தத் தாக்குதலின்பேரது பாகிஸ்தான் பிரஜைகளுக்கு எதுவித உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை எனவும்தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் மற்றும் பிற பகுதிகளில் மேற்குலக நாடுகளின் தூதரகங்கள் மீது தலிபான் ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

# 77 பேரைக் கொன்றாலும் நான் நிரபராதி



ஒஸ்லோ,ஏப்.18

நோர்வேயில் கடந்த வருடம் தாக்குதல்களை நடத்தி 77 பேரைக் கொன்ற அன்டர்ஸ் பேரிங் பிரைவிக், தன் மீது சுமத்தப்பட்ட பயங்கரவாத மற்றும் கிரிமினல் குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளார்.

கடந்த வருடம் ஜூலை மாதம் ஆளும் கட்சியின் இளைஞர் முகாமொன்றில் பொலிஸ் வேடத்தில் சென்று பிரைவிக் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 67 பேர் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் பள்ளத்தில் விழுந்தும் நீரில் மூழ்கியும் உயிரிழந்தனர். அதற்குமுன் அவர் ஒஸ்லோவில் கார் குண்டொன்றை வெடிக்க வைத்ததால் 8 பேர் கொல்லப்பட்டனர்.

பயங்கரவாத நடவடிக்கை மேற்கொண்டதாக பிரைவிக் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது இத்தாக்குதல்களை நடத்தியதை அவர் ஒப்புக் கொண்டார். எனினும் தான் குற்றவாளியல்லர் என வாதாடினார். ''இந்நடவடிக்கையை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நான் கிரிமினல் குற்றவாளியல்ல. தற்பாதுகாப்புக்காகவே நான் அதைச் செய்தேன்'' என அவர் நீதிமன்றில் கூறினார்.

அதற்குமுன், வழக்குத் தொடுத்தவரான இங்கா பேஜர் இங்க், நீதிமன்றில் சுமார் ஒரு மணித்தியாலமாகப் பிரைவிக் மீதான, பயங்கரவாத நடவடிக்கை உட்பட பல குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பத்திரத்தை வாசித்தார். 77 பேரும் எவ்வாறு இறந்தனர் என்பதையும் சட்டத்தரணி பேஜர் இங்க் பட்டியல்படுத்தினார்.

தனது நடவடிக்கை குரூரமானது. ஆனால் அவசியமானது என பிரைவிக் கூறினார். நோர்வேயை பல்கலாசாரத்திற்கு திறந்துவிட்ட, ஐரோப்பாவில் முஸ்லிம் ஆக்கிரமிப்புக்கு அனுமதித்த 'அரச துரோகிகளுக்கு' எதிராகத் தான் தனியாகத் தற்பாதுகாப்புக்காகச் செயற்பட்டார் என்று அவர் கூறினார்.

# ரத்தானது அழகிப் போட்டி

ஜெனிவா,ஏப்.18

சுவிற்சர்லாந்தில் இந்த ஆண்டில் நடைபெறுவதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த 'மிஸ் சுவிற்சர்லாண்ட்' பட்டத்திற்கான அழகிப் போட்டி நிதிப் பற்றாக்குறை காரணமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இந்தப்போட்டியின்இயக்குநரான கிறிஸ்டோபர் லோச்செர் அளித்த பேட்டியில் ''வேறு வழி இல்லாததால் நாங்கள் இந்த முடிவை எடுத்தோம்'' என்றார்.

எதிர்வரும் 2013ஆம் ஆண்டில் இந்த நிதிப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று நம்பிக்கை தெரிவித்த அவர், மேலும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாமல் இந்தப் போட்டியை நடத்தலாம் என்றார்.

கடந்த செப்டம்பரில், இந் தப் போட்டியை நடத்தத் திட்டமிட்டபோது தொலைகாட்சி நேயர்கள் ஆர்வமின்மையால் பொதுத் தொலைக் காட்சியில் ஒளிபரப்ப நிலையத்தார் முன்வரவில்லை.


இவ்வாறு 2012ஆம் ஆண்டு அழகிப் போட்டி ரத்துச் செய்யப்பட்டதால் கடந்த 2011ஆம் ஆண்டின் அழகியான 20 வயது அலினா புக்ஸ் காச்செர் இன்னும் ஒரு வருடத்திற்கு அழகிக்கான கிரீடத்தை வைத்திருப்பார்.

ஆணழகன் போட்டியும் கடந்த 2011ஆம் ஆண்டில் மே மாதம் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

பிறகு நடத்த முடியாமல் போய்விட்டது. இதற்கும் அரசு தொலைக்காட்சியின் ஆதரவு கிடைக்கவில்லை என்று கூறினார் லோச்செர்.

# ஆஸ்திரேலியாவின் தடையிலும் தளர்வு

சிட்னி,ஏப்.18



மியன்மாருக்கு எதிரான தடைகளை ஆஸ்திரேலியா தளர்த்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஜனநாயக ரீதியில் நடைபெற்ற நாடாளுமன்ற இடைத் தேர்தல்களை அடுத்து மியன்மாருடனான வர்த்தக உறவுகளை ஆஸ்திரேலியா வழமைக்குக் கொண்டுவரவுள்ளது.

எனினும் மறுசீரமைப்புக்களை ஏற்படுத்துவது தொடர்பாக இராணுவ அதிகாரிகள் மீதான அழுத்தங்களை ஆஸ்திரேலியா தொடர்ந்தும் பிரயோகிக்கவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தெய்ன்செய்ன் உள்ளிட்ட 260 பேருக்கு எதிரான பயணத் தடை மற்றும் நிதி கட்டுப்பாடுகளை தமது நாடு தளர்த்தவுள்ளதாக ஆஸ்திரேலியா வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார். அரசியல் சுதந்திரம் மற்றும் இனக்குழுக்களுக்கு இடையிலான சமரசம் உள்ளடங்கலான மறுசீரமைப்புக்களை மியன்மார் அரசு மேற்கொள்வதை தாம் ஊக்குவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் போன்ற நாடுகள் மியன்மார் மீதான தடைகளைத் தளர்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குப்புற விழுந்து விட்டாரா ஒபாமா...?



வோஷிங்டனில் நடைபெற்ற ஈஸ்ரர் தின கொண்டாட்டத்தின்போது விளையாட்டு மைதான நிகழ்வுக்குத் தயாராகிறார் ஒபாமா. அதற்கு முன் உடற்பயிற்சியில் ஈடுபட்டார்.

# கண்டனம் வெளியிட இணக்கம்

வட கொரியாவின் சர்ச்சைக்குரிய ஏவுகணைத் திட்டத்துக்கு கடும் கண்டனம் வெளியிடுவதற்கு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை இணக்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையிடம் பல்வேறு நாடுகளும் கோரிக்கை விடுத்திருந்தன.

அத்துடன் வட கொரியா மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை மேலும் நீடிப்பதற்கும், கடுமையாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தன. வட கொரியாவை கறுப்புப் பட்டியலில் இணைத்துக்கொள்ளுமாறு வலியுறுத்தப்பட்டிருந்தது.

அணுத்திட்ட சர்ச்சைகளால் வட கொரியா ஏற்கனவே மேற்குலக நாடுகளுடன் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டுள்ளது.

வடகொரியா அண்மையில் ஏவிய ஏவுகணைக்கு உலக நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளவுத்துறை இயக்குநர் விபத்தில் சாவு

மத்திய உளவுத்துறையில் கூடுதல் இயக்குநராகப் பணியாற்றி வந்த ஆர்.என். பெகுரா (வயது-56) வீதி விபத்தில் உயிரிழந்தார்.


இவர் கடந்த ஆண்டு வடகிழக்கு மாநிலங்கள் பிரிவுக்குத் தலைவராகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டு கவுகாத்திக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

கடந்த 7 ஆம் திகதி அசாமில் உள்ள நுமலிகர் எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையத்தில் குண்டு வெடித்தது. இதுதொடர்பாக விசாரணை நடத்துவதற்காக கடந்த 9ம் திகதி கவுகாத்தியிலிருந்து நுமலிகர் சென்றார்.

விசாரணையை முடித்துக் கொண்டு காரில் திரும்பும் போது சோனாபுர் அருகே வீதி விபத்தில் சிக்கி தலையில் பலத்த காயத்துடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நேற்றுமுன்தினம் சிகிச்சை பயன் இன்றி பெகுரா உயிரிழந்தார். (வ)

## இத்தாலிய வீரருக்கு விளக்கமறியல் நீடிப்பு

குமரி மீனவர் உட்பட 2 மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள இத்தாலிக் கடற்படையினரின் மறியல் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இருவரையும் பொலிஸார் நேற்றுமுன்தினம் கொல்லம் தலைமை குற்றவியல் மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். இருவரையும் 30 ஆம் திகதி வரை மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.



தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதாவை, டில்லி தமிழ்நாடு இல்லத்தில் நேற்றுமுன்தினம் குஜராத் மாநில முதலமைச்சர் நரேந்திர மோடி, ஒரிசா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் ஆகியோர் சந்தித்தனர்.

## காந்தியின் உடமைகளின் ஏலத்தை நிறுத்துங்கள்

### காந்தியவாதிகள் கோரிக்கை

டில்லி, ஏப்.18

மகாத்மா காந்தியின் உடைமைகளை ஏலம் விடுவதை நிறுத்த வேண்டும் என்று காந்தியவாதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மகாத்மா காந்தியின் மூக்குக் கண்ணாடி, சில அரிய கடிதங்கள் மற்றும் ஒரு பிரார்த்தனை புத்தகம் உள்ளிட்ட அவரது உடைமைகளை ஏலம் விடப்போவதாக லண்டன்நிறுவனம் ஒன்று அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

எனினும் இதற்கு அண்ணா ஹசாரே உள்ளிட்ட காந்தியவாதிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். காந்தியின் உடைமைகளை ஏலம் விடுவது வருந்தத்தக்கது. இந்தியர்கள் யாரும் இதை விரும்ப மாட்டார்கள் என்று ஹசாரே தெரிவித்தார்.

காந்தியின் உடைமைகளை ஏலம் விடுவதை தடுத்து நிறுத்துமாறு பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எழுத்தாளரும், பத்மஸ்ரீ விருது பெற்றவருமான கிரிராஜ் கிஷோர் கடிதம் எழுதியுள்ளார்.

# இலங்கை செல்லும் இந்தியக் குழுவில் ஞானதேசிகன் இடம்பெறாதது ஏன்?

### அவரே கூறுகிறார் காரணம்

சென்னை, ஏப்.18

டில்லியில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளை முற்கூட்டியே நான் ஒப்புக் கொண்டதால் இலங்கை சென்ற குழுவில் இடம்பெறவில்லை என்று தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குச் சென்ற இந்தியக்குழுவில் தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் இடம் பெறாமை குறித்து வெளியான தகவலுக்கு அவர் அளித்த விளக்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முன்னதாக இலங்கை செல்லும் இந்தியக் குழுவில் இடம்பெறப் போவதில்லை என்று அ.தி.மு.கவும், தி.மு.க.வும் அறிவித்திருந்தன. இந்த கட்சிகளைப் பின் பற்றித்தான் ஞானதேசிகனும் அந்தக் குழுவில் இடம் பெறவில்லை என்று செய்திகள் வெளியாகி இருந்தன.

அ.தி.மு.க, தி.மு.க. ஆகிய கட்சிகளைப் பின் பற்றித்தான் ஞானதேசிகனும் அந்தக் குழுவில் இடம்பெறவில்லை என்று செய்திகள் வெளியாகி இருந்தன.



இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ள ஞானதேசிகன், ''முன் கூட்டியே ஒப்புக் கொள்ளப்பட்ட பணிகள் இருந்ததாலும், கட்சிப் பணிகளை கவனிக்க வேண்டியிருந்ததாலும் இலங்கை செல்லும் குழுவில் இடம் பெறவில்லை.''

"அ.தி.மு.க., தி.மு.க. ஆகிய கட்சிகள் குழுவில் இடம்பெறவில்லை என்று அறிவிப்பு வெளியிடுவதற்கு முன்பே அந்த குழுவில்தனது பெயரைச் சேர்க்க வேண்டாம் என்று தெரிவித்துவிட்டேன்'' - என்று விளக்கம் அளித்துள்ளார். (வ)

## தொழிற்சாலை இடிந்து 6 பேர் சாவு

ஜலந்தர், ஏப்.18

ஜலந்தரில் போர்வை தயாரிக்கும் தொற் சாலை ஒன்றின் கட்டடம் இடிந்து விபத்துக்குள்ளானது. இதில் தொழிலாளர்கள் 6 பேர் உயிரிழந்துள் ளனர்.

மேலும் 40 பேர் படுகாயம் அடைந் துள்ளனர். 60 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இடிபாடுகளில் சிக்கி இருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்து நடந்த இடத்தில் மீட்புப்பணிகள் நடைபெற்று வருகிறது. சாவு எண்ணிக்கை மேலும் உயரும் என்று அஞ்சப்படுகிறது.

விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

# மம்தாவுக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்

### பிரதமரிடம் கோரும் விஞ்ஞானிகள்



மேற்கு வங்கத்தில் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்டோர் மீது அந்தமாநில அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளால் பல்வேறு அமைப்புகளிடையே கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

கொல்கத்தா, ஏப்.18

கேலிச்சித்திரம் வரைந்த பேராசிரியர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் மரபணு விஞ்ஞானி ஒருவர், குடிசைகள் அகற்றியதைக் கண்டித்து பேரணி நடத்த முயன்றதாகக் கைது செய்யப்பட்டார். இதனால் கோபமடைந்த மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் விஞ்ஞானிகள் பிரதமரிடம் முறையிட உள்ளனர்.

மேற்கு வங்கத்தில் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்டோர் மீது அந்தமாநில அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளால் பல்வேறு அமைப்புகளிடையே கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி பற்றி கேலிச் சித்திரம் வரைந்து, இணையத் தளத்தில் வெளியிட்டதாக, ஜாதவ்பூர் பல்கலைக் கழகப் பேராசிரியர் அம்பிகேஷ் மகாபத்ரா கைது செய்யப்பட்டு, பின் பிணையில் விடுதலையானார்.

இந்தநிலையில், நேற்று முன்தினம் கொல்கத்தாவின் கிழக்குப் பகுதியில் நானா தங்கா பகுதியில் ஏழைகள் வசிக்கும் குடிசைப்பகுதிகளை அகற்ற அரசு உத்தரவிட்டிருந்தது. இதற்குக் கண்டனம் தெரிவித்து கொல்கத்தாவைச் சேர்ந்த இந்திய அறிவியல் கல்வி ஆராய்ச்சி நிலையத்தின், பிரபல மரபணு உயிரியல் விஞ்ஞானி பர்தோ சரோதி ராய் என்பவர், அரசுக்கு எதிராக மக்களைத் திரட்டி பேரணி நடத்தினார். அப்போது பொலிஸார் அவரைக் கைது செய்தனர். இதனைத்தொடர்ந்து, மாநிலம் முழுவதும் உள்ள விஞ்ஞானிகள் கொந்தளித்துள்ளனர். மம்தாவின் அராஜகப் போக்கை பல்வேறு விஞ்ஞானிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

மேலும், இதுதொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து முறைப்பாட்டு மனு கொடுத்து இந்த விவகாரத்தில் பிரதமர் தலையிட்டு மம்தா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ)

# வைத்தியசாலையில் குழந்தைகள் விற்பனை

### உத்தரப் பிரதேசத்தில் இரு வைத்தியர், 5 ஊழியர் கைது

உத்தரப் பிரதேசத்தின் அம் ரோஹாவில் குழந்தைகள் விற்பனை தொடர்பாக கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து அங்குள்ள அரச வைத்தியசாலை வைத்தியர்கள் இருவரும் ஊழியர் ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உத்தரபிரதேசத்தில் குழந்தைகள் விற்பனை குறித்து செய்திகள் வெளியானதும் இது குறித்து விசாரணை நடத்தப்படும் என முதல்வர் அகிலேஷ் யாதவ் தெரிவித்திருந்தார்.

உத்தரப் பிரதேசத்தின் அம்ரோஹாவில் உள்ள அரசு வைத்தியசாலை குழந்தைகள் விற்பனை மையமாகவே மாறியிருந்ததை சி.என்.என்.தொலைக் காட்சி வெளிச்சம் போட்டுக் காட்டியது.

ஏழை பெற்றோர்களிடம் இருந்து குழந்தைகளைத் திருடி அவற்றை மருத்துவமனை ஊழியர்கள் அதிக தொகை கேட்பவர்களுக்கு விற்று வருவதை இந்தத் தொலைக்காட்சிகள் சுட்டிக் காட்டியது.

இதைத்தொடர்ந்து இரு வைத்தியர்கள் மற்றும் 5 ஊழியர்களுக்கு எதிராகப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். (வ)

# ஹசாரே சிலைக்கு அனுமதி மறுப்பு அவரின் ஆதரவாளர்கள் கொதிப்பு

குர்கான், ஏப்.18

அரியானாவில் அன்னா ஹசாரே சிலை வைக்க அனுமதி மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட மோதலில் ஹசாரே ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

அரியானா மாநிலம் குர்கான் நகரில் ஊழலுக்கு எதிராகப் போராடி வரும் சமூகஆர்வலர் அன்னா ஹசாரேயின் ஆதரவாளர்கள் அவரின் முழு உருவச் சிலை வைக்க முடிவு செய்தனர். இதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை குர்கானின் சௌக் செக்டர் பகுதியில் இடம் தெரிவு செய்தனர்.

250 கிலோ எடையுடன் 4.5 அடி உயரமுள்ள இந்த 2 சிலையை வைக்க முயற்சித்தனர். எனினும் பொலிஸார் சிலை வைக்க சட்டப்படி நகராட்சி நிர்வாகத்திடம் அனுமதி பெற்று, நகராட்சி கூறும் பகுதியில் தான் வைக்க வேண்டும் என்று கூறி அனுமதி மறுத்தனர். அதை அடுத்து கொதிப்படைந்த ஆதரவாளர்கள் பொலிஸாருடன் கலாட்டாவில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக பி.எல்.கட்டாரியா, அப்துல் , புரான்சந்த் ஜோஷி, காலுராம் ஆகிய நான்கு பேர் மீது பொலிஸார் வழக்குப் பதிவுசெய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தினர். அவர்களை 14 நாள் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். (வ)

# இந்திய ரிசர்வ் வங்கியின் வட்டி விகிதம் 50 புள்ளிகளால் அதிரடியாகக் குறைப்பு

டில்லி, ஏப்.18

இந்திய ரிசர்வ் வங்கி ரெபோ ரேட் (Repo Rate) எனப்படும் வங்கிகளுக்குக் வழங்கப்படும் கடனுக்கான வட்டி விகிதத்தை முதன் முறையாக மூன்று வருடங்களின் பின்னர் 50 புள்ளிகள் குறைத்துள்ளது. இதேவேளை வங்கிகள் ரிசர்வ் வங்கியில் இருப்பு வைக்க வேண்டிய தொகை யான சி.ஆர்.ஆரை (cash reserve ratio&CRR) உயர்த்த வில்லை.

இதன்மூலம் வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கியிடமிருந்து குறைந்த வட்டியில் கடன் கிடைக்கும். மேலும் வங்கிகள் ரிசர்வ் வங்கியில் இருப்பு வைக்க வேண்டிய தொகையை அதிகரிக்காததால், வங்கிகளிடம் அதிகளவில் பணம் புரளும். இந்தப் பணத்தை வங்கிகள் அதிகளவில் பொதுமக்களுக்குக் கடனாக வழங்க முடியும். குறிப்பாக மக்களுக்குக் குறைந்த வட்டியில் வீட்டுக்கடன் உள்ளிட்ட கடன்கள் கிடைக்கும்.

வங்கிகள் மக்களுக்குத் தரும் கடனுக் கான வட்டி மிக அதிகமாக இருப்பதால், பொதுமக்கள், தொழில் நிறுவனங்கள் வங்கிக் கடன் வாங்குவதை முடிந்தவரை தவிர்த்து வந்தனர். இதனால், நாட்டில் பணப் புழக்கம் குறைந்ததோடு, நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் சரிந்து வருகிறது.

இதையடுத்து வங்கிகளுக்குக் கொடுக் கப்படும் தனது கடனுக்கான வட்டியை ரிசர்வ் வங்கி குறைக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. இந்தக் கோரிக்கையை மத்திய அரசும் ஏற்றது. ஆனால், அதிகபட்சமாக 25 புள்ளிகள் வரை தான் ரெபோ ரேட்டை ரிசர்வ் வங்கி குறைக்கலாம் என்று எதிர் பார்க்கப்பட்டது.

ஆனால், அதிரடியாக 50 புள்ளிகள் வரை குறைத்துள்ளது ரிசர்வ் வங்கி. இது கடந்த 3 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகப்பெரிய வட்டிக்குறைப் பாகும். 3 ஆண்டுகளுக்கு முன் 8-9 சதவீதமாக இருந்த நாட்டின் வளர்ச்சி, இப்போது 6 சதவீதமாக சரிந்துள்ளது. இதற்கு அதிகமான வட்டி விகிதங்களே முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது. இதையடுத்தே இந்த வட்டி விகி தக் குறைப்பை மத்திய அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுய மதிப்பிடல்

(12)

### பிராணாயாமம்

நிமிர்ந்து அமர்ந்து கொள்ளுங்கள். வலதுகை, மோதிர விரலால் இடது நாசியை அடைத்து வலது நாசி வழியாக மூச்சை உள் இழுத்து உடன் பெருவிரலால் வலது நாசியை அடைத்து இடது நாசி வழியாக மெதுவாக மூச்சை வெளிவிடவும். இதுபோல் 20 தடவைகள் செய்யவும்.

பின் வலது நாசியைப் பெருவிரலால் அடைத்து இடது நாசி வழியாக மூச்சை உள் இழுத்து உடன் இடது நாசியை மோதிர விரலால் அடைத்து வலது நாசி வழியாக மூச்சை மெதுவாக வெளிவிடவும். இது போல் 20 தடவைகள் செய்யவும்.

இப்பொழுது வலது நாசி வழியாக மூச்சை இழுக்கவும். உடனே இடது நாசியால் மூச்சை வெளிவிடவும். உடனே இடது நாசியில் மூச்சை உள் இழுக்கவும். வலது நாசியில் மூச்சை வெளிவிடவும். உடன் வலது நாசியால் இழுத்து இடது நாசியில் வெளிவிடவும். இடது நாசியில் இழுத்து வலது நாசியில் வெளியிடவும். 20 தடவைகள் செய்யவும்.

இப்பொழுது வாய்வழியாக (விசில்போன்று உதட்டைக் குவித்து) மூச்சை உள் இழுக்கவும். உடன் வாயை மூடி இரு மூக்கு வழியாக மெதுவாக மூச்சை வெளியிடவும். இதுபோல் 20 தடவைகள் செய்யவும்.

இரு நாசித் துவாரத்தின் வழியாக மெதுவாக முடிந்த அளவு மூச்சை உள் இழுக்கவும். அந்த நிலையில் உங்களால் முடிந்த அளவு மூச்சடக்கியிருக்கவும். பின் மெதுவாக இரு நாசித் துவாரத்தின் வழியாக வெளிவிடவும். இதுபோல் 10 முறைகள் செய்யவும்.

### யோகாசனங்கள்

யோகாசனங்கள் உடலுக்கு மட்டுமல்ல; மனதுக்கும் தெம்பும் புத்துணர்ச்சியும் ஊட்டுவனவாகும். அந்த வகையில் வாசகர்கள் எளிமையாகப் பயிற்சி செய்யத் தகுந்த யோகாசனங்கள் நான்கை வழங்கியுள்ளோம். இந்த யோகாசனங்களைப் பயிற்சி செய்து வந்தால் மனோபலம், புத்துணர்ச்சி, ஞாபகத்திறன், நேர்மறைச் சிந்தனை ஆகியன உண்டாகும்.

### பத்மாசனம்

பத்மம் என்பதற்குத் தாமரை என்று பொருள். குளத்தின் நீர்மட்டம் எவ்வளவு உயர்ந்தாலும் தாமரை மலரை மூழ்க வைக்க முடியாது. அதுபோல் எத்தனை நோய் வந்தாலும் இவ்வாசனம் செய்பவரைப் பாதிக்காது. தாமரை நிமிர்ந்திருப்பது போல நோயை நீக்கி ஆரோக்கியம் பெற்று தலைநிமிர்ந்து நிற்க முடியும்.

விரிப்பில் கிழக்கு நோக்கி இரு கால்களையும் நீட்டி அமரவும். வலது காலை மடித்து வலது கால் பாதத்தை இடது தொடையில் வைத்து வயிற்றை ஒட்டியபடி கொண்டு வரவும். இடது காலை மடித்து இடது கால் பாதத்தை வலது தொடை மீது வயிற்றை ஒட்டியபடி கொண்டுவரவும்.

உங்கள் முதுகெலும்பு நேராக இருக்க வேண்டும். கை விரல்களை நேராக வைத்து சின் முத்திரையில் பெருவிரல் ஆள்காட்டி விரலை மடக்கி விரல்கள் விரிப்பில் படும்படி வைக்கவும்.

கண்களை மூடிய நிலையில் முதலில் ஒரு நிமிடம் மெதுவாக மூச்சை இழுத்து பின் மெதுவாக மூச்சை வெளியே விடவும். மூச்சிலே கவனம் செலுத்தவும். பின் மெதுவாகக் கால்களை அகற்றி கைகளை அகற்றி சாதாரண நிலைக்கு வரவும்.

சின் முத்திரை என்பது கையின் சுண்டுவிரல், மோதிரவிரல், நடுவிரல் மூன்றும் மீண்டு இருக்க ஆள்காட்டி விரல் கட்டை விரலின் நுனியைத் தொட வேண்டும். இதுவே சின்முத்திரை ஆகும். இந்த ஆசனம் ஆரம்பத்தில் எளிதாக வராது. ஒவ்வொரு காலாகப் போட்டு பழக நாளடைவில் எளிதாகி விடும்.

### பலன்கள்

பத்மாசனத்தைத் தினமும் பயிற்சி செய்து வந்தால், மன ஒருமைப்பாடு கிட்டும். ஞாபகசக்தி பெருகும். மூளைக்கு ரத்தம் நன்கு பாய்வதால் சுறுசுறுப்பாக இயங்கலாம். கோபம், டென்ஷன் குறையும்.

### மயூராசனம்

விரிப்பில் முழங்கால்களை மடித்து மண்டியிட்டு அமரவும். இரண்டு உள்ளங்கைகளையும் முழங்கால் மூட்டுகளுக்குச் சற்றுமேலே பதிய வைத்துக் கொள்ளவும். இது முதல் நிலை.

பிறகு கைகளை முன்பக்கம் தரையில் உள்ளங்கைகளைத் திருப்பி ஊன்றிக் கொள்ளவும். அதாவது கை விரல்கள் முழங்கால்களை நோக்கி இருக்க வேண்டும். இந்தநிலை குழந்தைகள் தவழ்ந்து செல்லும் நிலையைப் போல் இருக்கும். இது இரண்டாவது நிலை.

முழங்கைகளின் மீது வயிற்றை ஊன்றவும். உடல் பளு முழுவதையும் கைகள் தாங்கிக் கொண்டிருக்கும். இவ்வாறு செய்யும்போது, உங்கள் முழங்கால்கள் தாமாகவே தரையிலிருந்து மேலே எழும்பும். கால் விரல்கள் மட்டும் தரையில் ஊன்றியிருக்கும். இது மூன்றாவது நிலை.

பிறகு உடலை முன்னுக்குக் கொண்டு வந்து, கால் விரல்களைத் தரையிலிருந்து மேலே தூக்கவும். இதுவே மயூராசனத்தின் பூரண நிலை. சுவாசத்தை உங்கள் வசதிக்கேற்ப உள்ளிழுத்து வெளிவிடவும். இது நான்காவது நிலை.

இந்த ஆசனத்தில் 10 வினாடிகள் முதல் 1 நிமிடம்வரை செய்யலாம். இவ்வாறு 3 முதல் 6 தடவை செய்யலாம்.

மயூராசனத்தை ஒரே நாளில் செய்துவிட முடியாது. ஒவ்வொரு நிலையாக இரண்டு மூன்று நாள்கள் பயிற்சி செய்து முடிவில் பூரண நிலையை அடைய முடியும்.

### பலன்கள்

மயூராசனத்தைத் தொடர்ந்து பயிற்சி செய்து வந்தால், சோம்பலும் மந்தமும் விலகி, சுறுசுறுப்பு உண்டாகும். ஜீரண சக்தி அதிகரிக்கும். இரவில் நன்றாக உறக்கம் வரும். அதனால் காலையில் புத்துணர்ச்சியோடு நம் கடமைகளைச் செய்ய முடியும்.

*(தொடரும்)*

-ஷிவேந்த்ரா

---

அரசை மட்டும் நம்பியிராது

# வேலை வாய்ப்புகளுக்காக தனியாரையும் நாடுங்கள்

## யாழ். அரச அதிபர் அறிவுரை

**இளைஞர், யுவதிகள் அரசு வேலைதரும் என்று இருக்காமல் தனியார் நிறுவனங்களையும் வேலைகளுக்காக நாட வேண்டும். இளைஞர்களை அதிகளவில் இணைத்துக் கொள்வதில் தனியார் நிறுவனங்களும் அதிக அக்கறை செலுத்த வேண்டும்.**

பண்டத்தரிப்பு, ஏப். 18

இளைஞர், யுவதிகள் அரச வேலைகளை மட்டும் எதிர்பார்த்துக்கொண்டிருக்காமல் தனியார் துறையில் வேலைவாய்ப்பு மற்றும் சுய தொழில் வேலை வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாவட்டச் செயலகத்தினால் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் யாழ்ப்பாணத்திலே 38000 இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி இருக்கின்றனர். குறிப்பாக யாழ்ப்பாணம் சனத்தொகையின் 10 வீதமானோர் வேலையின்றி இருக்கின்றார்கள். இவர்களில் 2600 பட்டதாரிகளும் உள்ளடங்குகின்றனர். 2600 பட்டதாரிகளுக்கும் உடனடியாக அரசு வேலை வழங்குவது தற் போதைக்கு நடைமுறை சாத்தியமற்றதாகும்.

எனவே இளைஞர், யுவதிகள் அரசு வேலைதரும் என்று இருக்காமல் தனியார் நிறுவனங்களையும் வேலைகளுக்காக நாட வேண்டும். இளைஞர்களை அதிகளவில் இணைத்துக் கொள்வதில் தனியார் நிறுவனங்களும் கூடிய அக்கறை செலுத்த வேண்டும்.

இளைஞர்கழகங்கள், தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரிகள் ஊடாக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை அளிக்கக் கூடிய கருத்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்தால் சம்மந்தப்பட்ட அரச, அரசசார்பற்ற நிறுவனங்களைத் தொடர்புகொண்டு நிதி பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பேன் - என்றார்.

(ச-130)



கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தில் இயங்கும் சுப்பிரமணிய மாலதி முன்பள்ளிச் சிறார்களுக்கான கணினிப் பயிற்சி நிலையத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சமூக சேவையாளர் மாணிக்கம் சுப்பிரமணியமும் அவரது பாரியாரும் இணைந்து நிலையத்தை நாடா வெட்டித் திறந்து வைக்கின்றனர்.

# மாணவரே வாசிப்புக்கு நேரத்தை ஒதுக்குங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.18

மாணவர்கள் தினமும் ஒரு மணிநேரமாவது வாசிப்புக்கு நேரத்தை ஒதுக்குங்கள். இது மனிதனின் செயற்திறனையும் சிந்தனா சக்தியையும் வெளிக்கொணரும் என்று நவாலி ஹேமலதா ஞாபகார்த்த நிறுவனப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சுந்தரராஜன் தெரிவித்தார்.

நவாலி ஹேமலதா அபிவிருத்திக் கூட்டத்தில் நூலக வாசிப்புத் திறனும் கல்வி அபிவிருத்தியும் என்னும் தலைப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் 54 பொது நூலகங்கள் உள்ளன. 784 சனசமூக நிலையங்கள் உள்ளன. இதில் குறிப்பிட்ட சில சன சமூக நிலையங்கள் நூலகமாகவும் படிப்பகமாகவும் இயங்குகின்றன. இவ்வாறான நூலகங்களில் ஒன்று நவாலி ஹேமலதா ஞாபகார்த்த நூலகம். இந்த நூலகத்தில் சிறுவர் முதல் முதியவர்கள் வரை பயன்படக் கூடியவகையில் நூல்கள் உண்டு.

தொழில்நுட்ப வசதி கூடி இன்று உலகம் சுருங்கிவிட்டது. நூல்கள் வாசிப்பு திறன் என்பது மாணவர்களிடம் அருகிச் செல்கின்றது.

உள்ளூராட்சி ஆணையாளர் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோர் நூலகங்களை வலுப்படுத்தப் பல திட்டங்களை முன்வைத்துள்ளனர். பல பரிமாணங்களை அறிமுகப்படுத்துகின்றனர். எனினும் இந்தச் செயற்பாடு இதுவரை வலுப்பெறவில்லை.

எனவே பாடசாலை மாணவர்களின் வாசிப்புத் திறனை அதிகரிக்கப் பல ஊக்குவிப்புக்களை வழங்க அனைவரும் முன்வர வேண்டும்- என்றார்.

(ச)

# கரவெட்டிக் கோட்ட சித்திரப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.18

கரவெட்டிக் கோட்டத்தில் சித்திரப் போட்டி அண்மை யில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களின் விவரம்:-

**தரம் 1 கிறுக்கல் சித்திரம்**

ச.தக்ஷா (நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை), றோ.தர்மிகா (அல்வாய் சின்னத்தம்பி வித்தி.), சி. அபிஷாந் (துன்னாலை காசிநாதர் வித்தி.)

**தரம் 2 அச்சுப் பதித்தல்**

இ.அஜந் (கரணவாய் வேதாரணிஸ்வரா வித்தி), ஜெ.அபிநயா(நெல்லியடி மெ.மி.த. க.பாடசாலை), தி.தேனுஜா (வல்வெட்டி விநாயகர் வித்தி.)

**தரம் 3 கொலாஜ் சித்திரம்**

லி.திலக்ஷன் (உடுப்பிட்டி அ.மி கல்லூரி.), ச.அபினா (கரவெட்டி விநாயகர் வித்தி.) பு.பிரணவன் (அல்வாய் சின்னத்தம்பி வித்தி.).

**தரம் 4 தரப்படும் காட்சிகளில் ஒன்று**

லோ.ஜனோஷன் (தேவரையாளி இந்துக் கல்லூரி), செ.சந்தோஸ் (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.),ர.அபித்தா கரணவாய் மணியகாரன் தோட்டம்).

**தரம் 5 தரப்படும் காட்சிகளில் ஒன்று**

இ.யூட்திவ்யராஜ் (கட்டைவேலி மெ.மி.த.க.பாடசாலை) ச.றெனோஜன் (வல்வெட்டி இ.த.க.பாடசாலை) ந.சங்கீர்த்தனன் (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி). (எ-253)

# பதவி உயர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.18

வலி.மேற்குப் பிரதேச சபையில் சிரேஷ்ட வருமான மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய ரி.சிறிகாந்தன் வருமானப் பரிசோதகராகத் தரமுயர்த்தப் பட்டுள்ளார். உள்ளூராட்சி நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் பதில் செயலாளர் இ.இளங்கோவன் பதவி உயர்வுக்கான நியமனக் கடிதத்தை வழங்கியுள்ளார்.

(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## தன்னை ஒறுத்தல் முக்கியம்

இந்தியாவுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுக்கப் போராட்டிய தலைவர்கள் பலர். ஆனால், காந்தி மட்டுமே தேசத் தந்தையாகவும் மகாத் மா ஆகவும் போற்றப்பட்டார். காரணம், நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் தன்னை ஒறுக்க அவர் துணிந்தமை. விடுதலைக்காகவும் மக்கள் உரிமைக்காகவும் அவர் போராடினார். சிறைகளில் அடைபட்டார்.

தென்னமெரிக்காவுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்த அதன் தந்தை நெல்சன் மண்டேலா, தொடர்ச்சியாக 25 ஆண்டுகள் சிறையில் கிடந்தார். மக்களின் சுதந்திரத்துக்காக ஆட்சியாளர்களுக்குப் பணிய மறுத்து தன் சுகபோகங்களை ஒறுத்தார். விடுதலைக்காகத் தன்னையே தந்தார்.

இவர்கள் இருவரும் நன்கு அறிமுகமான உலகத் தலைவர்கள். எனினும் இவர்களைப் போன்று, நாட்டின் சுதந்திரத்துக்காகவும் மக்களின் உரிமைகளுக்காகவும் போராடியவர்கள் ஏராளம் பேர் இருக்கிறார்கள்.

இந்த வரிசையில் இப்போது வந்திருப்பவர், மியன்மாரின் ஜனநாயகத் தலைவி ஆங் சான் சூகி. காந்தியைப் போல், நெல்சன் மண்டேலாவைப் போல் சூகியும் பல வருடங்களைச் சிறையில் கழித்தவர். மியன்மாரின் இராணுவ அரசு அவரை 15 ஆண்டுகள் வீட்டுக் காவலில் வைத்திருந்தது. 1945 ஜூன் 19 பிறந்த சூகி, மியன்மரின் ஜனநாயக தேசிய லீக் கட்சியின் தலைவி.

சூகியின் தந்தை ஆங் சான், பிரிட்டிஷாரிடம் இருந்து நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்தவர். நவீன பர்மிய இராணுவத்தை உருவாக்கியவர். ஆனால் 1947இல் சுதந்திரம் கிடைத்த ஒரு வருடத்தில் அவரது எதிரிகளால் கொல்லப்பட்டார்.

சூகி இந்தியா, அமெரிக்கா சென்று படித்தார். கலாநிதிப் பட்டம் வரை பெற்றார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் வாழ்ந்தபோது மிச்சேல் ஆரிஸ் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். 1988 அவர் மியன்மாருக்குத் திரும்பினார். தனது மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார். அங்கேயே தங்கி விட்டார். அரசியலில் ஈடுபட்டார். 1990இல் நடந்த தேர்தலில் அவரது கட்சி, 485 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 392 இடங்களைக் கைப்பற்றி வென்றது. ஆனால், தேர்தலை ரத்துச் செய்த இராணுவ அரசு சூகியை சிறை வைத்தது.

மியன்மாரின் இராணுவ அரசு அவருக்குப் பல வழிகளில் துன்பம் கொடுத்தது. 1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவரது கணவர் மியன்மாருக்கு வர அரசு அனுமதி கொடுக்கவில்லை. 1999இல் அவரது கணவர் நோய்வாய்ப்பட்டு இறந்தபோதும் சூகியால் செல்ல முடியவில்லை. வீட்டுக் காவலில் இருந்தார். அவரது குழந்தைகள் அவரை விட்டுப் பிரிந்து லண்டனில் தான் வசித்தார்கள்.

2010ஆம் ஆண்டு நிரந்தரமாக விடுவிக்கப்படும் வரையில் மியன்மாரில் வாழ்ந்த 21 ஆண்டுகளில் 15 ஆண்டுகளை சூகி வீட்டுக் காவலில்தான் கழித்தார். குடும்பத்திலிருந்து பிரிக்கப்பட்டிருந்தார். முடிந்த வரையில் ஜனநாயகத் துன்புறுத்தல்கள் அனைத்துக்கும் இராணுவ ஆட்சியாளர்களால் உள்ளாக்கப்பட்டார்.

ஆனாலும் அவர் தனது மக்களுக்கான போராட்டத்தைக் கைவிடவில்லை. அமைதியாக ஜனநாயக ரீதியாகத் தன்னை ஒறுத்து மக்களுக்காகச் சிறை இருந்தார். அதன் பயனாக இப்போது மியன்மாரில் மீண்டும் ஜனநாயகம் தழைத்தோங்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

ஜனநாயக ரீதியான போராட்டங்கள் அனைத்திலும் சிறந்த தலைவர்கள் தம்மை ஒறுத்துத் தமது மக்களுக்காகச் செய்த அர்ப்பணங்களே விடுதலையைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது......

# வீழ்ந்து விடாத வீரம் மண்டியிடாத மானம் ?

■ செந்தூரி

வாழ்ந்த இனமொன்று வீழ்ந்து போனதற்கான பின்புலமாக, அவ்வினத்தின் கூறுகள் கொண்டிருந்த பொதுநலமல்லாத, சுய இச்சைகளே முதன்மைக் காரணம் என்கின்ற பழி பெரிதினும் பெரிது. இழிவினும் இழிவு! இனமொன்றினது இருப்பை இல்லாது துடைத்தழிப்பதற்கு உயிர்பலி ''மட்டும்'' என்பது எப்போதுமே சரியான தெரிவல்ல. பயன்பாட்டுக்குரிய மொழிக் கூறுகளையும், பண்படுத்தலுக்குரிய கலாசாரத்தையும், சிறுகச் சிறுக சிதைப்பதே இன அழிப்பின் பொருத்தமான தெரிவென்பது சகல அடக்கியாள்வோராலும் நன்கறியப்பட்ட அரிச்சுவடி.

லெமூரியாக் கண்டத்தின் இயற்கை அழிவுகளுக்கு முன்தோன்றிய' தேயாப் புகழுடன் வேரோடிய மொழியைப் பயன்படுத்தும் பெருஞ் சமூகத்துப் பகுதியினரை வெறும் அறுபத்து ஐயாயிரத்துச் சொச்ச சதுரகிலோ மீற்றர் பரப்பளவுக்குட்பட்ட எல்லைகளுக்குள் வைத்து மூச்சடக்கி முற்றாக ஒழித்து விடலாம் என்ற முடிவு, ''வெறும் இனவாதக் கனவு'' என்கின்ற விம்பம் எம்முள் எழக்கூடும்.

இந்தத் தீவில் சிறுபான்மைச் சன அடர்த்தி கொண்ட இனத்துக்குரிய மக்களை, அவர்கள் உலகடர்ந்து வாழும் பண்பாட்டுப் பல்வகைமைக்குரிய, சர்வதேசிய பரம்பலையுடைய வீராப்புக்குரியவர்களான போதிலும் மரணத்திலும் கொடிய மரண முன் நிமிடங்களை காட்சிப்பதிவின் பின் கொன்ற தைரியம் நிச்சயம் அவசரத்திலோ, ஆத்திரத்திலோ எடுக்கப்பட்ட முடிவல்ல.

சன எண்ணிக்கைக் குறைப்பை மட்டுமல்லாது, அதனோடு தொடர்ந்த தாய், தமிழ்மொழியின் பயன்பாட்டுத் தேவைக் குறைப்பையும் தமிழ்க் கலாசாரக் கலப்பிடை ஒடுக்கலையும்கூட அடுத்தடுத்த தசாப்தங்களுக்குள் முடித்து, ஏகத்துவ இன ஆட்சி என்னும் ஏப்பம் விட முடியும் என்கின்ற அசாத்திய நம்பிக்கை! பூரணமான திட்டமிடல்களின் பின்புலத்துடனேயே இவை செயல்வடிவம் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை, சாம்பல் மேடுகளான எம்மினத்தின் முன்னாள் அடையாளங்களிலிருந்து ஏன் பாடங்கற்றுக் கொள்ள மறக்கின்றோம்? அல்லது மறுக்கின்றோம்? என்பது எல்லா இனவுணர்வாளர்களுக்குள்ளும் தொக்கி நிற்கும் எச்சங்கள்.

நல்லெண்ணமில்லாதவொரு கள்ளெண்ணத்தை ஆழவிதைத்து வெளிப்படும் கேளிக்கைப் பொதிகளுக்குள் இலகுவில் ஈர்க்கப்படும் இயல்பைச் சுலபமாக உவமிக்க ''காய்ந்த மாடு கம்பில் விழுந்த'' ஊர் வழக்கை ஒப்புவிக்க முடியும். ''பழையன கழிந்து புதியன புகும்'' தரவேற்றப் பண்பில் ''பாலுக்கும் கள்ளுக்கும்'' வேற்றுமை காண மறுத்து சுவையரும்புகளை மூடிக் கொள்ளும் நம்பிக்கைகள், எம்முன் கடைவிரிக்கப்பட்டுள்ள இனவாதப் புரட்டுக்களினால் மூட நம்பிக்கைகளாகிப் போகின்றன. நெல்லிக் கிறஸுக்காய், யானை மார்க் சோடாவையும் கச்சான் அலுவாவுக்காய் உபாலியின் கன்டோஸ்களையும், மரவள்ளிக்கிழக்குக்காய், ஹட்டன் உரு [illegible] தனித் தேசியம் - சமஷ்டியாகச் சறுக்கி, அதிகாரப் தீர்வாக ஆறிப் போய், தெரிவுக்குழுவுக்கு ஊடல் காட்டுவது வரை, தமிழனின் தரித்திரத் தலைவிதி, அவனைத் தவிர மற்ற எல்லோராலும் எழுதப்பட்டதே வரலாறு!

இந்த முன்வகைக்குரிய ''இலகுவில் எதற்கும் எடுபட்டுப்போகும்'' பண்பின் (கொச்சையாக உமிழ்வதாயின் எச்சப் பொறுக்கித்தனம்) லேட்டஸ்ட் வரவு - பட்டாளத்தானுடன் பழக விரும்பும் நாட்டம், வர்த்தமானி வார்த்தைகளில் சொல்வதானால் ''பாதுகாப்புப் படையினர் - பொதுமக்கள் நல்லுறவு''.

''சிவில் சமூகத்தினுள் ஆயுதம் தாங்கிய படையினரின் தலையீடு அறவே வேண்டாம்'', என்று உலக மேடைகளில் கத்திக்குளறிய தொண்டைத் தண்ணீர் மீளூறும் முன்னரே, பாதுகாப்புத் தலைமையகத்தின் ஏற்பாட்டுப் போட்டியில் ஆணழகன், பெண்ணழகியாகத் தெரிவானோரின் புன்னகையிலும், முன்வரிசைப் பார்வையாளர் தகுதிக்குரிய சீருடைகளின் ஓநாய்ப் பார்வைகளிலும், எக்குத்தப்பாக சறுக்கி விழாதிருக்க எப்படிமுடிகின்றது எம்மால்?

பொலிஸ் - பொதுமக்கள் நல்லுறவு எனும் பெயரில் கிராமங்கள் தோறும் நடத்தப்பட்ட, நடத்தப்படுகின்ற பகல் பொழுது குறைகேள் மன்றங்களினால் எம் சமூகம் சந்தித்துவிட்ட மாற்றங்கள் என்ன? ''முதியோர் - நலிவுற்றோருக்கான உதவி'', ''மாற்றுத் திறனாளிகளுக்கான பயனீடுகள்'', ''முன்பள்ளிச் சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு விளையாட்டுக்கள்'', ''பாடசாலை மாணவர்களுக்கிடையிலான திறனாய்வுப் போட்டிகள்'' என்று தசாவதாரம் எடுக்கும் அந்தந்தப் பிரதேச பொறுப்பதிகாரிகள், தங்கள் தங்கள் பூட்டன் சொத்தைப் பிரித்தா பிச்சையிட்டார்கள் எங்களுக்கு?

வணிக நிலையங்களில் வலிந்து திரட்டிய, மாதாந்த ''மாமூல்'' வேட்டையின் அற்பச் சதவீதமே, இந்தக் கொண்டாட்ட கேளிக்கைகளுக்குச் செலவிடப்படும் பணம் என்பதை எத்தனை பேர் தெரிந்து வைத்திருக்கின்றோம்? ''நீதானே அவர்கள் காலத்தில் வணிகர் சங்கத் தலைவராக இருந்து, பணம் திரட்டியவன், தினங்களுக்கு கொட்டகை போட்டு, நோட்டீஸ் ஒட்டியவன்! அதேதானே இதுவும் எனும் பழசைக் கிளறிய செல்ல மிரட்டல்களில், ஆறிலக்கத் தொகைகளை அமுக்கமாகக் கறந்து விடும் அக்கிரமங்களில், எமக்கும் பங்குண்டுதானே!

கேட்கப்படும் தொகையை ''ஏந்தி'' விட்டதில் எம்மவர்களின் பங்களிப்புகளையும் நிச்சயம் நன்றியறிதலுடன் நினைவு கூர்ந்தேயாக வேண்டும். கட்டாத வீதிவரிப் பணத்துக்கு ஐநூறு, முடிந்த வாகனக் காப்புறுதிக்கு ஆயிரம், எழுத்துப் பரீட்சையுடன் நிற்கும் ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்துக்கு இரண்டாயிரம், எடுக்காத மணல் அனுமதிக்கு ஐயாயிரம், என்னவென்றே தெரியாத, காட்டு மரம், கழிவிரும்புப் பயண மாற்றீட்டுக்கு பத்தாயிரம், குடித்த பின்னால், வீதியிலோட்டி விளைவித்த கொலையை, கைபிழைபாட்டு விபத்தாய் மாற்றிவிட ஐம்பதினாயிரம் என்றும் எப்போதும் இறங்கிவிடாத [illegible]ப்பாண மாப்பிள்ளைகளின் சீதன மதிப்பீட்டுக்கு நிகராய் லஞ்ச வேகத்தையும் எகிற வைத்த பெருஞ்செயல் போற்றுதும் நாமே!

சந்தர்ப்பச் சூழ்நிலைகளினால் ஏற்படுத்தப்படுகின்ற மேற்போந்த திடீர் பணவரவு (Athome) கொண்டாட்டங்களுக்கு மேலதிகமாக, இலங்கையின் மேன்மைதாங்கிய 'காவல் யானையை' சீருடைகளில் தாங்கியுள்ள உழைப்பாளிகளுக்கு வேறு பல நிரந்தர வருமானப் பொந்துகளும் இங்குள்ளன. ''சட்ட விரோத மணல் தாங்கிய போக்குவரத்து உதவிகள் தேவைப்படுகின்ற கட்டப் பொருள் உற்பத்தியாளர்கள்'', ''எரு நிரப்பிய பார ஊர்திகளுக்குள் அரிமரம் புதைத்து, வழியனுப்புகின்ற சூழல் நேயர்கள் (?)'', ''பாடசாலைகள், ஆலயங்கள், பொதுமக்கள் கூடுமிடங்களையும் பொருட்படுத்தாமல், தண்ணீர்ப்பந்தல் வியாபாரம் செய்து, பல குடும்பங்களின் தலைமுறைச் சாபங்களை சுமக்கின்ற மதுபான விற்பனையாளர்கள்'', ''போர் தின்ற வன்னி மண்ணின், பார்வைபுகாத புதர்களிலிருந்து, வாகனங்கள், அடிச்சட்டங்கள், உலோக உதிரிகளை பொறுக்கிப் பணம் பார்க்கும் உள்ளூர், வெளியூர் தரகர்கள்'' என இங்கு சொல்லப்படாத பலவகைக்குரிய குறுநில மன்னர்களிடமிருந்தும் மாதாந்த அல்லது வாராந்த கப்பப்பணம், தாமதிக்காது வந்து நிரம்பிவிடுகின்றது.

பல தொழிலதிபர்களின் பணப் பெட்டிகளில் கணக்கிலக்கம், கணக்கு வைத்திருப்பவரின் பெயர், தென் மாவட்ட வங்கிக் கிளையின் பெயர் நிரப்பிக் கொடுக்கப்பட்ட தனித்தனி வைப்புச் சீட்டுக் கட்டுகள், முன்னறுதியாக ஒப்படைக்கப்பட்டிருப்பது, மனைவியிடமும் மறைக்கப்படும் இரகசியங்களில் ஒன்று. ஆக, எம்மில் சிலரினதும் தவறுகளை கண்டு கொள்ளாமலிருப்பதற்கு, எம் காவலர்களினால் வாங்கப்படும் பணம், ''நெல்லுக்கிறைத்தது போக, புல்லுக்குமாங்கே பொசிந்து'' சில்லறைச் சொட்டுக்களால் தெளிக்கப்படுவதே உண்மை.

எல்லாத் தேசங்களிலும் லஞ்சம் இருக்கின்றது, அங்கெல்லாம் கடமையை மீறுவதற்காக, கொடுக்கின்றார்கள், நாமோ கடமையைச் செய்யாதிருப்பதற்காக கொடுக்க வேண்டியிருக்கின்றோம்.

அரச ஊழியர்கள் என்கின்ற கோதாவில், மக்களின் வரிப் பணத்திலேயே ஊதியம் பெறுகின்ற, எமக்கான 'திக்குத் தேவர்கள்', அதே மக்களிடம் மேலதிகமான திறை பெற்று, இடுப்புப்பட்டிகளின் துளைகளை அடிக்கடி அங்குலங்களினால் வெளிநகர்த்தும் வாடிக்கையை கைக்கொண்டு வருகின்றனர்.

நவீன சுயம்வரங்களாகி விட்ட 'அழகுராணி'ப் போட்டிகளையும், தண்ணீர் ஊற்றிக் 'கவனிக்கும்' வீதியோட்டங்களையும், மதுபானப் போத்தல்களால் பரிசளித்து மகிழும் தாச்சிப் போட்டிகளையும், முகாம்களின் மையம் வரை அனுமதிக்கும் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளையும், ''தம் முயற்சியில் சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தர்களாய்'' நின்று அனுசரித்து மகிழும் ''ரெஜிமென்ட் வீரர்களின்'' விறைத்த துணிகளுக்குள் காத்திருக்கும் கபடம் ஏன் கவனிக்கப்படுவதில்லை?

(21ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிலை உடைப்பு அரசியல்

செஞ்சடையன்

கடந்த வாரத்தில் நிகழ்த்தப்பட்ட சிலை உடைப்புச் சம்பவங்கள் தற்செயலானவை அல்ல. உள்நோக்கங்களுடன் திட்டமிடப்பட்ட வகையிலேயே அது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றின் பின்புலத்தில் பேரினவாத, குறுந்தேசியவாத உள்நோக்கங்கள் இருக்கவே செய்கின்றன. அதன் மூலம் மட்டக்களப்பில் இன, மத முரண்பாடுகளை தூண்டமுடியும் என்ற நோக்கிலேயே அவை உடைக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கையில் பேரினவாதம், தமிழ்க் குறுந்தேசியவாதம், முஸ்லிம் குறுந்தேசியவாதம், மலையகப் பிர தேசவாதம் ஆகிய நான்கும் மிகக் கச்சிதமாகச் செயல்பட்டு வந்துள்ளன. இலங்கை அரசியலிலும் அவை பெரும் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளன. இது 1970களுக்குப் பின்னர் நன்கு உச்சம் பெற்றது.

அதன் பின்னர் இலங்கையின் நான்கு தேசிய இனங்களாக வளர்ச்சி பெற்றுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழர் என்போர் தேசியம் என்ற வேலிகளுக்குள் அடைக்கப்பட்டனர். அத்தகைய அடைப்புக்களுக்குள் மக்களைப் பிரித்து வைத்து அதிகாரம் செலுத்தினர் அரசியல்வாதிகள்.

அந்தத் தேசியம் மக்களை தொடர்ச்சியாக ஏமாற்றி வந்தமையே இன்று வரையான வரலாறாகும். தேர்தல் அரசியல் முதல் நாடாளுமன்ற ஆட்சி அதிகார அரசியல் வரை இத்தகைய இனவாத, மதவாத, பிரதேசவாத குறுகிய அரசியலாகவே இருந்து வருகின்றன.

இத்தகைய பின்புலத்தில் வைத்தே மட்டக்களப்பின் சிலைகள் உடைப்புச் சம்பவத்தை அணுக வேண்டியுள்ளது. கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு தேர்தல் மூலம் அடுத்த மாகாண சபை நிர்வாகம் தோற்றுவிக்கப்படும் என்றே அரச செய்திகள் கூறுகின்றன.

கிழக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் இன்னும் ஒரு வருடம் இருக்கையில் ஏன் அது முன்கூட்டியே கலைக்கப்படுகிறது என்ற கேள்வி மேல் எழும்புவது இயல்பானதாகும். எல்லாம் மஹிந்த சிந்தனை அரசாங்கத்தின் தேவைக்கானதாகவே நடைபெறுகிறது. அவ்வாறு கூறுவது ஆளும் அரசொன்றின் இருப்பிற்கான தேவைக்குரிய விடயமாகக் காண முடியாது. அது பேரினவாத நிகழ்ச்சி நிரலினது திட்டமிட்ட முன்னெடுப்பின் ஒரு முக்கிய பகுதியாகும். இந்தத் திட்டம் மகிந்த அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே நடைமுறையிலிருந்து வந்திருக்கின்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் இந்தப் பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கான திட்டம் 1935 ஆம் ஆண்டிலிருந்தே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. நாடாளுமன்ற ஆட்சி முறை எழுச்சி பெறாத அந்தக் காலத்திலேயே வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் விவசாயத் திட்டங்களையும், சிங்கள குடியேற்றங்களையும் நிறுவ முனைந்தது ஐக்கிய தேசிய கட்சி. இதே கொள்கையை நடைமுறைப்படுத்திய ஐக்கிய தேசிய கட்சியின் ஆரம்ப கர்த்தா டி.எஸ்.சேனநாயக்கா, தனிச் சிங்கள சட்டத்தையும் உருவாக்கினார். இதன் மூலம் இலங்கையில் பேரினவாதத்திற்கு அத்திவாரமிட்டார் டி.எஸ் சேனநாயக்கா.

அவரின் பேரினவாதச் சதியின் முதல் இலக்கே கிழக்கு மாகாணத்திற்கான கல்லோயா சிங்களக் குடியேற்றத் திட்டம். அதன் வளர்ச்சியையும், பாரிய எதிர் விளைவையும்தான் இன்று கிழக்கு மாகாணத்தில் காணமுடிகிறது. அதனால்தான் ''திட்டமிட்ட குடியேற்றங்களின் தந்தை'' என்ற தகுதியையும் அவர் பெற்றுக் கொண்டார்.

இத்தகைய ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னோடிகளால் தொடங்கி வைக்கப்பட்ட திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் கிழக்கிலே அம்பாறையை மையப்படுத்தியதாகவும் பின்பு திருகோணமலை மீது கண்களைப் பதித்துக் கொண்டதாகவும் அமைந்தது. அதன் காரணமாகவே கிழக்கு மாகாணம் மூவின மக்களும் சேர்ந்து வாழும் முன்னுதாரணம் மிக்க மாகாணமாக இன்று பேரினவாதிகளினால் காட்டப்படுகிறது. கிழக்கைப் போன்று வடக்கையும் மூவின மக்கள் வாழும் மாகாணமாக்கி விட்டால் இனப்பிரச்சினை உருவாக இடம் ஏற்படாது என்றே இன்றைய பேரினவாத அரசும் கூறி வருகிறது. ஆனால், மூவின மக்கள் வாழும் கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லிம் மக்கள் அமைதியாக வாழ்கிறார்களா அல்லது உள்ளக் குமுறல்களுடன் வாழ்கிறார்களா என்பதை அங்குள்ள அன்றாட நிலைமைகள் எடுத்துக் காட்டுகின்றன.

காலம் காலமாக இன ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வரும் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் எவ்வித ஐக்கியத்திற்கும் வழிகாட்டப்படவில்லை. அவர்கள் மத்தியில் துளியளவும் ஐக்கியம் ஏற்பட்டு விடாது தடுப்பதில் பேரினவாதிகள் மட்டுமன்றி குறுந்தேசிய வாதிகளும் விழிப்பாக இருந்து பிரித்து வைத்தே வருகிறார்கள். எங்கே ஒரு சிறு சம்பவம் இடம்பெற்றாலும் அதனை இன, மதக் காற்றுக் கொண்டு ஊதிப் பெருப்பித்து பதற்றத்தையும், மோதலையும் கொண்டு வந்து விடுவதில் கவனமாகவே இருந்து வருகிறார்கள். அந்த வகையில்தான் அண்மைய மட்டக்களப்பு சிலை உடைப்புக்களை நோக்குதல் வேண்டும். ஓர் இனத்தவருக்கு உரிய சிலைகளை உடைப்பது ஒரு சிலரது வேலையாகவும், அதற்குரிய நேரம் மிகக் குறுகியதுமாகவும் இருக்கலாம். உடைக்கப்பட்ட சிலைகளை மீளவும் சீரமைத்துப் புதுப்பித்துக் கொள்ளலாம். ஆனால், மேற்படி உடைப்புச் சம்பவத்தால் சகோதர இனங்களுக்கிடையில் உருவாகும் மன உடைவுகளை இலகுவில் சீர்செய்ய முடியாது. அவை ஆழப்பதிந்தவையாகி குரோத உணர்வுகளுக்கும் மோதல் நிலைகளுக்குமே இட்டுச் செல்லக்கூடியவையுமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களும், முஸ்லிம்களும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் அந்நியோன்னியமாக வாழ்ந்து வருவதாக வெறும் பேச்சுக்குக் கூறிக்கொள்ள முடியுமே தவிர இருபுறத்திலும் பரஸ்பர நம்பிக்கையீனங்களும், ஒருவரை ஒருவர் நிராகரித்த போக்குகளுமே வளர்ந்து நிற்கின்றன. தமது பொது எதிரி ஆளும் வர்க்கப் பேரினவாதிகள் என்பதை அறிவு பூர்வமாகவும் நடைமுறைவாயிலாகவும் எடுத்து விளக்கி ஐக்கியத்தை முன்னிறுத்துவதற்குப் பதிலாக இரு புறத்து அரசியல்வாதிகளும் குரோத உணர்வுகளைத் தூண்டுவதிலேயே அக்கறையாக இருந்து வருகிறார்கள். கிழக்கிலே முஸ்லிம்களின் காணிகளைத் தமிழர்களும் தமிழர்களின் காணிகளை முஸ்லிம்களும் பிடித்து வைக்க முற்படுவது பிரச்சினையேயாகும். ஆனால், அதற்கும் அப்பால் கிழக்கின் வளமான நிலங்கள் சிங்கள, பௌத்த பேரினவாதிகளால் அபகரிக்கப்படுகின்றன.

கிழக்கின் சம்பூரை இலங்கை, இந்திய அரசுகள் இணைந்து பறித்து பாரம்பரிய மக்களை அகதிகளாகத் தொடர்ந்து வைத்திருக்கின்றன. ஆழிப்பேரலையால் வீடிழந்த முஸ்லிம் மக்களுக்கு சவூதி அரசாங்கத்தால் கட்டப்பட்ட 500 வீடுகளைப் பயனாளிகளுக்கு கையளிப்பதைப் பேரினவாதிகள் நீதிமன்ற வழக்கின் மூலம் தடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களது நியாயம் அவ்வீடுகளில் அரை வாசியை சிங்களவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டும் என்பதாகும். ஆனால், ஆழிப்பேரலையால் அப்பகுதியில் சிங்களவர்கள் பாதிக்கப்படவில்லை. இது மட்டுமன்றி அப்பிரதேசத் தில் அவர்கள் எவரும் வாழவில்லை என்றே கூறப்படுகிறது. இவ்வாறு தமக்கெதிராகப் பேரினவாதிகளால் முன்வைக்கப்படும் எந்த தீமைகளுக்கும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றாக இணைந்து குரல் கொடுக்க முடியாத நிலைதான் தொடர்கிறது. அந்தளவிற்கு கிழக்கு மக்களைப் பிரித்து ஆளுவதில் பேரினவாத அரசு வெற்றிகண்டு வருகின்றது. அதற்கு கிடைத்த இன்னுமொரு வெற்றியாகத்தான் இந்த சிலையுடைப்புச் சம்பவங்களும் அமைந்திருக்கின்றன.

# போக்குவரத்து இடர்பாடுகள்

சோபனா

''பணம் இருக்கிறதுகள் ஆட்டோ பிடிச்சுப் போவினம். ஆனா நாங்கள் அன்றாடம் வயித்தை நிரப்புறதே பெரும்பாடு. இதில வேற போக்குவரத்துச் செலவுக்கும் பணம் தேவை என்டால் எங்க தான் போறது! கால் ரெண்டும் தான் வழித்துணை என்டதைப் போல, எங்கட போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறம்''.

குறுந்தூரப் பயணங்களின் போது, போக்குவரத்துப் பிரச்சினைகளை எதிர்கொள்பவர் ஒவ்வொருவரினதும் நிலைப்பாடு இதுதான். பணம் இருந்தால் தான் இப்பொழுது எந்தத் தேவைகளையென்றாலும் நிறைவேற்ற முடியும் எனும் கடப்பாடு சமுதாயத் தின் மத்தியில் வந்து விட்டது.

ஏகிறிக் கொண்டிருக்கும் விலைவாசிகளுக்கு ஏற்றால் போல் சமுதாயத்தினர் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர் இல்லை, இசைவாக்கம் அடைந்து விட்டார்கள் என்று தான் கூறவேண்டும்.

இப்படியானதொரு மாற்றம் வசதி படைத்தவர்களைப் பெரிதாகத் தாக்கப் போவதில்லை. ஆனால் அன்றாட சீவியத்திற்காகத் திண்டாடும் வறிய மக்களுக்கு இது வேதனைக்குரிய விடயமாகும்.

நகர்ப்புறங்களில் போக்குவரத்துப் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் குறைவு. ஆனால் கிராமப் புறங்களின் குறுந்தூரப் பயணங்களை மேற்கொள்பவர்கள் எதிர்கொள்ளும் போக்குவரத்து இடர்ப்பாடுகள் சொல்லில் அடங்கா.

பொது மக்களுக்கான போக்குவரத்துச் சேவைகளில் அரச மற்றும் தனியார் பேருந்துகள் ஈடுபடுத்தப்பட்டாலும், இந்த போக்குவரத்து சேவைகள் மக்களுக்குப் பயனுள்ளதாக அமைகின்றதா?

போருக்கு முன்னரான காலம், போருக்குப் பின்னரான காலம் என நடைபெறும் அபிவிருத்திகளைப் பட்டியல் இடுவதை விட, இதுவரை நிறைவேற்றப்படாத தேவைகள் தொடர்பாக கருத்தில் கொண்டு அதற்கான அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டியதே கட்டாயமாக உள்ளது.

கிராமப் புறங்களின் ஊடாக நடத்தப்பட்ட குறுந்தூரப் போக்குவரத்துச் சேவைகள் அதிகளவு தற்போது நிறுத்தப்பட்டுள்ளன. இவை எதற்காக நிறுத்தப்பட்டன? அதற்கான மாற்று நடவடிக்கைகள் என்ன? என்பது தொடர்பான தீர்மானங்கள் எவை என்பது பொது மக்களுக்கு அறிவிக்கப்படவில்லை.

அரச சொத்துகள் பொதுமக்களுக்கு உரித்தானதாக இருக்கும் போது இந்தச் சொத்துக்கள் ஏன் பொது மக்களுக்கு வழங்கப்படவில்லை.

பொதுமக்களின் அத்தியாவசியத் தேவைகளில் போக்குவரத்துச் சேவையானது பிரதானமாக உள்ளது. இவற்றைச் சரிவரப் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசிடமே உள்ளது.

அரச பேருந்துகள், தனியார் பேருந்துகள் அனைத்தும் மக்களிடம் இருந்து பணம் வசூலிக்கும் செயற்பாட்டையே தாராளமாக மேற்கொண்டு வருகின்றன. இந்தப் பண வசூல் நாளாந்தம் அதிகமானதாகக் கிடைக்க வேண்டும் என்பதே அவர்களுடைய எதிர்பார்ப்பாகும்.

குறிப்பாக அரச, மற்றும் தனியார் பேருந்துகள் சன நடமாட்டம் அதிகமாக உள்ள வழிகளின் ஊடாகவே தமது போக்குவரத்துச் சேவைகளை வழங்குகின்றன. இதனால் சனநடமாட்டம் குறைந்த பிரதேசங்களில் குறுந்தூர வழிகளில் போக்குவரத்துச் சேவைகள் நடத்தப்படுவதில்லை.

அரச பேருந்துகள் யாவும் தற்போது தனியார் பேருந்துகளுக்கு அடங்கிப் போவது போல, தமக்கான இடத்தைத் தனியார் பேருந்துகளுக்குத் தாராளமாக விட்டுக் கொடுத்துள்ளன. மாறாக குறுந்தூர பாதையினுடான போக்குவரத்துச் சேவையினையும் பயணிகளின் எண்ணிக்கையினைக் காரணம் காட்டி இடைநிறுத்தியுள்ளன.

அன்றாட போக்குவரத்துத் தேவைகளுக்காகப் பேருந்துகளுக்கு காத்திருக்கும் வறிய மக்கள் குறிப்பாக குறுந்தூரப் பாதையூடாகப் போக்குவரத்தினை மேற்கொள்வோர் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

தனியார் பேருந்துகள் பண வசூலை மட்டுமே இலக்காக வைத்து சேவைகளை நடத்துவதால் சனநடமாட்டம் குறைந்த குறுந்தூரப் பாதைகளின் ஊடாக சேவைகளை வழங்க முன்வரமாட்டா.

குறுந்தூரப் பாதைகளின் ஊடாக சேவைகள் இடைநிறுத் தப்பட்டதால் அப்பகுதிகளில் உள்ள பொது மக்களில் அன்றாடம் பணிகளுக்குச் செல்லும் அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், வைத்தியசாலைக்குச் செல்வோர் போன்றவர்கள் பெருந்தெருக்களைப் பயணத்திற்காக நாட வேண்டிய நிலை உள்ளது.

பெருந்தெருக்கள் ஊடாகவே அதிகமான போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறுவதால் கிராமப்புறங்களின் நான்கைந்து கிலோமீற்றர் தொலைவில் உள்ளோர் நடையில் வந்து பெருந்தெருக்களில் பேருந்துச் சேவையினைப் பெற்றுக் கொள்கின்றனர்.

இதனை விட குறுந்தூரப் பயணத்திற்காக முச்சக்கர வண்டி, சிற்றூர்திகளுக்கு மாதாந்த வாடகைப் பணம் செலுத்திச் செல்வோரும் உள்ளனர்.

தொடரும் இத்தகைய போக்குவரத்து இடர்பாடுகளால் கிராமங்களில் உள்ளோரின் அன்றாட செயற்பாடுகள் பாதிப்படைவதுடன் அவர்களது வாழ்க்கைச் செலவீனமும் அதிகரித்த வண்ணமே உள்ளது.

இதனைவிட குறுந்தூரப் பாதைகளின் ஊடாக பயணங்களை மேற்கொள்வோர் நடந்து செல்லும் போது தேவையற்ற பிரச்சினைகளை எதிர்கொள்வதுடன் திருடர்களிடம் இருந்து தப்புவதற்கும் பாதுகாப்பற்றவர்களாகவும் உள்ளனர்.

குறுந்தூரப் பயணிகளின் போக்குவரத்து இடையூறுகள் தொடர்பாக பல்வேறு மட்டங்களில் அலசி ஆராயப்பட்டும் இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் பெரிதும் பாதிப்படைவது கல்விச் சமூகத்தினரே. சீரற்ற போக்குவரத்துச் சேவை காரணமாக பாடசாலை வரவின் வீதம் குறைவடைவதற்கு முக்கிய காரணமாக அமைவது நீண்டதூரப் பயணம் என்பதால் மாணவர்கள் பாடசாலை செல்லும் நாள்களைத் தவிர்த்து வீடுகளில் முடங்கி விடுகிறார்கள்.

இவற்றைக் கருத்தில் கொண்டு ஏற்கனவே சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பேருந்துகளை மீளவும் ஒரு தடவையேனும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பாதிப்படைந்துள்ள மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்துச் சாத்திரம்

'ஒருத்தர் எழுதும் எழுத்தை வைத்துக்கொண்டு அவர் எப்படிப்பட்டவராக இருப்பார் என்பதை ஊகித்துக்கொள்ளமுடியும்' என்று சிலபேர் கூறுகிறார்கள். அதுதான் எழுத்துச் சாத்திரம்.

மேலைத்தேய நாடுகளில் சில பத்திரிகை விளம்பரங்களைப் பார்த்தால்''இந்த வேலைக்கு விண்ணப்பம் அனுப்புபவர்கள் தங்களுடைய சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பத்தை எழுதி அனுப்பவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். இது எதற்காகத் தெரியுமா?

பல நிறுவனங்களுக்கு எழுத்துச் சாத்திரத்தில் நம்பிக்கை இருப்பதுதான் இதற்குக் காரணம்.

லண்டனில் உள்ள மிகப்பெரிய நிறுவனங்கள் வேலைக்கு ஆள்களை எடுப்பதற்கு முன்னர் எழுத்துச் சாத்திர நிபுணர்களைக் அழைத்து விண்ணப்பதாரருடைய கையெழுத்தைக் காட்டுவதும் இன்றுவரை உண்டு. எழுத்துக்கு மதிப்பெண் போடச் சொல்லுவார்கள். நிறைய விண்ணப்பங்கள் வரும்போது அவற்றைத்தெரிவு செய்வதற்கு இந்த நடைமுறையைப் பயன்படுத்துவார்கள்.

பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மன், சுவிற்சர்லாந்து, செக்கோஸ்லாவியா, இஸ்ரேல் ஆகிய நாடுகளில் எல்லாம் இந்தக் கலையில் தேர்ச்சிபெற்ற நிபுணர்களுக்கு அதிக மரியாதை. அவர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கின்றது. ஓர் ஊழியர் நேர்மையானவரா, இல்லையா, பணம் புழங்கும் இடத்தில் அவருக்கு வேலை கொடுக்கலாமா, விசுவாசமான ஊழியரா,பொய் சொல்வாரா என்பதையெல்லாம் எழுத்தைப் பார்த்து முடிவு செய்திருக்கிறார்கள்.

இத்தாலியில் 17ஆவது நூற்றாண்டிலேயே இந்தக் கலை ஆரம்பமாகியிருக்கின்றது. பிரான்ஸ் பாதிரியார் ஒருவர் 1871 இல் இப் பிரெஞ் எழுத்து சாத்திர சங்கத்தை நிறுவினார். அதன்பின் இது கொஞ்சம் கொஞ்சமாகப் பரவ ஆரம்பித்திருக்கிறது. இன்றைக்கு உலகத்திலேயே மிகப்பெரிய எழுத்துக் கலைக்கழகம் இஸ்ரேலின் டெல் அவிவ் நகரத்தில் இருக்கின்றது. அதன் கிளை லண்டனில் இருக்கின்றது.

இஸ்ரேலில் சில சமயம் நீதிமன்றங்கள் கூட எழுத்துச் சாத்திர அறிஞர்களின் அறிக்கையை ஏற்றுக்கொள்கிறார்கள். குற்றவாளிகள் உண்மையிலேயே குற்றம் இழைக்கக் கூடியவர்கள் தானா என்பதை அவர் எழுதிய எழுத்தின் வடிவத்தை வைத்துக்கொண்டு கண்டு பிடித்திருக்கிறார்கள்.

எழுத்துச் சாத்திரம் சம்பந்தமாக கடந்த 200 வருடங்களில் ஏராளமான நூல்கள் வெளிவந்திருக்கின்றன. சில பல்கலைக்கழகங்களில் இதைப் பாடமாகக் கூட வைத்திருக்கிறார்கள். இந்தக் கலை நூற்றுக்கு நூறு துல்லியமானது என்று சொல்லமுடியாது. இதை விஞ்ஞான ரீதியில் நிரூபிக்க முறையான ஆராய்ச்சிகள் எதுவும் நடத்தப்படவில்லை. ஆனாலும் ஒருவர் எழுதும் எழுத்தின் வடிவத்தை வைத்து அவரின் மனநிலையைப் புரிந்து கொள்ளமுடியும் என்பது உண்மை. உளவியல் நிபுணர்கள் இதை ஒப்புக்கொள்கிறார்கள்.

ஒருவருடைய திறமையைக் கண்டுபிடிக்க இது மிகவும் உதவும்.

கோடு போடாத வெள்ளைத்தாளில் ஒரு பேனாவால் 20 வரிகள் எழுதிக்கொடுத்தால் போதும். நீங்கள் எப்படிப்பட்டவர்கள் என்று சொல்லக் கூடிய நிபுணர்கள் பலபேர் இருக்கிறார்கள். ஆங்கில எழுத்துக்களை அடிப்படையாக வைத்து விளக்கம் கொடுப்பார்கள். இருந்தாலும் பிறமொழிகளில் எழுதுபவர்களின் குணநலனைக் கண்டுபிடிப்பதற்கும் பொதுவான விதிமுறைகள் இருக்கின்றன.

ஒருவர் பெரிதாக இடைவெளிவிட்டு எழுதினால் அவர் பரந்த நோக்கம் உள்ளவர். குறைந்த இடைவெளியில் எழுதினால் ஒழுக்கமும் கட்டுப்பாடும் உள்ளவர். ஒரு தாளில் இருபக்கமும் சமனாக இடைவெளிவிட்டு எழுதுபவர்கள் கலைநோக்கம் உள்ளவர்களாக இருப்பர். எதிலும் பட்டும் படாமலும் நடந்துகொள்கின்ற சுபாவம் உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.


ஆங்கில எழுத்துக்களில் எல்,ரி,எப் போன்ற எழுத்துக்களை அளவுக்கு அதிகமாக மேற்புறம் நீட்டி எழுதுபவர்கள் குறிக்கோள் உள்ளவர்களாக இருப்பர்.

ஜி,எச்,பி இதுபோன்ற எழுத்துக்களை அளவுக்கு அதிகமாகக் கீழ்நோக்கி எழுதுபவர்கள் பெண்கள் விடயங்களில்அதிக ஆர்வமுள்ளவர்கள். குறைவான இடைவெளிவிட்டு எழுதுபவர்கள் சிக்கனமான பேர்வழிகள்.

இஸ்ரேலில் எழுத்துச் சாத்திர சங்கத்தை நிறுவிய அன்னாகொரன் இதையெல்லாம் கூறியுள்ளார். ஆகவே நமது கையெழுத்தே எம்மைக் காட்டிக்கொடுத்துவிடும்.

சில மருத்துவர்கள் மருந்துச் சிட்டை எழுதிக் கொடுக்கிறார்களே. அதை எல்லோராலும் படிக்க முடியுமா? அதைப் படிப்பதற்குத் தனி சாமர்த்தியம் வேண்டும். சில பேரால் தான் அதுமுடியும்.

ஒருவர் கையில் ஒரு விலாசம் எழுதப்பட்ட சிட்டையை வைத்துக் கொண்டு வீடு எங்கே இருக்கின்றது என்று தேடிக்கொண்டிருந்தார். வழியில் போவோர் வருவோரிடம் எல்லாம் அந்தச் சிட்டையைக் காட்டி விசாரிக்கிறார். வாங்கிப் பார்த்தவர்கள் எல்லோருக்கும் எழுத்துப் புரியாமல் போய்விட்டது.



அதன் பின்னர், அந்த ஆள் யோசித்து விட்டு, சுற்றுமுற்றும் பார்த்தார். ஓர் ஆஸ்பத்திரி தெரிந்தது. புத்திசாலித்தனமாக அங்கே போய் மருந்துகொடுப்பவரைத் தேடிப்பிடித்தார். வைத்தியர் எழுதுவதையே புரிந்துகொள்பவர் அவர். அதனால் அவர் கையில் சிட்டையைக் கொடுத்தார். அதைவாங்கி உற்றுப்பார்த்தார் மருந்தாளர். அதன்பின் இவரைப் பார்த்து "போத்தல் கொண்டு வந்திருக்கிறீர்களா?" என்றார்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# 50 வருடங்களாக சேவையாற்றும் ஞானசம்பந்தர் கலை மன்றம்




**கர்ணன்**

ஒரு பிரதேசத்தின் வளர்ச்சி அந்தப் பகுதியில் இயங்கும் அரச சார்பற்ற உள்ளூர் நிறுவனங்களின் செயற்பாட்டில் பெருமளவில் தங்கியுள்ளது. அந்த வகையில் பல பெரியார்களின் சிந்தனையில் உருவாகி செயல்வடிவம் பெற்றது தான் பருத்தித்துறை புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றம். இந்த கலைமன்றமானது கடந்த 50 ஆண்டுகளாக ஆன்மிகம், தமிழ்மொழி, கலை, கலாசாரங்கள், ஒழுக்கவிழுமியங்களை வளர்த்து வருகின்றது. இவற்றுடன் நின்றுவிடாது சமூகப்பணிகளையும் நடத்திவருகின்றது.

இந்த மன்றமானது சனசமூக நிலையம், நூல் நிலையம், பாலர் பாடசாலை, கலை, கலாசாரம், நுண்கலைகள் ஆகிய சேவைகளோடு முதலியம்மன் ஆலயத்தையும் நிர்வகித்து நடத்தி வருகின்றது.

இந்த மன்றத்தின் சேவைகளில் முதலாவதாக 1962 ஆம் ஆண்டு தை மாதம் 19 ஆம் திகதி சனசமூக நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் புலோலி வடக்கு கிராமசேவையாளர் பிரிவில் புலோலி கிழக்கு, பருத்தித்துறையை முகவரியாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த சனசமூக நிலையத்துக்கு ஞானசம்பந்தர் கலாமன்றம் என்றே பெயர் சூட்டப்பட்டது.

ஆன்மிக ஈடேற்றத்துக்கு ஆலய வழிபாடு எத்துணை அவசியமோ அதே போல் ஒரு சமூகத்தின் கல்வி, கலாசார வளர்ச்சிக்கு ஒரு மன்றம் அவசியம் எனக் கருத்தில் கொண்டு இந்த மன்றம் உருவாக்கப்பட்டது. அத்துடன் பிரதேச இளைய தலைமுறையினரிடையே ஆன்மிகத்தை வளர்த்து, இறைநம்பிக்கையை ஏற்படுத்தி அவர்கள் மத்தியில் நல்ல ஒழுக்கத்தை உருவாக்குவதன் மூலம் அவர்கள் மத்தியில் கல்வியைப் பெற வேண்டும் என்ற ஊக்கம் தானாகவே வளரும். அதன் மூலம் கிராமத்துக்கும், நாட்டுக்கும் நற்பிரஜைகளை உருவாக்க முடியும். இதற்காக திட்டமிடப்பட்டு ஆன்மிகம், ஒழுக்கம், கல்வியை வளர்ப்பதே இந்த மன்றத்தின் பிரதான நோக்கம் ஆகும்.

சைவத்தமிழ் ஞானத்தின் திருவுருவம் திருஞானசம்பந்தர் சுவாமிகளின் திருநாமத்தை மனதில் கொண்டும், புலோலிகிழக்கு கிராமத்தின் ஒரு சமூக மக்களின் கல்வி, கலை, கலாசார வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்த கல்விமான் அமரர் வி.திருஞானசம்பந்தர் பி.ஏ.(சிறப்பு இலண்டன்) பெயரையும் முன்வைத்து இந்த மன்றத்துக்கு ஞானசம்பந்தர் கலை மன்றம் எனப் பெயர்சூட்டப்பட்டது.

அமரர் கோ.குமாரவேலுவின் சிந்தனையில் உருவான இந்த மன்றத்துக்கு வழிகாட்டியாகவும், நிதிப்பங்களிப்பாளருமாக அமரர் திருமதி புவனேஸ்வரி திருஞானசம்பந்தர் இருந்து வந்தார். இந்த மன்றம் திருமதி பரமேஸ்வரி குமாரவேலு என்பவரின் வீட்டின் ஒரு பகுதியில் இயங்க ஆரம்பித்தது. இங்கேயே மன்றத்தின் சனசமூகநிலையமும் ஆரம்பத்தில் செயற்படத் தொடங்கியது.

இந்த மன்றத்தின் முதலாவது நிர்வாக சபையில் போசகராக வே.முருகேசுவும், தலைவராக மு.கணேசனும், உபதலைவராக செல்வி யோக சவுந்தரி முருகேசுவும், இணைக்காரியதரிசிகளாக செல்விகள் கு.சூரியகுமாரி,ச.சீதாதேவி ஆகியோரும், பொக்கிஷாதிபதியாக க.செல்வநிதியும், கணக்காளராக வி.வேல்முருகுவும், நிலைய அதிகாரியாக கு.பரமேஸ்வரியும் இடம் பெற்றிருந்தார்கள். 36 பேர் அங்கத்தவர்களாக இருந்தார்கள்.

இந்த மன்றத்தின் நிர்வாகச் செயற்பாடுகளில் ஆரம்பம் முதல் 50 ஆண்டு நிறைவான இந்த காலம் வரை பெண்களின் பங்களிப்பு மிக அதிகமாகும். மன்ற நிர்வாகத்தில் 80 வீதமான பெண்கள் அங்கம் வகித்து வருகின்றார்கள். இவ்வாறான பொது அமைப்பு ஒன்றில் அதிக எண்ணிக்கையான பெண்கள் பங்கெடுத்துக் கொள்வது சிறப்பான அம்சமாகும். இந்த மன்றத்தின் வளர்ச்சிக்கு இந்த பெண்களின் சிந்தனைகள், கருத்துக்கள் உரமூட்டியுள்ளன என்றால் அது மிகையாகாது.

இந்த மன்றத்தின் செயற்பாடுகளுக்கு காணி ஒன்று இல்லாத குறையைப் போக்க அமரர்கள் இ.கனகசேகரம், இ.சந்திரசேகரம் ஆகியோர் சுமார் 5 பரப்புக் காணியை அன்பளிப்புச் செய்தனர். அக்காணிக்குள் முதலி அம்மன் ஆலயமும் இருக்கிறது. இந்தக் காணி கோயில் காணியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அதனை ஆவணப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

> இந்த மன்றத்தின் நிர்வாகச் செயற்பாடுகளில் ஆரம்பம் முதல் 50 ஆண்டு நிறைவான இந்தக் காலம் வரை பெண்களின் பங்களிப்பு மிக அதிகமாகும். மன்ற நிர்வாகத்தில் 80 வீதமான பெண்கள் அங்கம் வகித்து வருகின்றார்கள்.

மன்றத்தின் முதலாவது பொதுக் கூட்டம் 19.01.1963 ஆம் ஆண்டு இ.கனகசேகரம் தலைமையில் நடைபெற்ற போது அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியில் ஞானசம்பந்தர் கலை மன்றத்துக்கென கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதென தீர்மானிக்கப்பட்டது. இந்த தீர்மானத்துக்கமைய ஞானசம்பந்தர் கலை மன்றத்துக்கென கட்டடம் நிர்மாணிக்க 15.04.1963 அன்று அடிக்கல் நடப்பட்டது. இந்த நிகழ்வில் மன்ற அங்கத்தவர்களுடன் பல பெரியார்களும் கலந்து கொண்டனர். அன்றைய தினம் அம்மன் ஆலய முன்றலில் ஆல மரம் ஒன்று நடப்பட்டது. அந்த ஆலமரம் பெரு விருட்சமாக வளர்ந்து நிழல் கொடுத்து மன்றத்தின் வளர்ச்சியை இன்று காட்டி நிற்கின்றது.

சுமார் 9 மாதங்களில் மன்றத்துக்கான மண்டபக்கட்டட வேலைகள் பூர்த்தியடைந்ததைத் தொடர்ந்து 17.01.1964 ஆம் நாளன்று மண்டப கிரகப்பிரவேசம் நடைபெற்றது. கிரகப்பிரவேசத்தைத் தொடர்ந்து கோ.ஆழ்வாப்பிள்ளையினால் மண்டபம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்த மண்டபத்தில் அமரர் வி.திருஞானசம்பந்தரின் திருவுருவப் படத்தை யாழ்ப்பாணம், புனித சம்பத்திரிசியார் கல்லூரியின் அப்போதைய அதிபர் அருட்திரு றெக்ரர் அடிகளார் திரை நீக்கம் செய்து வைத்தார். திவ்விய ஜீவனசங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையைச் சேர்ந்த யோகிராஜ் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த யோகேஸ்வர சுவாமிகள் தலைமையில் கூட்டுப்பிரார்த்தனையும் நடை பெற்றது. இதன் பின்னர் அமரரின் குருபூசையும், மன்ற மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தன.

ஞான சம்பந்தர் கலை மன்றம் புதிய மண்டபக் கட்டடத்திலேயே செயற்படத் தொடங்கியது. இந்த சனசமூக நிலையத்தில் அன்று முதல் இன்றுவரை யாழ்.பிராந்திய, கொழும்பு தினசரி வாராந்தப் பத்திரிகைகள், தமிழக சஞ்சிகைகள், மற்றும் ஆன்மிக சஞ்சிகைகள் இடம் பெற்று வருகின்றன.

சனசமூக நிலையத்தின் ஒரு பகுதியாக நூலகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நூலகசேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தோப்பூர் வைத்தியசாலை தரம் உயர்வு

திருகோணமலை,ஏப்.18

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள தோப்பூர் கிராமிய வைத்தியசாலையை பிரதேச மக்களின் நன்மை கருதி மாவட்ட வைத்தியசாலையாக தரம் உயரத்துவதற்கான அமைச்சரவைப் பத்திரம் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம். எஸ். சுபைரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட கிழக்கு மாகாண அமைச்சர் வாரியம் தோப்பூர் கிராமிய வைத்தியசாலையை மாவட்ட வைத்தியசாலையாக தரம் உயர்த்துவதற்கான அங்கீகாரத்தை வழங்கியது என்று கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

(ச-40)

## தொலைபேசி கொடுப்பனவை கேட்டு கிழக்கு வைத்தியர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.18

கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் வைத்தியர்கள் தமக்கான 3மாத தொலைபேசிக் கொடுப்பனவை வழங்கக்கோரி எதிர்வரும் செவ்வாய்க் கிழமை ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

திருகோணமலை, அம்பாறை, கல்முனை ஆகிய பிரதேசங்களில் இந்தப் போராட்டத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்க பொதுச் செயலாளர் சந்திக்க எப்பற்றிக் கடுவ தெரிவித்தார்.

நடைமுறைக்குச் சாத்தியமற்ற முறையில் தமக்கான 3மாத தொலைபேசிக் கொடுப்பனவு இன்றுவரை வழங்கப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

**ஏனைய மாகாணங்களுக்கு வழங்கப்படும் தொலைபேசிக் கொடுப்பனவு கிழக்கு மாகாணத்துக்கு மட்டும் ஏன் புறக்கணிக்கப்படுகின்றது.**

ஏனைய மாகாணங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றபோதும், கிழக்கு மாகாணத்துக்கு மட்டும் வழங்கப்படாது இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது என்று அவர் தெரிவித்தார்.

அன்றைய தினம் அவசர சேவைச் சிகிச்சைகளைத் தவிர ஏனைய சேவைகள் புறக்கணிப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம். தேவராஜவுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, ஏப்ரல் மாத தொலைபேசிக் கொடுப்பனவுகள் வழங்கும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அதற்கு முன்னைய 3 மாதங்களுக்கான கொடுப்பனவுப் பத்திரத்தைச் சமர்ப்பித்தவர்களுக்கு விரைவில் கொடுப்பனவு வழங்கப்படும். ஏற்கனவே அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன-என்றார்.

(ச-4)

## கழிவுகளைக் கொட்ட இதுவரை இடமில்லை

### அதிகாரிகளும் அக்கறையில்லையென விசனம்

கண்டி,ஏப்.18

ஹற்றன் நகரில் சேரும் கழிவுப் பொருள்களைக் கொட்டுவதற்கு உரிய இடமொன்றை பெற்றுத்தருவதில் பிரதேச செயலக அதிகாரிகள் அக்கறை காட்டாதுள்ளனர் என்று டிக்கோயா நகர சபைத் தலைவர் விசனம் தெரிவித்துள்ளார்.

கழிவுப்பொருள்களைக் கொட்டுவதற்கு இடமில்லாததால் நகர சபை வளவுக்குள்தான் கொட்ட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்:

ஹற்றன் நகரில் சேரும் கழிவுப் பொருள்களை கொட்டுவதற்கு குடா ஓயா பகுதியே இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்தது. எனினும் ஹற்றன் - நுவரெலியா வீதி திருத்தப்பட்டு வருவதால் குறித்த இடத்தில் கழிவுகளை கொட்டுவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கழிவுகளை கொட்டுவதற்குச் சரியான இடத்தை பெற்றுத்தருமாறு அம்பகமுவ பிரதேச செயலகத்துக்கு ஏழு லட்சம் ரூபாவை ஒதுக்கிய நிலையில் அவர்கள் தெரிவுசெய்த இடம், மக்கள் குடியிருப்புகள் உள்ள இடமாகையால் கைவிடப்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினை நூறு வருடங்களாக நிலவும் பிரச்சினையாகும். மாவட்ட அபிவிருத்திச் சபை கூட்டங்களில் இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தப்படும் என்று கூறப்பட்டும் கவனத்தில் எடுக்கப்படவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ச)

### உயிரைக் காக்க...



கிண்ணியா தள வைத்தியசாலையில் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள இரத்தத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய இளைஞர்கள் இரத்ததானம் வழங்கினர்.

## தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் மீட்பு

மட்டக்களப்பு,ஏப்.18

மட்டக்களப்பு, காத்தான் குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி பிரதேசத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆணொருவரின் சடலத்தை காத்தான் குடி பொலிஸார் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து ஆரையம்பதி, வம்மிக் கேணி வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த நபர் கொலை செய்யப்பட்டு தூக்கில் போடப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந் தேகிக்கின்றனர். எனினும் இதுவரை சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ச)

## கைவிடப்பட்ட குழந்தையை தத்துக்கொடுக்க தீர்மானம்

கல்முனை,ஏப்.18

கைவிடப்பட்ட நிலையில் கல்முனை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள குழந்தையின் எதிர்காலம் கருதி அதனைத் தத்துக்கொடுப்பதற்குத் தாம் தீர்மானித் துள்ளதாக சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கல்முனை அலுவலகப் பொறுப்பாதிகாரி எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெண்ஒருவரினால் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் இந்தக் குழந்தை கல்முனை பொலிஸாரின் உதவியுடன் கல்முனை ஆதார வைத்தியசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒப்படைக்கப்பட்டது.

இந்தக் குழந்தைக்கான பாதுகாப்புப் போதாமல் உள்ளதாக வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எமக்கு அறிவித்துள்ளார். குழந்தையின் நலன் கருதி மட்டக்களப்பிலுள்ள சினேகதீபம் குழந்தைகள் தற்காலிக பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்க உத்தேசித்துள்ளோம். பின்னர் தத்துக்கொடுப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்- என்றார்.

இது தொடர்பில் கல்முனை ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எஸ்.எம்.ஜாபர் தெரிவித்ததாவது:-

எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இந்தக் குழந்தை நல்ல உடல் ஆரோக்கியத்துடன் உள்ளது. தற்போது வைத்திய சாலையின் குழந்தைகளுக்கான 5ஆம் இலக்க விடுதியில் இந்தக் குழந்தையைப் பராமரிக்கின்றோம்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கல்முனையிலுள்ள சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு பிரிவினருக்கு நாம் அறிவித்த நிலையில் அவர்கள் குழந்தையைப் பார்வையிட்டனர். இந்தக் குழந்தையை தற்காலிக பராமரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்லவுள்ளதாகத் தெரிவித்தனர் - என்றார்.

(ச)

## கிழக்கு மாகாண கீதம் இந்தியாவில் உருவாகும்

மட்டக்களப்பு,ஏப்.18

கிழக்கு மாகாண சபைக்கான கீதத்திற்கு இந்திய இசையமைப்பாளர்களைக் கொண்டு இசையமைப்பதற்காக கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் குழு நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலை இந்தியா சென் றுள்ளது.

கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் எச்.எம். பாயிஸ் தலைமையில் சென்றுள்ள இந்தக் குழுவில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான எஸ்.புஸ்பராஜா, இரா.துரைரட்ணம், எம்.எஸ்.ஜவாஹிர்சாலி, நிமால் காமினி, எம்.எல். துல்கர்னைன், சபையின் செயலாளர் ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர்.

இந்தக் குழுவினர் இந்திய இசையமைப்பாளர்களை சந்தித்து கிழக்கு மாகாண சபைக்கான கீதத்தை இசையமைக்கவுள்ளதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜவாஹிர்சாலி தெரிவித்தார். கிழக்கு மாகாண கவிஞர்கள், எழுத்தாளர்களைக் கொண்டு இந்தக் கீதம் இயற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

## ஸ்ரீலங்கா யூத் திட்டத்தில் கண்டியில் 20 வீடுகள்

கண்டி,ஏப்.18

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஸ்ரீலங்கா யூத் வீடமைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்தில் 20 வீடுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கண்டி மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எல்.கே. ரத்நாயக்க தெரிவித்தார்.

பிரதேச செயலகத்துக்கு ஒன்று என்ற அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்தில் உள்ள 20 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 20 வீடுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வீடுகளை அமைத்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வீட்டு வசதி அற்ற பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என்று மாவட்ட பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(ச)

## வீட்டுப்பணிப் பெண்களுக்கும் தொழிற் சங்கம் தொடக்கம்

கண்டி,ஏப்.18

வீட்டுப் பணிப்பெண்களுக்காக இலங்கை செங்கொடிச் சங்கம் என்ற பெயரில் தொழிற்சங்கம் ஒன்று கண்டியில் பதிவு செய்யப்பட்டது என்று இலங்கை செங்கொடிச் சங்கத்தின் தலைவர் மேனகா கந்தசாமி தெரிவித்தார்.

உலகின் ஏனைய நாடுகளிலும் எமது இலங்கையிலும் தொழிலாளர் நலன் காக்க பல்வேறு தொழிற்சங்கங்கள் உண்டு. இருப்பினும் வீட்டுத் தொழிலாளர்களைஅல்லது அன்றாடம் வீடுகளில் பணிபுரிபவர்களை ஒரு தொழிலாளியாக இதுவரை கருதப்பட்டிருக்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

(ச)

## சுத்தமற்ற நீரைப் பருகிய 800 பேர் லிந்துலை வைத்தியசாலையில்

நுவரெலியா,ஏப்.18

லிந்துலை பிரதேசத்தில் வயிற்று வலியால் பாதிக்கப்பட்ட 40 இற்கும் அதிக மானவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சுத்தமற்ற குடிதண்ணீர் பாவனையே இவர்கள் நோய்வாய்ப்பட்டதற்குக் காரணம் என்று லிந்துலை மாவட்ட வைத்திய அதிகாரி சந்திக்க பண்டார தெரிவித்தார்.

கடந்த இரு வாரங்களில் 800 இற்கும் அதிகமான வர்கள் வயிற்றுவலியால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.



நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படும் நீர் சுத்திகரிக்கப்படாது விநியோகிக்கப்படுவதே இந்த நிலைமைக்குக் காரணம் என்று லிந்துலதலவாக்கலை நகர சபையின் தலைவர் அசோக்க சேமபால தெரிவித்தார்.

இதனால் பவுசர்கள் ஊடாக மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் தேசிய நீர் வழங்கல் வடிகால மைப்புச் சபையின் தல வாக்கலை நகரசபையின் பொறுப்பதிகாரி கே.அருளேஸ்வரனிடம் கேட்டபோது, "நீரை சுத்திகரிக்காது ஒரு போதும் விநியோகிப்பதில்லை. தலவாக்கலை நகரசபையின் அதிகாரிகளுடன் இந்தச் சம்பவம் தொடர்பில் கலந்துரையாடவுள்ளேன்"- என்றார். இதேவேளை கொதித்தாறிய நீரை குடி தண்ணீருக்காகப் பயன்படுத்துமாறு நுவரெலிய மாவட்ட செயலாளர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** மகிழ்ச்சியும், தன்னம்பிக்கையும் கூடுதலாகும். அதே நேரத்தில், என்னதான் மிகத் தெளிவாகத் திட்டமிட்ட போதும், நெருக்கடி தவிர்க்க முடியாததாக இருக்கும். பண வரவுகள், எதிர்பார்ப்புக்கு ஏற்றபடி இருக்கும். வீட்டிலும், வெளியிடங்களிலும் வார்த்தைகளை கவனமாக கையாளுதல் வீண் சச்சரவுகளைத் தவிர்க்க உதவும்.

**இடபம்:** மனமகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. சில காரியங்களை, எதிர்பார்ப்புக்கு மேலாகவே செய்து முடிப்பீர்கள். சில பொறுப்புகளுக்காக, தாங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளை தீவிரப் படுத்த வேண்டியிருக்கும். புதிய அறிமுகங்கள் மற்றும் அரசியல்வாதிகளின் தொடர்புகளில் மிகக் கவனம் இருக்கட்டும்.

**மிதுனம்:** நண்பர்களுக்காகவோ அல்லது உறவினர்களுக்காகவோ மேற்கொள்ளும் பணிகள், தங்களின் பணிகளை பாதிக்காத வண்ணம் அமைத்துக் கொள்ளுங்கள். தொழில் தொடர்பான ஒப்பந்தங்களில், தெளிவான வரையறைகள் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். மாலையில் பயணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

**கடகம்:** உங்களின் கவலைகள் கூடுதலாக இருக்கும். அதேநேரத்தில், நீங்கள் எடுத்துக் கொண்ட ஒவ்வொரு பணிகளையும், மிக எளிதாகச் செய்து முடிப்பீர்கள். அவ்வப்போது ஏற்படும் பதற்றம் மற்றும் அவசரங்களை மட்டும் தவிர்த்துக் கொள்ளுங்கள். பொதுநலப்பணியில் ஈடுபடும் போது, சில விமர்சனங்கள் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

**சிங்கம்:** முக்கிய நபர்களின் சந்திப்புகள் மனநிறைவு தரும். அரச சம்பந்தப்பட்ட பணிகளில், முறையான செயற்பாடுகளை மட்டும் கொண்டு செல்லுதல் நல்லது. சில பொறுப்புகள் உங்களைத் தேடி வரும். எதிலும் நிதானத்தை மேற்கொள்ளுதல், நற்பெயரை தக்க வைத்துக் கொள்ள உதவும். வீட்டுப் பணி ஒன்றை மறக்க நேரிடலாம்; கவனம்.

**கன்னி:** உங்கள் மனதில் தேவையற்ற குழப்பங்களும், பயங்களும் சகஜம் என்ற போதும், பெரிய பாதிப்பென்று எதுவும் இருக்காது. எதிலும் ஒரு திட்டத்தோடு செயற்படுங்கள். அரசு சம்பந்தப்பட்ட விவகாரங்களில், சற்று முன்னெச்சரிக்கையுடன் செயற்படுங்கள். நிதி நிலையில் வரவுகள் வந்தபோதும். பற்றாக்குறை இருக்கத்தான் செய்யும்.

**நாளை**

*சித்திரை 07 வியாழக்கிழமை 19.04.2012*
*திதி: திரயோதசி மு.ப 10.00 வரை*
*நட்சத்திரம்: உத்தரட்டாதி மு.இ 08.01 வரை*
*சுபநேரம்: 07.32- 09.02 வரை*
*ராகு காலம்: 1.32-3.02 வரை*

**துலாம்:** பணிச்சுமையோடு ஆரம்பித்த போதும், அதையும் ஒரு சவாலாக எடுத்துச் செயற்படுவீர்கள். சில விவகாரங்களில், நீங்கள் காட்டும் நிதானம் பிறரையும் பின்பற்ற வைக்கும். பண நிலையில், பற்றாக்குறை ஏற்படும். சற்று கவனமுடன் செயற்படுதல் நல்லது. உடன்பிறப்புகளின் ஆலோசனையைத் தவிர்த்துக் கொள்ளாதீர்கள்.

**விருச்சிகம்:** அமைதியாகவும், ஆனந்தமாகவும் இருக்கும். ஆதாயங்களும் கிடைக்கப் பெறுவீர்கள். உயர்கல்விக்கான முயற்சிகள் வெற்றி பெறும். ஏதேனும் ஒரு வகையில், பணம் வந்து கொண்டு இருக்கும். தேவைகள் பூர்த்தியாகும். பெற்றோரால் தக்க சமயத்தில் உதவிகள் கிடைக்கப் பெறும்.

**தனுசு:** திட்டமிட்ட பணிகளை வெற்றிகரமாகச் செய்துமுடிப்பீர்கள். சமூகத்தில் மதிப்பு, மரியாதை கூடும். கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவீர்கள். அரச வகையில் எதிர்பார்க்கும் விடயங்கள் எளிதாக முடியும். பண நிலையில், தேவைக்கு ஏற்ப வரவுகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

**மகரம்:** ஏற்படும் சிந்தனைகளும், சந்திப்புகளும் மிகப் பயனுள்ளதாக இருக்கும். மனதில் அமைதியும், இனிமையான சூழ்நிலையும் அதிகம் காணப்படும். கடன் மற்றும் வழக்குகளுக்கு நல்லதொரு தீர்வு காண்பீர்கள். உடல் நிலையில் சிறுசிறு தொந்தரவுகள் என்ற போதும் அதிகப்படியான செலவுகளுக்கு வாய்ப்பில்லை.

**கும்பம்:** ஓரளவுக்கு பணிகளை வெற்றிகரமாக முடிப்பீர்கள். புதிய தொழில் முயற்சிகளில் கவனம் கொள்வீர்கள். பண நிலையில், ஓரளவுக்கு சிக்கன நடவடிக்கைகளால் பற்றாக்குறை இன்றி செல்வீர்கள். கடன் நிலவரங்களில், தங்கள் கவனம் இருக்கட்டும். குடும்பத்தில் விருந்தினர்களின் வருகை அதிகம் இருக்கும். தெய்வீக வழிபாடுகள் ஏற்படும்.

**மீனம்:** தங்களின் சிந்தனைகள் மாற்றம் ஏற்படுத்தும் வகையில் இருக்கும். எண்ணங்கள் தெளிவு பெறும். சந்திப்புகளை பயனுள்ளதாக்கிக் கொள்வீர்கள். பண நிலையில், எதிர்பார்த்த வரவுகள் இருந்தபோதும் எதிர்பாராத செலவுகளால் பற்றாக்குறை ஏற்படும். கடன்களை வாங்கும்போதோ அல்லது கொடுக்கும்போதோ தெளிவான வரையறை அவசியம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | 7 | | 8 | | | 2 |
| | 9 | | 5 | | | | 3 | 6 |
| 4 | 5 | | | 2 | 3 | 1 | 7 | |
| 6 | 4 | | | | | | | |
| | 2 | | 1 | | 7 | | 8 | |
| | | | | | | | 2 | 4 |
| | 6 | 5 | 4 | 3 | | | 9 | 8 |
| 9 | 7 | | | | 5 | | 4 | |
| 8 | | | 9 | | 1 | 2 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 4 | 7 | 5 | 9 | 2 | 3 | 1 |
| 7 | 9 | 3 | 6 | 1 | 2 | 4 | 8 | 5 |
| 2 | 5 | 1 | 8 | 4 | 3 | 7 | 6 | 9 |
| 9 | 6 | 2 | 5 | 3 | 4 | 8 | 1 | 7 |
| 3 | 4 | 5 | 1 | 7 | 8 | 9 | 2 | 6 |
| 1 | 7 | 8 | 9 | 2 | 6 | 5 | 4 | 3 |
| 5 | 3 | 7 | 2 | 8 | 1 | 6 | 9 | 4 |
| 4 | 2 | 9 | 3 | 6 | 7 | 1 | 5 | 8 |
| 8 | 1 | 6 | 4 | 9 | 5 | 3 | 7 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

## செல்லம்மா இராசேந்திரம் (மலர்)



திதி : அபரபக்க திரயோதசி

மண்ணில்
**04★02★1953**

விண்ணில்
**31★04★2011**

*மீண்டும் வாராயோ அம்மா!*

ஆண்டொன்று போனதம்மா
ஆசை அம்மாவை நாம் பிரிந்து
அம்மாவின் பிரிவை நம்ப மனம் மறுக்குதம்மா
நீ நிழலான கதை புத்திக்கு தெரிந்தும்
மனம் ஏனோ நம்ப மறுக்குதம்மா
ஆயிரம் தடவை எமக்கு நாமே சொன்னாலும்
மாண்டழிந்து போனாலும்
மறக்க மாட்டோம் எம் அன்னையை
கல்விக்கு விளக்கானாய்
உழைப்புக்கு உணைத் தந்தாய்
வாழ்வுக்கு வழித்துணையானாய்
சோகத்திற்கு மடியானாய் - அம்மா
சோகம் தாழாமல் தவிக்கின்றோம்
எங்கே? உன் தாய் மடியம்மா!

ஆண்டு ஒன்று போனாலும்
ஆறவில்லை எம் கவலை
ஆதரிக்க யாருமில்லை
எம் கவலை சொல்லியழவோ
புவிதன்னில் யாருமில்லை
ஈசனவன் காலடியில் என்றென்றும்
வாழ்ந்திடம்மா - மீண்டும் பிறந்திட
விரும்பின் எம்முடனே வந்து இணைந்திடம்மா!

பிரிந்தா ஸ்ரோர்ஸ்
அல்லாரை வடக்கு,
மீசாலை.

**என்றென்றும் உன்
நினைவுகளைச் சுமந்து நிற்கும்
குடும்பத்தினர்**

(16740)(45.6.7 )

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியும் 76 ஆவது பிறந்தநாள் நினைவும்



மனிதருக்குள்
**20.04.1936**



கர்த்தருக்குள்
**18.04.2010**

## அமரர் சின்னத்தம்பி பாலசிங்கம் (டானியல்)

(இளைப்பாறிய அதிபர்)
(எக்காளத்தொனி பூரண சுவிசேஷ சபை)

இரண்டாண்டு வந்ததுவோ! இருண்டு கிடக்கிறது எமதில்லம்
வறண்டு கிடக்கிறது நா! வார்த்தை வருகுதில்லை
சுருண்டு போச்சுது நம் சுற்றம்! சுதந்திரம் போச்சு!
கர்த்தருக்குள் உம் நித்திரை கனவாய் தெரியுது!
நித்திய ஜெபம் உமக்காய் என்றும்...

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

74/9, இராமநாதன் வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

(17100) (2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேர்வினுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணையில் தளர்வு

கொழும்பு,ஏப்.18

அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிரான விசாரணைகள் இடைநடுவில் கைவிடப்படக்கூடும் என்று சிங்கள ஊடகம் ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது. பெயர் வெளியிட விரும்பாத அமைச்சர் ஒருவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார் என்று தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

மேர்வின் சில்வாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழு ஒழுக்காற்று விசாரணைகளை நடத்தி வருகின்றது.

கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட உறுப்பினர்கள் விசாரணைகளை துரிதப்படுத்த வேண்டும் என்று முயற்சித்த போதிலும், சில தரப்பினர் விசாரணைகளைத் தடுக்க முயற்சிப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்று சிங்கள ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

அமைச்சரும் அவரது சகாக்களும் கப்பம் கோரல் உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருவதாகக் களனிப் பிரதேச சபை தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## போலிப் பெயர்களுடன் இலங்கையர்கள் சி.ஐ.டியினரின் விசாரணை ஆரம்பம்

கொழும்பு,ஏப்.18

போலிப் பெயர்களைப் பயன்படுத்திவரும் இலங்கையர்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இவ்வாறு போலிப் பெயர்களுடன் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகள், ஆயுதக் குழுக்கள் மற்றும் ஜே.வி.பி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் இவ்வாறு வேறு பெயர்களைப் பயன்படுத்தி வருகின்றனர் என்று குறிப்பிடப்படுகிறது.

ஐரோப்பா, அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் கனடா போன்ற நாடுகளில் போலிப் பெயர்களுடைய இலங்கையர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர் கள் போலிப் பெயர்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

பல்வேறு குற்றச் செயல்கள் மற்றும் வன்முறைகளுடன் தொடர்புடையவர்களே இவ்வாறு போலிப் பெயர்களைப் பயன்படுத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தகையவர்களின் தகவல்களைத் திரட்டி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ச)

பார்வையிடல்...



இலங்கைக்கு வந்துள்ள பலஸ்தீன ஜனாதிபதி முஹமட் அப்பாஸ் உள்ளிட்ட குழுவினர் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள சுதந்திர சதுக்கத்தைச் சுற்றிப் பார்வையிட்டனர்.

## 680 வர்த்தகர்கள் சிக்கினர்

கொழும்பு,ஏப்.18

பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்களை விற்பனை செய்த 680 வர்த்தக நிலைய உரிமையாளர்கள் பண்டிகைக் காலத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கைப் பொதுமக்கள் சுகாதார பரிசோதகர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலத்தில் பொது மக்கள் சுகாதாரப் பரிசோதகர்கள் விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது பாவனைக்கு உதவாத பொருள்கள், லேபல் அற்ற உணவு வகைகள், காலவதியான உணவுப் பொருள்கள் என்பவற்றை விற்பனை செய்த வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர் கள் மீது வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகச் சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கம் தெரிவித்துள்ளது. (ச)

## நாடாளுமன்ற சிறப்புரிமை மீறல் குற்றச்சாட்டு கோத்தாவுக்கு எதிராக

### லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. கூறுகிறார்

கொழும்பு,ஏப்.18

தான் தெரிவித்த கருத்துக்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சவால் விடுத்தமைக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சிறப்புரிமை மீறல் விவகாரத்தை எழுப்பவுள்ளதாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.



மக்களுக்காகக் குரல் கொடுப்பது நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடமையாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அறிக்கைக்கு சவால்விடும் அதிகாரம் அவருக்கு இல்லை. குரல் எழுப்பமுடியாத மக்களுக்காக குரல்கொடுப்பது கடமை என்பதால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை வெளியிடுகின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

தனது மகன் கடத்தப்பட்டமை குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யச் சென்றபோது, தனது மகனை கடத்திய நபரை பொலிஸ் நிலையத்தில் கண்டதாக பெண் ஒருவர் கூறியிருந் தார். இதுகுறித்து கிரியெல்ல ஒரு நிகழ்வில் கூறியிருந்தார்.

அதைத் தொடர்ந்து குறித்த அந்தப் பெண்ணின் பெயரை தருமாறு ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு சவால் விடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

அம்பாந்தோட்டை துறைமுகத்தில்

## வாகனங்களை இறக்கும் முடிவில் மாற்றமில்லை

கொழும்பு,ஏப்.18

இலங்கைக்கு கொண்டு வரப்படும் வாகனங்கள் அனைத்தையும் எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதி முதல் அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்கூடாக இறக்க வேண்டும் என்ற தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை என்று இலங்கைத் துறைமுக அதிகார சபை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தெரிவித்துள்ளது.

கொழும்புத் துறைமுகத்தில் வாகனங்களை இறக்குவதற்கான பிரத்தியேக நிலையம் மற்றும் வாகனங்களைக் களஞ்சியப்படுத்துவதற்கான இடப்பற்றாக் குறை ஆகியவற்றின் காரணமாக, வாகனங்களை ஏற்றிவரும் கப்பல்கள் நீண்ட தாமதத்தை எதிர்நோக்குவதாக இலங்கைத் துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாகச் சரக்கு கட்டணங்கள் அதிகரிக்கப் படுவதால் இறக்குமதியாளர்கள் அதிக சரக்குக் கட்டண சுமையை எதிர்கொள்வதாகவும் துறைமுக அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

## தும்இந்த சில்வாவுக்கு மற்றுமொரு சத்திரசிகிச்சை

### குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.18

நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலைச் சந்தேகநபரான துமிந்த சில்வாவுக்கு சிங்கப்பூரிலுள்ள எலிஸபெத் வைத்தியசாலையில் மற்றுமொரு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதாகக் குற்றப்புலனாய்வுப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நீதிபதியிடம் நேற்று முன்தினம் அறிக்கை யொன்றைச் சமர்ப்பித்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர், துமிந்த சில்வாவுக்கு இந்தவாரம் மற்றுமொரு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதனால் அவரால் நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்க முடியாது என்று துமிந்த சில்வாவின் தந்தை வாக்குமூலமளித்ததாக நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த அறிக்கைக்கு ஆட்சேபம் தெரிவித்த பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி திரந்த வளலியட்ட, துமிந்த சில்வாவை கைதுசெய்வதற்கான பிடியாணையை சர்வதேசப் பொலிஸாருக்கு வழங்க வேண்டும் என்று நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

சந்தேகநபரை கைது செய்ய முடியாது என்று கூறினால் மட்டுமே சர்வதேசப் பொலிஸாருக்கு அறிவிக்கமுடியும.

சந்தேகநபரைக் கைது செய்ய முடியாதுள்ளதாக நீதிமன்றத்திற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கும் பட்சத்தில் மாத்திரமே சர்வதேச பொலிஸாருக்கு கைதுசெய்வதற்கான பிடியாணையை வழங்க முடியும் என்று நீதிபதி தெரிவித்தார்.

இந்த வழக்கின் ஏனைய சந்தேக நபர்களைத் தொடர்ந்தும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ச)

## இளைஞர்களின் சடலங்கள் மீட்பு

கொழும்பு,ஏப்.18

சீதுவை - தண்டுகம் ஓயாவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை தோணி கவிழ்ந்ததில் காணாமற்போன இரண்டு இளைஞர்களினதும் சடலங்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பில் உள்ள கடோலார தாவரங்களையும் காட்சிகளையும் பார்வையிடுவதற்காகச் சென்ற ஐந்து பேர் கொண்ட குழு பயணித்த படகே கவிழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## காலி சம்பவம் குறித்து நடவடிக்கை இல்லை

### தமிழர்கள் கவலை

கொழும்பு,ஏப்.18

காலி - திலிதுற தோட்டத்தில் புதுவருட தினத்தன்று தமிழ்த் தொழிலாளர் குடும்பங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் அதிகாரிகள் இதுவரை உரிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தால் தமது பாதுகாப்புத் தொடர்பில் பெரிதும் அச்சமடைந்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்துடன் பிரதேச அரசியல்வாதி ஒருவர் சம்பந்தப்பட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்களிடமும் பிரதேச பொலிஸ் அதிகாரிகளிடமும் முறைப்பாடு செய்துள்ளதாகப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இவேளை, தனிப்பட்ட ரீதியில் இரண்டு இளைஞர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நால்வர் கைதுசெய்யப் பட்டுள்ளார் என்றும் அவர் மேலும் கூறினார். (ச)

## சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கைதியால் அன்பளிப்பு

### பொலிஸார் விசாரணை

வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் கைதி ஒருவர் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்குப் புத்தாண்டு அன்பளிப்பு வழங்கியுள்ளமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மூவாயிரம் ரூபா முதல் ஐம்பதாயிரம் ரூபா வரையில் இவ்வாறு புத்தாண்டு அன்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர் ஒருவரே இவ்வாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அன்பளிப்பு வழங்கியுள்ளார்.

கடைநிலை உத்தியோகத்தர்களுக்கு மூவாயிரம் ரூபாவும், சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவி அடிப்படையில் ஐயாயிரம் முதல் ஐம்பதாயிரம் ரூபா வரையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் போதைப் பொருளை விற்பனை செய்வதற்கு லஞ்சமாக இந்தப் பணக் கொடுப்பனவு வழங்கப் பட்டுள்ளது. ஆண்டு தோறும் இவ்வாறு கைதிகளினால் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு அன்பளிப்பு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27 ஆவது பிறந்த நாள் நினைவுடன் தவிப்பினில் கழிந்திட்ட மூன்றாண்டுகள்



செல்வி

**வல்லிபுரநாதன் பிறிந்தாஜினி (பிறிந்தா)**

**ஒளிதந்தது :18-04-1985**

**வலி தந்தது: 02-01-2009**

முத்தென வந்துதித்த எங்கள் முத்தாரமே
மூன்றாண்டுகள் முழுமையாய் ஓடி மறைந்ததம்மா
கருத்தினில் மறையா எங்கள் காவியமே - எம்
கண்களில் வலிசிந்த நீ கண்ணுறங்கிப் போயினையோ?
இன்றுனக்கு அகவை இருபத்தேழு - எம்
இதயத்தால் வலிதாங்க இயலவே இல்லையம்மா
எம்மினிய குலவிளக்கே எம்முடனே வந்துவிடு.

(16803)(2-6-7)

மட்டுவில் நாடு மேற்கு, பூநகரி.

-குடும்பத்தினர்.

## செயலமர்வு

வடமராட்சி,ஏப்.18

வடமராட்சி வலய மருதங்கேணி கோட்டத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கான துரித கற்றல் செயற்திட்ட செயலமர்வு எதிர் வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கோட்டக் கல்வி அதிகாரி கே.பொன்னையா தலைமையில் நடைபெறவுள்ளது. (வ-8)

# சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது). கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தகமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகளின்படி யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2009.04.08 ஆம் திகதி 1596/17 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக்கூட்டங்கள் 22.04.2012 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறுவதற்காக, இந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

| கிளை இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர் பெயர்கள் |
|---|---|---|---|
| 3 | சித்தன்கேணி | யா/ஸ்ரீகணேச வித்தியாலயம், சித்தன்கேணி | க.திசாகரன் |
| 4 | பனிப்புலம் | கிளை 04 பனிப்புலம், கிளைக்கட்டடம் | இ.தயாகரன் |
| 5 | பண்ணாகம் | கிளை 05 பண்ணாகம், கிளைக்கட்டடம் | இ.பாலச்சந்திரன் |
| 6 | சுழிபுரம் வடகிழக்கு | கிளை 06 சுழிபுரம் வடகிழக்கு, கிளைக்கட்டடம் | க.நிமலன் |
| 7 | சுழிபுரம் மத்தி | கிளை 07 சுழிபுரம் மத்தி, கிளைக்கட்டடம் | கி.குணாளன் |
| 8 | சுழிபுரம் குகன் | கலைமகள் சனசமூக நிலையம், சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் | வி.ஜெயந்தன் |
| 9 | சுழிபுரம் மேற்கு | பாரதி கலைமன்றம், சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் | வே.பிரதீஸ்குமார் |
| 10 | பொன்னாலை | மூளாய் இந்துஇளைஞர் மன்றம், சுழிபுரம். | பா.வாகீசன் |
| 11 | மூளாய் | கிளை 11 மூளாய், கிளைக்கட்டடம் | வை.கைலைநாதன் |
| 12 | தொல்புரம் | கிளை 12 தொல்புரம், கிளைக்கட்டடம் | ச.பாலகுமார் |
| 12A | நெல்லியான் | கிளை12 தொல்புரம், கிளைக்கட்டடம் | ஐ.மயூரன் · |
| 14 | தொல்புரம் மத்தி | தொல்புரம் மத்தி சனசமூக நிலையம், சுழிபுரம். | த.சிவகுமாரி |
| 15 | தொல்புரம் கிழக்கு | விக்னேஸ்வரா சனசமூக நிலையம், தொல்புரம் கிழக்கு, சுழிபுரம். | பா.கலைச்செல்வி |
| 16 | வட்டு பிளவத்தை | கற்பகச்சோலை சனசமூக நிலையம் வட்டு வடக்கு, சித்தங்கேணி | த.மாலினி |
| 17 | வட்டு சிவன் | கிளை 17 வட்டு சிவன், கிளைக்கட்டடம் | இ.வேல்குமார் |
| 18 | வட்டு கிழக்கு | கிளை 17 வட்டு சிவன், கிளைக்கட்டடம் | ஜெ.தர்சினி |
| 19 | வட்டு மூளாய் | ஸ்ரீகணேச வாசிகசாலை மூளாய் வீதி வட்டுக்கோட்டை | S.செல்வகுமார் |
| 20 | வட்டு மேற்கு | ஸ்ரீகணேச வாசிகசாலை மூளாய் வீதி வட்டுக்கோட்டை | நா. ஜெயவதனன் |
| 21 | வட்டுக்கோட்டை | கிளை 21 வட்டுக்கோட்டை, கிளைக்கட்டடம் | வை. சரவணன் |
| 22 | அராலி மேற்கு வடக்கு | கிளை 22 அராலி மேற்கு வடக்கு, கிளைக்கட்டடம் | சு.தர்சினி |
| 23 | அராலி வடக்கு | யா/அராலிவடக்கு அ.மி.த.க. பாடசாலை, வட்டுக்கோட்டை | ம.கபிலன் |
| 24 | அராலி தெற்கு கிழக்கு | கிளை 24 அராலி தெற்குகிழக்கு, கிளைக்கட்டடம் | S.பிறேமிலன் |
| 25 | அராலி விக்னேஸ்வரா | கிராம அபிவிருத்திச் சங்கம் அராலிதெற்கு, வட்டுக்கோட்டை | ச.பிரிந்தாமலர் |
| 26 | அராலி ஐயனார் | கலைமகள் சனசமூக நிலையம், அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை | கு.நிசாந்தன் |
| 27 | செட்டியாமடம் | அராலி வடக்கு சனசமூக நிலையம்வட்டுக்கோட்டை | தி.வித்தககலாநிதி |
| 28 | துணவி | யா/சின்னம்மா வித்தியாசாலை சங்கரத்தை, வட்டுக்கோட்டை | வ.சுகிதரன் |
| 29 | சங்கரத்தை துணவி | யா/சின்னம்மா வித்தியாசாலை சங்கரத்தை, வட்டுக்கோட்டை | S.எமில்டா |
| 30 | சங்கானை கிழக்குமத்தி | நலன்புரிச்சங்க வாசிகசாலை, சங்கானை | க.கமலநாதன் |
| 31 | நிற்சாமம் | முன்னைய கிளைக்கட்டடம் | தா.தவமன்னன் |
| 32 | சிலம்புப்புளியடி | கிளை 32 சிலம்புப்புளியடி, கிளைக்கட்டடம் | பா.சிவபாலன் |
| 33 | சங்கானை கிழக்கு | கிளை 32 சிலம்புப்புளியடி, கிளைக்கட்டடம் | க.சுரேஸ்பாபா |
| 34 | தொல்புரம் மேற்கு | கிளை 34தொல்புரம் மேற்கு, கிளைக்கட்டடம் | ப.து.ரோய்டனிஸ்வரன் |

குறிப்பிட்ட கிளைகளின் கூட்டங்களுக்கு சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும் எவரேனும் மேற்குறிப்பிட்ட தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு அறிவித்தல்கிடைக்காது விடினும் குறித்த கூட்டத்தில் இந்த அறிவித்தலை அடிப்படையாகக்கொண்டு சமுகமளிக்க முடியும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

கூ.அ.உ. ஆணையாளர் பணிமனை,
857, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

V.K. அருந்தவநாதன்
கூ.அ.உ. ஆணையாளர்,
யாழ். மாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினி சேவை JOHN PC & MOBILE TEC THUNUKKAI

உங்களுக்குத் தேவையான கணினி (Computer) வகைகளையும், அவற்றிற்குத் தேவையான உதிரிப்பாகங்களையும், MOBILE PHONE உதிரிப்பாகங்களையும் உத்தர வாதத்துடன் பெற்றுக்கொள்ளவும், சிறந்தமுறையில் பழுது பார்த்துக் கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய இடம் JOHN PC & MOBILE TEC,

T.P : 024 3249520,
071 1213159
(பஸ்நிலையம் முன்பாக துணுக்காய்)

பிறவசதிகள்
★ இன்ரர் நெற் ★ அழைப்பிதழ்கள் வடிவமைப்பு
★ ஒலி, ஒளிப்பதிவுகள் ★ வீடியோ எடிற்றிங்

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05★ 04★ 1937

மறைவு
11★ 05★ 2010

**அமரர் கணபதிப்பிள்ளை பூபாலபிள்ளை**

அப்பா என்ற வார்த்தைக்கு
இலக்கணமாக விளங்கி
எமக்கு நல்வழி காட்டிய
அன்புத் தந்தையே
ஆண்டு இரண்டு ஆனபோதும்
அறவில்லை எம் துயர்...
கலங்கிய கண்களோடு

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி. (17151) (2-6-9)

நங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
30★ 10★ 1923

மறைவு
30★ 04★ 2011

திதி:- அபரபட்ச திரயோதசி

**அமரர் சின்னத்தம்பி நடராஜா**
(இளைப்பாறிய பொறியியலாளர்)

தித்திக்கும் உன் ஞாபகங்கள் ஈரவிழிகளில்
நின்கால் தடம் தேடி அலைகிறது - அன்பின்
முகமது மலர்ந்த புன்னகை நினைவின் பிரிவால்
காலம் ஓராண்டாயினும் கவலையில் வாடுகின்றோம்

86/2, சேர் பொன்
இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம். (17161) (2-6-9)

நங்கள் பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 * 01 * 1932 | 01 * 05 * 2011 |



திருமதி
**தம்பையா இராஜலட்சுமி**


கடந்த (01.05.2011) அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனைகள் நாளை (19.04.2012) வியாழக் கிழமை மு.ப. 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் நினைவுப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்)

மீனாட்சி அம்மன் கோயிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(17110) (6,7,10)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

### இந்தியா, தென்னாபிரிக்காவுக்கான

# நாடு கடந்த தமிழீழ அரசின் நியமன உறுப்பினர்கள் தெரிவு

கொழும்பு, ஏப்.18

நாடுகடந்த தமிழீழ அரசுக்கு வலுவூட்டும் வகையில் இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளுக்குரிய நியமன அவை உறுப்பினர்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் அலுவலகம் ஏப்ரல் 13ஆம்திகதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நியமன உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பல்வேறுபட்ட தகைமைகளும் நல்ல அனுபவமும் படைத்தவர்கள்.

இவர்கள் தமிழர்கள் அனுபவித்து வரும் மனித உரிமைப் பிரச்சினைகள் பற்றி நன்கு அறிந்து, அவை தொடர்பான முன்னெடுப்புகளில் ஈடுபாடு கொண்டு தம் பங்களிப்பை வழங்கி வருபவர்களாவர்.

இவர்களில் இந்தியாவின் நியமன உறுப்பினர்கள் வருமாறு:-

✱ பேராசிரியர் திருமதி சரஸ்வதி ராஜேந்திரன் - இவர் தமிழக நாடுகடந்த தமிழீழ அரசின் ஆதரவு மைய ஒருங்கிணைப்பாளர்.

✱ செல்வராஜ் முருகையன் - இவர் தமிழக நாடு கடந்த தமிழீழ அரசசின் ஆதரவு மையத்துடன் அதன் ஆரம்ப காலத்திலிருந்து செயற்பட்டு வருபவர்.

✱ சிறீதர் சுந்தரம் - இவர் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்).

தென்னாபிரிக்க நாட்டுக்குரிய நியமன உறுப்பினர் வருமாறு:-

✱ கிறிஸ் கோவிந்தர் - இலங்கையில் அமைதிக்கும் நீதிக்குமான ஆதரவுக் குழுவின் உறுப்பினர்.

இவர்களை நாடுகடந்த தமிழீழ அரசின் அவை உறுப்பினர்களாக வரவேற்பதில் நாடுகடந்த தமிழீழ அரசு பெருமையடைகின்றது. இவர்கள் ஒவ்வொருவரும் நீண்ட காலம் தமிழீழ விடயங்கள் தொடர்பாகக் காட்டிவரும் ஈடுபாட்டின் மூலம், நாடுகடந்த தமிழீழ அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாதையில் சென்று தமிழீழ மக்களின் சுதந்திரத்துக்காக உழைப்பதற்குத் தயாராக உள்ளனர் என்று நாடு கடந்த தமிழீழ அரசு பாராட்டி நிற்கின்றது.

- இவ்வாறு நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் அலுவலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதலையால் பாதிப்புற்றோருக்கு நஷ்டஈடு

**கடந்த சிலதினங்களில் மாத்திரம் முதலைத் தாக்குதலால் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர்.**

முதலைகளால் பாதிக்கப்படுகின்றவர்களுக்கு விசேட நட்டஈடு வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று விவசாய மற்றும் வனவள அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

கடந்த சிலதினங்களில் மாத்திரம் முதலைத் தாக்குதலால் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறான சம்பவங்களில் பாதிக்கப்படுகின்றவர்களுக்கு நட்டஈடு வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# இந்திய அணுமின் நிலையத்தால் இலங்கைக்கு தாக்கம் ஏற்படும்

### சூழலியலாளர்கள் கருத்து

இந்திய அணுமின் உற்பத்தி நிலையம் காரணமாக இலங்கைக்குத் தாக்கம் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது என்று சூழலியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் சாசனத்துக்கு அமைவாக இதுகுறித்து இலங்கையில் இராஜதந்திர ரீதியிலான அழுத்தம் விடுக்க முடியுமென சூழலியலாளர் சட்டத்தரணி ஜகத் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

எனினும் முன்கூட்டியே கதிரியக்கத் தாக்கத்தை அடையாளம் காண்பதற்கான முன்னெச்சரிக்கைக் கட்டமைப்பை நிறுவுவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் ஒத்துழைப்புக் கிடைக்கும் என்று அணுசக்தி அதிகாரசபையின் தலைவர் கலாநிதி ரஞ்ஜித் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

# பாடசாலைகளில் டெங்கு அபாயம் சுகாதார அமைச்சு எச்சரிக்கை

எதிர்வரும் பாடசாலைத் தவணை ஆரம்பிக்கப்படும் வேளையில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன என்று சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

விடுமுறை வழங்கி மூன்று வாரங்கள் சென்றுள்ள நிலையில் பாடசாலைகள் சுத்தம் செய்யப்படாமல் இருப்பதனால் அங்கு டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய இடங்கள் உருவாகியிருக்கும் என்றும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

விசேடமாகத் தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை, டெங்கு நோய் பரவுவதற்கு ஏதுவான காரணியாக அமையும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் அடுத்து வாரம் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதும் பாடசாலைச்சூழலை சுத்தப்படுத்தும் நடவடிக்கைக்கு முன்னுரிமை கொடுக்குமாறு சுகாதார அமைச்சுக் கோரிக்கை விடுத்துள்ளது.

ஒரு நாளைக்கு 2 மணித்தியாலங்களாவது பாடசாலையைச் சுத்தம் செய்யும் நடவடிக்கையில் மாணவர்களை ஈடுபடுத்துமாறு அந்த அமைச்சுக் கேட்டுக் கொண்டுள்ளது.

முதலாம் ஆண்டு நினைவு நாள்




அமரர்
**சின்னத்துரை கணபதிப்பிள்ளை**
(ஓய்வு பெற்ற வனபரிபாலன உத்தியோகத்தர்)
(R.F.O)
திதி:18.04.2012 திரயோதசி

ஆல மரமாய் நீங்கள் இருந்து
ஆயிரம் விழுதுகள் தனை ஊன்றி
ஆண்டவன் புகழை தினம் பாடி
எம்மை வளர்த்த அப்பாவே!
ஆண்டு ஒன்று ஆன போதும்
ஆறவில்லை எம் துயரம்
மீண்டும் எப்போது அப்பா
உங்கள் இல்லம் நாடுவீர்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
குடும்பத்தினர்.

## மோசடியில் ஈடுபட்ட பெண்ணுக்குப் பிணை

கொரியாவில் மாதம் 60 ஆயிரம் ரூபா சம்பளத்திற்குச் சாரதி வேலை பெற்று தருவதாகக் கூறி ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை மோசடி செய்தார் என்று கூறப்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரான பெண்ணை, நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி இரண்டு லட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

நீர்கொழும்பு கிம்புலாப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரே பிணையில் விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டவராவார்.

இந்த வழக்கின் முறைப்பாட்டாளர் வேபட பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். முறைப்பாட்டாளரின் கணவருக்குக் கொரியாவில் சாரதி வேலை பெற்றுத் தருவதாகக் கூறிச் சந்தேக நபர் பணத்தை மோசடி செய்துள்ளார் என்று முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**Vacancies**

புதிதாக நல்லூரில் ஆரம்பிக்கப்பட்ட கணினி மற்றும் ஆங்கில கல்வி நிலையத்திற்கு கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| Course Counselor | - Female |
| Computer Instructor | - Female |
| Multimedia & Tally Lecturer | - Male / Female |
| Instructor for Web Design & Development | - Female |

Applicant Age Limit 18-24
நேரடியாக, தபால், இமெயில் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்

**ASIAN COMPUTER EDUCATION**
#2G, Stanley Road, Jaffna.
e-mail : asianedu@dialogsl.net

3ஆம் ஆண்டு நினைவலைகள்

திருமதி
**கோபாலகிருஸ்ணன் சித்ரகௌரி**
(ஆசிரியை, பரணி பாலர் பாடசலை)

தோற்றம்
14.05.1957

மறைவு
22.04.2009



திதி: திரயோதசி

பகலிரவு பாராது பலகதை பேசி பாசமும் நேசமும் காட்டி
பண்புள்ளவர்களாக எம்மைப் பாரினில் வாழவைத்தாய்-அம்மா
இன்ப துன்பங்களில் துணையாக இருந்து வழிகாட்டி
நெறிப்படுத்தினாய்-அம்மா
மறவா உம் இனிய முகத்தை எம் இதயங்களில் நிறுத்திவிட்டாய்-அம்மா
பாசமுள்ள உங்கள் முகம் எம் மனதை விட்டு நீங்காதம்மா.

பரணி, மீசாலை வடக்கு,
கொடிகாமம்.
என்றும் உங்கள் நினைவில் வாழும்:
கணவர், பிள்ளைகள்.

(16560) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

கணக்காளர், விற்பனையாளர்,
சுமை ஏற்றி, இறக்குபவர்
தொடர்பு:
**யமுனா ஸ்ரோர்ஸ்**
39, பிரதான வீதி, நெல்லியடி
T.P. 021 226 3970, 0777422604

## 6 ஆம் ஆண்டு நினைவுகள்



**தோற்றம்**
**24.10.1957**

**மறைவு**
**25.04.2006**

திதி:-
தேய்பிறை திரயோதசி

### அமரர் இ.து.சிவராசா J.P.

(முன்னாள் செயலாளர், பிரதேசசபை, பச்சிலைப்பள்ளி, பளை)


அன்பு மொழிபேசி அரவணைத்து எமைக்காத்து
பண்புடனே நாமும் இப்பாரினில் வாழ வழிசெய்து
பாதிவழியிலெம்மைப் பரிதவிக்க விட்டு நீங்கள்
பரலோகம் சென்றதேனோ – அப்பா!
நீங்கா நினைவுடனே நித்தமும் நாம் வாழ்ந்து
ஏங்குகின்றோம் உங்கள் அன்புக்காக
எங்கு சென்றீர்கள் எமை விடுத்து
நீங்கா நினைவுகளுடன்......

சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கு.
புத்தூர்.
**- குடும்பத்தினர்.**

(சி/9359) (2-6-7)

## மரண அறிவித்தல்

### நாகமுத்து செல்லத்துரை



சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கொண்ட நாகமுத்து செல்லத்துரை நேற்று (17.04.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - பொன்னு தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லப்பா - தங்கமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும் நாகரட்ணம் (கனடா), சுப்பிரமணியம், சண்முகராசா (சுவிஸ்), சற்குணராசா (சுவிஸ்), யோகராசா (சுவிஸ்), குலராசா, சுந்தரலட்சுமி, இராசலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், வள்ளி நாயகி, சந்திராதேவி, சறோஜாதேவி, கிருபானந்த பவானி, கமலாதேவி, சிவராசா, சேனாதிராசா ஆகியோரின் பாசமிகு மாமனும், கீர்த்தனா, அபிரா, மதுரா, சுதர்சனா, சுபாஜினி, சுஜீபன், சுதர்சன், கஜானி, கஜீனன், சாருஜன், நிலானி, மேனகா, சுவர்ணா, துவாரகன், துளசிகன், துருவாசன், துஸ்யங்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2012) புதன்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மெய்கண்டான் வீதி,
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(17157) (2-6-6)

# சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப் 18

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின.

இதன் அடிப்படையில் பாட சாலை அதிபர்கள் அனுப்பி வைத்த மாணவரின் பரீட்சை பெறுபேறுகள் வருமாறு.

**கைதடி குருசாமி வித்தியாலயம்**

கு.திலக்ஷனா 7ஏ பி, ச.சண்முகப்பிரியன் 3ஏ 2பி எஸ், கு.ராகவன் 4ஏ 3பி 2சி, சி.நிக்சன் 2ஏ 2சி 4எஸ், லோ.ருக்சாயினி 2ஏ பி 3சி 2எஸ், ச.தமிழின்பன் ஏ பி சி 5எஸ், ப.தர்ஷிகா ஏ 2சி 5எஸ், ப.கிந்துசன் ஏ 2சி 4எஸ்,ம.தீபராஜ் ஏ 3சி 4எஸ், செ.குறிஞ்சி ஏ சி 4எஸ்.

**நல்லூர் மாணிக்கவாசகர் வித்தியாலயம்**

சீ.துர்காஜினி 3ஏ பி 5சி, ச.கயல்விழி 2ஏ 4பி 3சி, நா.சர்மிலா 2ஏ பி 3சி 2எஸ், த.நிரோஷன் ஏ 3பி 4சி எஸ், சி.துஷாரா ஏ 2பி 2சி 3எஸ், பா.போதநிலாஞ்சலி ஏ 3சி 4எஸ், சங்கீதா ஏ 3சி 4எஸ், க.வினோத் ஏ சி 6எஸ்,ப. தனேஷ் ஏசி 5எஸ்

## கலாபூஷண விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி,ஏப்.18

கலாசார அலுவல்கள் திணைக்களம் கலைத்துறையில் உன்னத பங்களிப்புச் செய்து இதுவரை கௌரவிக்கப்படாத கலைஞர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு இந்த வருடம் கலாபூஷணம் விருது வழங்குவதற்குரிய விண்ணப்பங்களைப் பிரதேச ரீதியாக கோரியுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் தற்போது நிரந்தரமாக வசித்துக் கொண்டிருக்கும் கலைஞர்களுள் கலைத்துறைக்கு உன்னத சேவையாற்றிய 60 வயது பூர்த்தியடைந்தவர்கள் கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்தக் கலைஞர்களுக்கு மேலதிகமாகப் பாரம்பரிய அல்லது தொழில்ரீதியாக மேற்படி கலைகளில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக ஈடுபடுவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பங்களைத் தத்தமது பிரிவு பிரதேச செயலக கலாசார பிரிவில் பெற்று மே 30 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 ஆம் மாடி செத் சிறிபாய, பத்தரமுல்ல என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கலாசார அலுவல்கள் பணிப்பாளர் பிஜித் கணுகல அறிவித்துள்ளார். (வ-9)

## தேசிய நடன, நாடகப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

கலாசார மற்றும் கலை அலுவல்கள் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை கலைக் கழகத்தின் தேசிய நடன நாட்டிய நாடகக் குழுவினர் ஆகியோர் இணைந்து இந்த வருடம் தேசிய நடன விழாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கலாசார திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கலைக்குழுக்கள், கலாசார நிலையங்கள், பாடசாலைகள், நாட்டியக் குழுக்கள் தேசிய நடனப் போட்டியிலும் கலைக் குழுக்களுக்கிடையிலான தேசியப் போட்டியில் கலாசார திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கலைக் குழுக்கள் மட்டும் பங்குபற்றலாம்.

மாவட்ட மட்டப் போட் டிகள் ஜூன் 15 தொடக் கம் ஜூலை 30 ஆம் திகதி வரையும் தேசிய மட்டப் போட்டிகள் ஓகஸ்ட் 15 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை நடத்தப் பட்டு இறுதிநாள் நிகழ்வு ஒக்ரோபர் மாதத்தில் நடைபெறும்.

போட்டிக்கான விண்ணப்பங்களை ஏப்ரல் 10 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை அந்தந்த பிரதேச செயலக கலாசார பிரிவுகளில் பெற்று விண்ணப்பிக்குமாறு கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ-9)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. ஆறுமுகம் உதயணன்**
(SLPS 2 II BE.d)
(அதிபர், கிளி/ வட்டக்கச்சி தெற்கு அ.த.க. பாடசாலை)

03.04.2012 செவ்வாய்க்கிழமை தேசிய கல்வி நிறுவகத்தால் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணிப்பட்டம் B.Ed பெற்ற எங்கள் அதிபர் திரு. ஆ. உதயணன் அவர்களை மனமார வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று உயர வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
**கிளி/ வட்டக்கச்சி தெற்கு, அ.த.க. பாடசாலை,**
**வட்டக்கச்சி.**

(சி/16802) (45.6.7)

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
பருத்தித்துறை

## பதவி வெற்றிடம்

### பயிற்சிக் கிளைமுகாமையாளர்

மேற்படி பயிற்சிக்கிளைமுகாமையாளர் பதவிக்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்ப தகைமை:-**

க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூயகணிதம் என்பவற்றை உள்ளடக்கியதாக இரு அமர்விற்கு மேற்படாதவகையில் ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

**விண்ணப்ப முடிவு திகதி:- 28/04/2012**

சங்கத்தில் பெறப்பட்ட மாதிரி விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து கல்விச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் தலைவர், பருத்தித்துறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்

**கூட்டுறவுச் சேவையிலுள்ள,**
**பொது முகாமையாளர்**
16.04.2012

புதுமைகள் படைத்து ஆச்சரியமூட்டும்
வகையில் உங்கள் படைப்பாற்றலை
வெளிப்படுத்துங்கள் !




தொழில் வாய்ப்பை நோக்கியதொரு கற்கை நெறி

வரையறையற்ற செய்முறை நேரம். இலகு நடையில் விளக்கக்குறிப்புகள் மற்றும் அங்கீகாரமுடைய சான்றிதழும் வழங்கப்படும். பயிற்சி நெறி முடிவில் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தராதரம் பெறுவதற்கான ஏற்பாடுகளும் உண்டு.

Gateway
Centre for ICT Education
347, Kasthuriyar Road, Jaffna
Phone : 021 567 5555 Fax : 021 222 7967
E - mail : gatewayjfn@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## யோசை வென்சன் சிலாஸ் (பேக)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யோசை வென் சன்சிலாஸ் (16.04.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசை - ஆனந்தம் தம்பதியரின் அருமை மகனும், குருஸ் - சூசானம் தம்பதியரின் ஆசை மருமகனும், மேரி மாகிறேற்றின் அன்புக் கணவரும், அன்ரன் ஜெயராஜ், சுபாதினி, அன்ரன் ஜீவராஜ், அன்ரன் யூஜின், ஜெஸ்மினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு, இறுதி ஆராதனை நிகழ்வுகள் இன்று (18.04.2012) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புனித பேதுறு- பவுல் ஆலயத்தில் நடைபெற்று, நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை (17163) (45.6.9)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு இறப்பு
22★ 08★ 1950 29★ 04★ 2011

திதி:- துவாதசி (18.04.2012)

## அமரர் கணபதிப்பிள்ளை இராசதுரை

ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஆறவில்லை எம் துயரம் - அப்பா
மாறாத உங்கள் அன்பும்
மறக்கரத நினைவுகளும் - எமைச்
சீராக்கி வைத்த சிறப்புகளும்
என்றுமே நிலைத்திருக்கும்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

- குடும்பத்தினர்.

காளிகோயிலடி, அராலி தெற்கு, அராலி

# மரண அறிவித்தல்



திருமதி
## பொன்னுத்துரை தங்கம்மா

தாவடியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை - தங்கம்மா நேற்று செவ்வாய்க்கிழமை (17.04.2012) கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பூபால லட்சுமி மற்றும் விஜய லட்சுமி (கனடா), தர்மலட்சுமி (கனடா), கிருபானந்தன் (கனடா), கமலாதேவி (அமெரிக்கா), பரிமளகாந்தி (சுவிஸ்), காலஞ்சென்ற சிவானந்தன் மற்றும் அரளானந்தன் (சுவிஸ்), நடேசானந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற தியாகராசா மற்றும் புண்ணியலிங்கம், புவிமதி, வசந்தகுமார், அரியதவசிங்கம், தர்சினி, நந்தினி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாவடிச் சந்தி,*
*கொக்குவில்.*

*தகவல்:*
*மகிழினி கிரிதரன்*
*(பேர்த்தி).*

# சாரதி தேவை

கொழும்பில் கடமையாற்ற கனரக வாகன சாரதிகள் தேவை. பொலிஸ் நற்சான்றிதழுடன் நேரில் வரவும். (மாதாந்த வருமானம் 75000/= ரூபாவுக்கு மேல்)

தொடர்புகளுக்கு: **T.P:- 021 223 0397,**
**AMT, Transport Service**
இருபாலைச் சந்தி, கோப்பாய்.

# மணமகள் தேவை

*1979 இல் பிறந்த யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, செவ்வாயற்ற, 18 ½ கிரக பாவம் (3 சுற்று) உடைய,* UK Citizen *உடைய மணமகனுக்கு ஆங்கில அறிவுடைய பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.*

தொடர்பு: ***0770794436***

# மலிவு விலையில்

JAPAN SONY Wega Flat T Vகள் 21", 25" -13,500/=, Sw 29"-17,000/=, குளிர்சாதனப் பெட்டிகள் - 18,000/=12" Box - 12,000/= 5.1 அம்பிளிபயர் 13,000/=, ரேடியோ கசெற் CD- 2500/=

தொடர்புகளுக்கு: 077 0440570 (அப்பளம்)
சோனி ரேட்சென்றர் (கொமர்சல் வங்கி எதிரில்)
56, K.K.S. வீதி, சுன்னாகம்.

# தவறிவிட்டது

சுழிபுரம் மேற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் அனுரபா என்பவரது தேசிய அ.அட்டை (852383879 V) விசேட அ.அட்டை, தொழில் அ.அட்டை, ATM Card, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன சுழிபுரம் சந்திக்கும் தொட்டிலடிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 077 4319 840

# வாகனம் விற்பனைக்கு

ISUZU 250 FULL BODY
ALUMINUM 14 ½
BRAND NEW, WHITE COLOUR
மொடல் NKR 66L, NP LG XXXX

தொடர்புகளுக்கு: ***0777721740***

# வீடு விற்பனைக்கு

மீசாலை கிழக்கு, அல்லாரை வீதியில் J/318 கிராம சேவகர் அலுவலகத்துக்கு அருகில் 5 பரப்புக் காணியுடன் கூடிய 37 அடி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு :0779711972

# அறிவித்தல்



திரு. கந்தசாமி சுகிர்தன் தே.அ.அ.இல. 832950904V என்பவர் (20.01.2012) ஆம் திகதி தொடக்கம் ஹேலீஸ் அக்றிகல்சர் ஹோல்டிங்ஸ் லிமிட்டட் கம்பனியிலிருந்து விலகி விட்டார் என்பதைத் தெரிவிக்கின்றோம்.

இதன் பின்னர் எங்கள் கம்பனி சார்பாக இவருடன் செய்து கொள்ளும் வியாபார கொடுக்கல் வாங்கல்கள் எவற்றிற்கும் எங்கள் கம்பனி பொறுப்பேற்கமாட்டாது என்பதை பொது மக்களுக்கும், வாடிக்கையாளர் களுக்கும், கம்பனியின் விநியோகஸ்தர்களுக்கும், விற்பனையாளர் களுக்கும் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஹேலீஸ் அக்றிகல்சர் ஹோல்டிங்ஸ் லிமிட்டட்,**
**25, பொஸரர் லேன்,**
**கொழும்பு - 10**

# குப்புசாமி பாலமுருகனை பாராட்டி மகிழ்கின்றோம்



பாலனாய் பிள்ளையார் முன்றிலில் தவழ்ந்து
சிறுவனாய் தந்தையுடன் நாதம் இசைத்து
இளைஞனாய் கான மழை பொழிந்தாய்
அத்தியடியான் வீதியுலா வருகையிலே
அடியார்களை இசை வெள்ளத்தில் நீந்த வைத்து
பிள்ளையார் முன் "நாதஸ்வர கான விநோதன்"
எனும் பெயரையும் பெற்றாய்
இன்று நீவிர் பெற்ற கம்பன் விழாவில்
"ஏற்றமிகு இளைஞர்"
எனும் விருதினையிட்டு மகிழ்வுறும் தமிழ்ச் சமூகத்தினருடன் இணைந்து நாமும் பேருவகை கொள்கின்றோம். அத்தியடிப் பிள்ளையார் திருவருளால் மேலும் பல விருதுகள் நீவிர் பெற்று நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்!

**யாழ். அத்தியடிப் பிள்ளையார் கோயில் நிர்வாக சபையும், அத்தியடி இந்து இளைஞர்களும்.**

(2.6.9)

# JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE
## யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்

*விவசாயப் பயிற்சி நெறிகளுக்கான*
*விண்ணப்பம் கோரல்*
*மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி*
*ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றது*
*பதிவிலக்கம்* **TVEC - P25/0026**

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வேலைவாய்ப்புக்களைப் பெறவும் சுயதொழில் வாய்ப்புக்களைப் பெறவும் ஏற்ற புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய செய்முறை ஊடான பயிற்சி நெறி க.பொ.த. உயர் தரம் கற்ற 17 - 26 வயதுக்கிடைப்பட்ட இருபாலாருக்குமான இலவச பயிற்சிநெறி. பயிற்சி பெறும் காலத்தில் உதவு தொகை வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் (25.04.2012) காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெற இருக்கும் நேர்முகப் பரீட்சைக்குப் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வித் தகைமைப் பத்திரங்கள், கிராமசேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இருவரின் நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு
அதிபர்
யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்
மருதனார்மடம், சுன்னாகம்
தொலைபேசி இல : 021 3214571

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனம்
இல. 7, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
பதிவு இல. : 15251

## மாபெரும் கருந்தரங்கு

வங்கியியல் கற்கைநெறிகளும், நிதி, கணக்கீட்டு கற்கையும்

**CBF, DBF, ACCA**

காலம் : சனி, ஞாயிறு
பி.ப. 2.00 - 3.00

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு:
இயக்குநர், யாழ்ப்பாண தொழில்நுட்ப நிறுவனம்,
(ஆரியகுளம் சந்திக்கும் அப்பலோ வைத்தியசாலைக்கும் அருகில்) யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 5670345 Email - jticdu@gmail.com.


## மரண அறிவித்தல்கள்

### இரத்தினம் பொன்னுராசா (J.P)

*(ஓய்வுபெற்ற பிரதமலிகிதர், கிளிநொச்சி கச்சேரி)*



வட்டுக்கோட்டை, மூளாய் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தி னம் பொன்னுராசா (J.P.) (ஓய்வுபெற்ற பிரதம லிகி தர், கிளிநொச்சி, கச்சேரி) நேற்று (17.04.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் யோகராணியின் அன்புக் கண வரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - பொன் னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற சரவணபவனின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம் (ஆசிரி யர்) - பவளமணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன், செல்வராசா, சிவபாக்கியம், மனோண்மணி, பூலோகசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கவீந்திரன், திருமதி பவாணி, மருதவாணர், சேகரன் (கனடா) ஆகியோ ரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2012) புதன்கிழமை பி.ப 12.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தக னக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தெல்லிப்பழை வீதி,
வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை.

தகவல்:
பொ. யோகராணி
(மனைவி)



### திருமதி சிவபாக்கியம் சண்முகநாதன் (மகேஸ்)

தாவடி தெற்கு முருகமூர்த்தி கோயில டியைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கனடாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சண்முகநாதன் நேற்று முன்தினம் (16.04.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தம்பையா சண்முகநாதனின் அன்பு மனைவி யும், உதயகுமார் (கனடா), ரேவதி, ரமேஸ்குமார் (கனடா), சாந்தகுமார் (கனடா), சாந்தினி (கனடா) ஆகியோரின் அன் புத் தாயும் சாந்தி (கனடா), தர்மதுரை, தாரணி (கனடா), கௌசி (கனடா), ரமணன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஜெயந்தன், கோபிதன், அஜந்தன், சுஜந்தன், சுஜந் தினி, மதுசன் (கனடா), விஜி (கனடா), கோகுலன் (கனடா), திலக்ஷன் (கனடா), தனுஷன் (கனடா), நிருஜா (கனடா), அஷ்வின் (கனடா), பிருந்துவி (கனடா), அர்சுனா (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் கிழக்கு,*
*கற்பகப்பிள்ளையார் கோயிலடி,*
*றமேஸ் 0019057869854*

*தகவல்:-*
*கு.தர்மதுரை (ராசாத்தி)*
*(மருமகன்)*


## மொழி வகுப்புகள்

ஆங்கிலத்தில் பட்டம் பெற்ற ஆசிரியரால் சிங்களம், ஆங்கிலம் ஆகியன வீடுவந்து தனிப்படவும், குழுவாகவும் கற்பிக்கப்படும்.
தொடர்பு: 075 2647393/078 3415 869

## காணி விற்பனைக்கு

கொக்குவில் பொற்பதி வீதியில், செருகப் புலம் ஒழுங்கையில், 9 பரப்புக்காணி விற் பனைக்கு உண்டு.
உடன் தொடர்பு கொள்ளவும்
(தரகர் தேவையில்லை)
T.P : 071 5694859


## கண்ணீர் காணிக்கைகள்

### இரத்தினம் பொன்னுராசா



17.04.2012 அன்று அமரத்துவம் அடைந்த எமது வட்டுக்கோட்டை மூளாய் வீதி ஸ்ரீ கணேசா வாசிகசாலையின் தலைவரும், இளைஞர் உடலுளவிருத்தி சங்கத்தின் மூத்த உறுப்பினருமான அமரர் இரத்தினம் பொன்னுராசா அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயரடைவதோடு அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

*ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்*
*ஸ்ரீகணேசா வாசிகசாலையும்,*
*இளைஞர் உடலுளவிருத்தி சங்கமும்*
*மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.*

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை பணியாளர் நல்லையா கணேசராசா அவர்களின் அன்புத்தந்தை

**நமசிவாயம் நல்லையா**



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம்சாந்தி!சாந்தி!!சாந்தி!!!

**ஆசிரியர் கழகம்.**
*யா/அச்செழு,*
*சைவப்பிரகாச வித்தியாசாலை.*


## வாடகைக்கு தேவை

3 கியூப் டிப்பர் வாகனம் வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு:-
*நாராயணா ரான்ஸ்போட், 0772247740*


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

*கடந்த 19.03.2012 திங்கட்கிழமை*
*சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி*

### அமரர் திருமதி மதியாபரணம் தேவநாயகி



தோற்றம்: 01-10-1954
மறைவு: 19-03-2012

**(இளைப்பாறிய ஆசிரியை)**

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (18.04.2012)புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம்·தாங்களும் வருகை தந்து அன் னாரின் ஆத் மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ் விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. அன்புடன் குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



**லயன் இரத்தினம் பொன்னுராசா J.P.**
**(வட்டுக்கோட்டை)**

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினரும், கழகத்தின் வளர்ச்சிக்காகவும் நொய்ந்த மக்களி னது சேவைக்காகவும் அயராது உழைத்த பெருமகன் லயன் இ. பொன்னுராசா J.P. அவர்களது திடீர் இழப்பு எல்லோ ருக்கும் பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் குடும் பத்தினருக்கும் ஆறுதல் கூறுகின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்,
லயன்ஸ் கழகம்,
வட்டுக்கோட்டை.

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 90ஆவது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் கணபதிப்பிள்ளை
பாலசுப்பிரமணியம் (அப்பு)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16.01.1943 | 22.01.2012 |

கடந்த 22.01.2012 அன்று இறை பதம் அடைந்த எமது குடும்பத் தலை வர் அமரர் கணபதிப்பிள்ளை பால சுப்பிரமணியம் அவர்களின் அந்தி யேட்டி நிகழ்வு நாளை (19.04.2012) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

*காளி கோயிலடி,*
*சங்கானை.*

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### குஞ்சர் குணரட்ணம்



யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குஞ்சர் குணரட்ணம் நேற்று (17.04.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குஞ்சர் - பொன்னு தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தர் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும், கனகம்மா, தங்கச்சியம்மா, மல்லிகாதேவி, இராஜேந்திரம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அருந்ததி, காலஞ்சென்ற சித்திரா, சுரேந்திரா (பிரான்ஸ்), கனிஷ்ரா, ஸ்ரீ ஜனகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரன் (முத்துமாரி மரக்காலை), மகாலிங்கம், ஸ்ரீதரன் (பிரான்ஸ்), புவீந்திரன் (கண்ணன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2012) புதன்கிழமை நண்பல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாரியம்மன் ஒழுங்கை,*
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.


BCHS
# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyankulam,
Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299[illegible]

Batch - 1: 23.04.2012 9.00 - 12.00
Batch - 2: 25.04.2012 3.00 - 5.00
Batch - 3: 28.04.2012 9.00 - 12.00

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நடந்தது இனப்படுகொலையே

## இதனை உலகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார் உருத்திரகுமாரன்



**ஐ.நா. மனித உரிமைகள் குழு முற்றுமுழுதாக அறவழியில் செயற்படும் என்று கூறுவதற்கில்லை. நலன்சார் அரசியல் இராஜதந்திர நகர்வுகளிலேயே முடிவுகள் தங்கியுள்ளன.**

கொழும்பு, ஏப். 18

இலங்கையில் நடந்தேறியது இனப்படுகொலையே என்பதை உலகுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

- இவ்வாறு நோர்வேயில் நடைபெற்ற நாடுகடந்த தமிழீழ அரசின் பொதுக் கூட்டத்தில் தொலைக் காணொலி ஊடாக உரையாற்றும் போது பிரதமர் உருத்திரகுமாரன் தெரிவித்தார்.

நோர்வேயின் ஸ்தவாங்கர் நகரில் கடந்த சனிக்கிழமை நாடுகடந்த தமிழீழ அரசின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தமிழ் மக்களுடன் கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்ளும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கூட்டத்தில் பிரதமர்

உருத்திரகுமாரன் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசின் நீதி பரிபாலனத்தால் தமிழ்மக்களுக்கு நீதி கிடைக்கப் போவதில்லை என்பதையும் சுயாதீனமான விசாரணைக்கான சாத்தியக்கூறுகள் அங்கு இல்லை என்பதையும் ஐ.நா. மனிதவுரிமைக் குழுவும் தெரிந்துகொண்டுள்ளது. இலங்கை அரச படைகள்தான் படுகொலைகளை மேற்கொண்டன என்பதை மூடிமறைத்து அரசியல் வாதிகளைக் காப்பாற்றுவதற்காக சிறிய அளவில் சில இடங்களில் மனித உரிமை மீறப்பட்டுள்ளது என்பது போன்ற கருத்துகளை இலங்கை அரசு வெளியிடுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது எமக்குக் கிடைத்திருக்கும் வெற்றியின் முதற்படியாகும். இந்தத் தீர்மானம் இன்று உலகில் மாறிவரும் இராஜதந்திர உறவுகளைக் எடுத்துக்காட்டுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் குழு முற்றுமுழுதாக அறவழியில் செயற்படும் என்று கூறுவதற்கில்லை. நலன்சார் அரசியல் இராஜதந்திர நகர்வுகளிலேயே முடிவுகள் தங்கியுள்ளன.

இந்தவேளையில் இலங்கையில் நடந்தேறியது இனப்படுகொலையே என்பதை உலகுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியம். பல்வேறு நாடுகளின் மக்கள் நீதிமன்றங்களில் இலங்கையில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டது இனப்படுகொலைதான் என்று நிரூபிப்பது முக்கியமானது. அதுவே ஐ.நா. வையும் உலகையும் ஏற்றுக்கொள்ள வைக்க உதவும் - என்றார்.

# மனித உரிமைகள் குறித்து முதல்முறையாக அறிக்கை

## ஐ.நாவில் இலங்கை சமர்ப்பிக்கும்

கொழும்பு, ஏப்.18

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு முதல் முறையாக, மனித உரிமைச் செயற்பாடுகள் தொடர்பான சமகால மீளாய்வு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளது.

சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறுவதற்காக, சுதந்திரமான அமைப்புகளுடன் இணைந்து இலங்கை அரசு இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் விசாரணை ஆணையாளர் பிரதிபா மகாநாமஹேவ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எல்லா அரச மற்றும் ஏனைய அமைப்புக்களுடன் இணைந்து உயர்ந்த தரத்திலான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தால், இலங்கையினால் அனைத்துலக சமூகத்தின் ஆதரவை வெற்றிகொள்ள முடியும்.

சிறிலங்காவுக்கு எதிராக, ஐ.நா மனித உரிமைகள் சபையில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், இந்த நேரத்தில் இது மிகவும் முக்கியமானது.

ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கும் ஒரு முறை எல்லா உறுப்பு நாடுகளும்,உலகளாவிய மீளாய்வின் போது, ஐ.நா மனித உரிமைகள் சபையால் மீளாய்வு செய்யப்படுவதற்காக ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இது இலங்கைக்கு ஒரு பொன்னான வாய்ப்பைத் தந்துள்ளது.

இலங்கைக்குக்கு எதிராக ஐ.நா. மனிதஉரிமைகள் சபைத் தீர்மானம் நிறைவேற்றியுள்ள நிலையில், நடுநிலையான ஒரு அறிக்கையைச் சமர்ப்பிப்பதன் மூலம் அனைத்துலக சமூகத்தின் கண்களைத் திறக்க முடியும்.ஏனென்றால் அடுத்த ஆண்டு நாம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்குப் பதிலளிக்க வேண்டிய நிலையில் உள்ளோம்-என்றார். (த)

# வீழ்ந்து விடாத வீரம்? மண்டியிடாத மானம்??

*(12ஆம் பக்கத் தொடர்ச்சி)*

'தமிழ் மக்களின் மகிழ்ச்சியான வாழ்வும்', 'இன நல்லிணக்கமும்', 'கூடி வாழும் ஒரே தேசக் கொள்கையும்' மட்டுமே இதற்கான பதில்களாயின், செல்வன் பி.பாலச்சந்திரன் இப்போது ஹாட்லிக் கல்லூரியில் ஒன்பதாம் தரத்தில் படித்துக் கொண்டிருந்திருப்பானே? அரச ஊழியரான அவன் தந்தை, அரை நாள் லீவு போட்டுவந்து, அவனது தவணைப் பரீட்சை முன்னேற்ற அறிக்கையை வாங்கிக் போயிருப்பாரே!

குருதி கொடுத்து இந்த மண்ணைக் குளிப்பாட்டிப் போகும் பலி ஆடுகளான நிலையிலிருக்கும் எம் மக்கள், கழுத்தில் மாட்டப்பட்ட மாலையின் மலர்கள் வாசனை சுரப்பதாய் புளுகிப் போற்றுவதை, என்ன வென்று சொல்ல......




வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நந்தன புதுவருட வாழ்த்துக்கள்


எமது நிறுவனத்தின் **முதலாம் ஆண்டு** நிறைவையொட்டி (18.04.2012) இன்றைய தினம் வருகைதரும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அன்பளிப்பு பொருள்களும் (Free Gift), கொள்வனவு செய்யும் அனைத்துப் பொருள்களுக்கும் 10% விலைக்கழிவும் வழங்கப்படும் என மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


அனைத்துப் பொருள்களும் ஹொங்கொங், பாங்கொக் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை.



இதுவரை காலமும் வருகைதந்த வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*



14, இராமநாதன் வீதி, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 0778357928, 0750347738.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்முதலில்...










இலங்கையிலேயே முதல் முறையாக செயற்கைப் புற் தரையுடன் கூடிய நவீன வசதிகள் கொண்ட ஐந்து பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்ட மைதானம் வல்வெட்டித்துறையில் யாழ். அரச அதிபரால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப் பட்டது. தனது சொந்தப் பணத்தில் ஒரு கோடி ரூபா செலவில் இந்த மைதானத்தை எட்வேட் தங்கவடிவேல், அரு. சபாரத்தினம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக சபா.இராஜேந்திரம் அமைத்துக் கொடுத்துள்ளார். (ங-253)

# யாழ். மாவட்ட வலைப்பந்தில் வென்றது தெல்லிப்பழை

வலி. வடக்கு, ஏப். 18

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே வலைப் பந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தியது.

இந்தத் தொடரில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் இடம் பெற்ற இந்த இறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

போட்டியில் இரு அணிகளும் ஆரம்பம் முதல் இறுதி வரை கடுமையாக மோதிக்கொண்டன. எந்த அணி வெற்றி பெறப் போகின்றது என்பதனைக் கணிக்க முடியாத அளவுக்கு மாறிமாறிப் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் 19:18 புள்ளிகள் என்ற நிலையில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி முன்னிலையில் நின்ற வேளையில் ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் வெற்றி பெற வேண்டும் என்ற புதிய உத்வேகத்துடன் களம் புகுந்தன. இரு அணிகளும் மீண்டும் மாறி மாறிப் புள்ளிகளைப் பெற்ற போதிலும் இறுதி நிமிடத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியின் கைகள் மேலோங்கின.

தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 22:19 புள்ளிகள் என்ற நிலையில் இரண்டாம் பாதி ஆட்டத்திலும் ஆதிக்கம் செலுத்தியது.

ஆட்ட நிறைவில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 41:37 புள்ளிகள் என்ற அடிப்படையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை வெற்றி கொண்டு மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

(ங-86)

# பூநகரிக் கோட்ட தடகள முடிவுகள்

பூநகரி கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகளில் கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயம் 12 முதலிடங்களைப் பெற்று சாதனை புரிந்துள்ளது. அதன் விவரம் வருமாறு:-

19 வயதின் கீழ் கிரிக்கெட் ஆண்கள்-முதலாமிடம்

19 வயதின் கீழ் கிரிக்கெட் பெண்கள்-முதலாமிடம்

19 வயதின் கீழ் எல்லே ஆண்கள்-முதலாமிடம்

19 வயதின் கீழ் உதைபந்து ஆண்கள்- முதலாமிடம்

19 வயதின் கீழ் உதைபந்து பெண்கள்-முதலாமிடம்

17 வயதின் கீழ் உதைபந்து ஆண்கள்-முதலாமிடம்

19 வயதின் கீழ் வலைப்பந்து பெண்கள்-முதலாமிடம்

உடற்பயிற்சி அணி ஆண்கள்-முதலாமிடம்

17 வயதின் கீழ் உதைபந்து ஆண்கள்-முதலாமிடம்

19 வயதின் கீழ் சதுரங்கம் ஆண்கள்-முதலாமிடம்

15 வயதின் கீழ் கரம் ஆண்கள்-முதலாமிடம்

15 வயதின் கீழ் கரம் பெண்கள்-முதலாமிடம்

19 வயதின் கீழ் எல்லே பெண்கள்-2ஆம் இடம்

17 வயதின் கீழ் கரப்பந்தாட்டம் ஆண்கள்-2ஆம் இடம்

17 வயதின் கீழ் கரப்பந்தாட்டம் பெண்கள்-3ஆம் இடம்

அத்துடன் இந்தப் பாடசாலை பூநகரிக் கோட்ட தடகளப் போட்டிகளில் 235 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(ங)

# கிளிநொச்சி மாவட்ட குழுநிலைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.18

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான குழு நிலைப் போட்டிகள் இடம் பெறும் மைதானம், திகதிகளின் விவரங்கள் வருமாறு:

ஆண்,பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டி 19 ஆம் திகதி அம்பாள்குளம் இளந்தென்றல் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

ஆண்,பெண் இருபாலாருக்குமான உதைபந்தாட்டப் போட்டி 20 ஆம் திகதி பச்சிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

ஆண்,பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட் போட்டியும் பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியும் 21 ஆம் திகதி கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

ஆண்,பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டி பரந்தன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

(ங-23)

# ஹொக்கிச் சங்கத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவு

வலி வடக்கு, ஏப். 18

யாழ். மாவட்ட ஹொக்கி விளையாட்டுக்கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பாண்டுக்கான புதிய அலுவலர்களாக தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்- கே.குலரத்தினம்

உபதலைவர்கள்-கே.கணேசநாதன், ஜீ.டி.மதியழகன், [illegible]

செயலாளர்- எஸ்.கோபிநாத்.

பொருளாளர்- எஸ்.ஸ்ரீரஜீவன்

கணக்காய்வாளர்-ஜே.ஜெயப்பிரியந்தன்.

பரீட்சைக்குழு- கே.கணேசநாதன், ஜீ.டி மதியழகன், கே.குலரத்தினம்.

போசகர்கள்- ஜீ.எஸ்.சாந்திகரன், எ.அகிலதாசன், செ.ஜெயரத்தினம்

மற்றும் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் பிரதிநிதிகளும் இக்குழுவில் இடம்பெறுவார்கள்.

(ங-86)

# வலிகாமம் வலயத்தில் மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.18

வலிகாமம் கல்வி வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 26,27,28 ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதே வேளை 25ஆம் திகதி 15,17,19 21 வயதுப் பிரிவு ஆண்-பெண் இருபாலாருக்குமான நீளம் பாய்தல்,கோல் ஊன்றிப் பாய்தல் போட்டிகள் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் இடம் பெறவுள்ளன.

(ங-23)

# தென்மராட்சி வலய மெய்வன்மைப் போட்டி முடிவுகள்

4x400 அஞ்சல் ஓட்டம்

முதலாம் இடம்-சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

இரண்டாம் இடம்- சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

மூன்றாம் இடம் நாவற்குழி ம.வி.

17 வயது ஆண்கள்

100 மீற்றர் ஓட்டம்

செ.மிரோஜன் முதலாம் இடம்-வரணி ம.வித்தி

இ.லக்ஷன். இரண்டாம் இடம்- சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.

ஜெ.அபரிநாதப் மூன்றாம் இடம்- நாவற்குழி ம.வி.

200 மீற்றர் ஓட்டம்

எம்.மிதுலன் முதலாம் இடம்-சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.

க.விமோசன் இரண்டாம் இடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

க.சஜீறன் மூன்றாமிடம்-கைதடி விக்னேஸ்வரா வித்தி

400 மீற்றர் ஓட்டம்

த.அஜிந்தன் முதலாமிடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

என்.மிதுலன்இரண்டாம் இடம்- சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.

பி.அன்பரசன் மூன்றாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

800 மீற்றர் ஓட்டம்

த.அஜீந்தன் முதலாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

ந.ஜெயநிசாந்தன் இரண்டாம் இடம்-நாவற்குழி ம.வி

என்.மிதுலன் மூன்றாம் இடம் -சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.

1500 மீற்றர் ஓட்டம்

த.அஜிந்தன் முதலாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

சு.மதியழகன் இரண்டாம் இடம்-உசன் இராமநாதன் ம. வி.

ஆ.டயானன் மூன்றாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

100 மீற்றர்

தடை தாண்டல் போட்டி

க.விமோசன் முதலாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

ம.ஜீவன்ராஜ் இரண்டாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

செ.மிரோஜன் .மூன்றாம் இடம்- வரணி ம.வி.

தடை தாண்டல்

க. விமோசன் முதலாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

ந.ஜெயநிசாந்தன் இரண்டாம்இடம்-நாவற்குழிம.வித்தி

ர.றுாஜெக் மூன்றாமிடம்-மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலை

நீளம் பாய்தல்

த.தர்மிகன் முதலாம் இடம்-நாவற்குழி ம.வி.

சி.துலக்ஷன் இரண்டாம் இடம் -கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

கு.லக்ஷன் மூன்றாம் இடம்- மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா ம.வி.

முப்பாய்சல்

த.தர்மிகன் முதலாம் இடம்- நாவற்குழி ம.வித்தி

சி.டினேஷன் இரண்டாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

உயரம் பாய்தல்

சி.டினேஷன் முதலாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

கி.ஞா.றொகான் இரண்டாம் இடம்-சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

கி.ரதீஸ் மூன்றாம் இடம் -சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.

கோலூன்றிப் பாய்தல்

செ.மிரோஜன் முதலா இடம்-வரணி ம.வி.

த.தனஞ்செயன் இரண்டாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

சி.துலக்ஷன் மூன்றாம் இடம் கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

குண்டு எறிதல்

நா.துர்க்காதரன் முதலாம் இடம்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

த.தனஞ்செயன் இரண்டாம் இடம்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

த.தர்சன் மூன்றாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

தட்டு எறிதல்

வ.சதீஸ் முதலாம் இடம் -கச்சாய் அ.த.க பாடசாலை

ர.றுாஜெக் இரண்டாம் இடம்-மட்டுவில் தெற்கு அ.மி.த.பாடசாலை

வி.யுவராஜ் மூன்றாம் இடம்- மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயக் ம.வி.

ஈட்டி எறிதல்

த.தனஞ்செயன் முதலாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

ச.கஜானன் இரண்டாம் இடம்-வீரசிங்கம் ம.வித்தி

சி.நிறோஜன் மூன்றாம் இடம்- சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

4× 100 மீற்றர்

அஞ்சல் ஓட்டம்

முதலாம் இடம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

இரண்டாம் இடம்- சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

மூன்றாம் இடம்- வரணி ம.வி.

4×400 மீற்றர்

அஞ்சல் ஓட்டம்

முதலாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

இரண்டாம் இடம் -சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.

மூன்றாம் இடம் -வரணி ம.வி.

# புத்தாண்டுப் போட்டிகள்

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான நல்லுறவை வளர்க்கும் நோக்கில் புத்தாண்டை ஒட்டிய விளையாட்டுப் போட்டி நிகழ்வு இன்று பருத்தித்துறை திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜகத் அபயக்கோன் தலைமையில் காலை 7 மணியளவில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக்பெரேரா கலந்து கொள்ளவுள்ளார்.

(ங-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. ஆதிக்கம்

மேற்கிந்தியத்தீவுகளின் முன்னிலைத் துடுப்பாட்ட வீரர்கள் ஆஸியின் பந்து வீச்சில் திணற, ஆஸ்திரேலிய அணி இரண்டாவது நாள் நிறைவில்முன்னிலை பெற்றது.

ஆஸ்திரேலிய அணி, மேற்கிந்தியத்தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்டில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் ரினினாட்டில் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸி. முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

வொட்ஸனின் அரைச் சதத்தின் உதவியுடன் நேற்று முன்தினம் ஆட்டத்தின் நிறைவு வரையில் ஆஸ்திரேலிய அணி 5 இலக்குகளை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மைக் ஹஸி 26, மத்தியூ வேட் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

நேற்றைய ஆட்டம் ஆரம்பமானதும் அணி மேலதிக ஓட்டமெதுவுமின்றி வேட் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் மைக் ஹஸி, பார்ரின்ஸன் இணைந்து ஏழாவது இலக்குக்கு இணைந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். மெதுவாகவே ஓட்டங்களை இந்த ஜோடி சேர்த்தது. சிறப்பாகக் களத்தில் நின்றாடிய ஹஸி 28 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். சிறப்பாக 89 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் இணைப்பு பிரிக்கப்பட்டது. ஹஸி 73 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே பார்ரின்ஸன் 32 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க ஆஸ்திரேலிய அணியின் முதலாவது இன்னிங்ஸ் நிறைவுக்கு வந்தது.

135 பந்துப் பரிமாற்றங்கள் களத்தில் நின்றாடிய ஆஸ்திரேலிய அணி 311 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் கெமர ரோச் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி ஆரம்பத்திலிருந்து சரிவுகளை தொடர்ச்சியாகச் சந்தித்தது. பிரத்வெயிட் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்து மேற்கிந்தியத் தீவுகளுக்கு சரியான ஆரம்பத்தை ஏற்படுத்தத் தவறினார். அதன் பின்னர் பரத், கெரன் பவல் இணைந்து இரண்டாவது இலக்குக்குச் சரியான அடித்தளம் அமைக்க முயற்ச்சித்தனர். 26 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் பரத் 7 ஓட்டங்களுடனும், அணி 38 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பவல் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 38 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்தது.

அதன் பின்னர் டரன் பிராவோ, சந்தர்போல் இணைந்து நேற்றைய ஆட்ட நேர நிறைவு வரையில் மேற்கிந்தியத்தீவுகளைப் பாதுகாத்தனர். நேற்றைய இரண்டாவது நாள் ஆட்ட நேர நிறைவில் 25.3 பந்துப் பரிமாற்றங்களில் 49 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்துள்ளது. களத்தில் பிராவோ 16, சந்தர்போல் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காது உள்ளனர். பந்து வீச்சில் ஆஸி. சார்பில் பீர், ஹில்பென்ஹாஸ், பார்ரின்ஸன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர். (5)

# ஐ.பி.எல். லா? இலங்கையா? மத்தியூஸ் முடிவெடுக்கட்டும்



இலங்கை அணியின் சகலதுறை வீரர் அன்ஜலோ மத்தியூஸிற்கு கவனமாகச் செயற்படுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை அணியின் பிரதம தேர்வாளர் அசந்த டி. மெல் தெரிவித்துள்ளார். அண்மைக் காலமாக உடற்தகுதிப் பிரச்சினைகளால் அவதிப்பட்டு வரும் அன்ஜலோ மத்தியூஸ், ஐ.பி.எல். தொடரில் பந்துவீசுவதை அடுத்தே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக உடற்தகுதிப் பிரச்சினைகளால் அவதிப்பட்டு வரும் அன்ஜலோ மத்தியூஸ், ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற முக்கோண ஒருநாள் சர்வதேச தொடரின் இறுதி ஆட்டங்களில் பங்குபற்றியிருக்கவில்லை. அதன் பின்னர் இடம்பெற்ற ஆசியக் கிண்ணத் தொடரிலும் பங்குபற்றியிருக்கவில்லை. இங்கிலாந்து அணி இலங்கைக்கு 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக வந்திருந்த போது முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் பங்குபற்ற முடியாத நிலையில், இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் தனியே துடுப்பாட்ட வீரராகப் பங்குபற்றியிருந்தார்.

எனினும் ஐ.பி.எல். தொடரில் அவர் பந்து வீசி வரும் நிலையில்இது கேள்விகளைஎழுப்பியுள்ளது. இந்த நிலையில் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பிரதம தேர்வாளர் அசந்த டி. மெல், தேர்வாளர்களாக தங்களுக்கு ஐ.பி.எல். தொடரில் ஆதிக்கம் செலுத்தும் உரிமை கிடையாது எனவும், அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது எனவும் தெரிவித்தார்.

எனினும் அன்ஜலோ மத்தியூஸ் காயமடைந்தால் பிரச்சினைகள் திரும்ப ஏற்படும் எனத் தெரிவித்த அசந்த டி. மெல், தனிப்பட்ட ரீதியில் அன்ஜலோ மத்தியூஸிற்கு தான் பந்து வீசுவதைத் தவிர்க்குமாறு தெரிவித்துள்ளதாகவும், தாங்கள் சொல்வதைக் கேட்க அவர் விரும்பவில்லையெனில், அதைத் தாண்டி என்ன செய்ய முடியும் எனத் தனக்குப் புரியவில்லை எனத் தெரிவித்தார்.

கிரிக்கெட் வீரர்கள் தங்களுக்கு எது முக்கியமானது என்பதை அவர்களே முடிவெடுத்துக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்த அவர், ஐ.பி.எல். தொடரா அல்லது நாட்டுக்காக விளையாடுவதா முக்கியமானது என்பதை அவர்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

ஐ.பி.எல் தொடரில் மத்தியூஸ் 4 பந்துப் பரிமாற்றங்கள் மாத்திரமே வீசும் நிலையில் அதை வீசக்கூடியவாறு அவருக்கு உடல் நிலை காணப்படலாம் எனத் தெரிவித்த அவர், எனினும் அதுவும் அவரது உடலுக்கு களைப்பை வழங்கக்கூடியதாக அமையும் எனத் தெரிவித்தார்.

இலங்கைக் கிரிக்கெட் அணிக்கும் ஐ.பி.எல்.க்குமிடையிலான முறுகல் தொடர்ந்தும் நிலவி வருகிறது. 2008 ஆம் ஆண்டில் இலங்கை அணி இங்கிலாந்துக்கு டெஸ்ட் தொடரொன்றிற்குச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. எனினும் அணியின் சிரேஷ்ட வீரர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க அந்தத் தொடர் கைவிடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.


அதன் பின்னர் அணியின் சிரேஷ்ட வேகப்பந்து வீச்சாளரான லசித் மலிங்க கடந்த வருடம் ஐ.பி.எல். இல் பங்குபற்றிய போது அவரை நாட்டுக்குத் திரும்புமாறு இலங்கைக் கிரிக்கெட் சபை கோரிக்கை விடுக்க, அவர் டெஸ்டிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்திருந்திருந்தார்.

எனினும் ஐ.பி.எல். மூலம் வீரர்களுக்குக் கிடைக்கும் பெருந்தொகைப் பணம் காரணமாக வீரர்கள் ஐ.பி.எல். தொடரைத் தவிர்க்க முடியாது காணப்படுகின்ற அதேவேளை, வீரர்களுக்குக் கிடைக்கும் பணத்தின் 10 சதவீதம் இலங்கைக் கிரிக்கெட் சபைக்குக் கிடைக்கும் நிலையில் இலங்கைக் கிரிக்கெட் சபையும் ஐ.பி.எல். தொடரில் மறைமுகமாகத் தங்கியிருக்கிறது.

(5)

# மும்பையை முடக்கிய டெல்லி





ஐ.பி.எல்., லீக் ஆட்டத்தில் அசத்திய டில்லி டெயாடெவில்ஸ் அணி, மும்பை இந்தியன்ஸ் அணியை 7 இலக்குகள் வித்தியாசத்தில் மிகச் சுலபமாக வீழ்த்தியது. 92 ஓட்டங்களுக்கு சுருண்ட மும்பை அணி, சொந்த மண்ணில் ஏமாற்றம் அளித்தது.

மும்பையில் நேற்று முன்தினம் நடந்த ஐ.பி.எல்., 'ரி-20' தொடரின் 19 ஆவது லீக் ஆட்டத்தில் டில்லி டெயாடெவில்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. மும்பை அணியில் தொடர்ந்து நான்காவது ஆட்டத்தில் சச்சின் (விரல் காயம்) இடம் பெறவில்லை. மலிங்க (முதுகு வலி), ஜேம்ஸ் பிராங்க்ளின், சுமன் நீக்கப்பட்டு, ஆர்.பி.சிங், டேவி ஜேக்கப்ஸ், கிளின்ட் மெக்காய் வாய்ப்பு பெற்றனர். டில்லி அணியில் மொர்விக்கு பதிலாக ரோஸ் ரெய்லர் இடம் பெற்றார். நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணித் தலைவர் சேவாக், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

மும்பை அணியின் துடுப்பாட்ட வீரர்கள் சொதப்பினர். டில்லி பந்து வீச்சாளர்கள் பட்டையை கிளப்ப, இலக்குகள் வரிசையாக சரிந்தன. சுழலில் மிரட்டிய நதீம், முதலில் டேவி ஜேக்கப்சை (0) 'போல்டாக்கினார்'. அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் ஆபத்தான ரிச்சர்டு லீவியையும் (1) 'போல்டாக்கி' அசத்தினார். பின்னர் அகார்கர் பந்தை தட்டி விட்டு ஓர் ஓட்டத்துக்காக ஓடினார் அம்பதி ராயுடு. ஆனால், மறுமுனையில் இருந்த ரோகித் சர்மா மறுக்க, ராயுடு (4) பரிதாபமாக 'ரன் அவுட்டானார்'. அதிரடி பொலார்டும் (1), உமேஷ் யாதவ் வேகத்தில் வீழ்ந்தார். இந்த அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் ரோகித் சர்மா (29), அகார்கர் பந்தில் நடையை கட்டினார். தினேஷ் கார்த்திக்கும் (3) கைவிட, மும்பை அணி 10.2 பந்து பரிமாற்றங்களில் 6 இலக்குகளுக்கு 44 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தத்தளித்தது.

பின்னர் அணித்தலைவர் ஹர்பஜன், மெக்காய் இணைந்து போராடினர். அகார்கர் பந்து பரிமாற்றத்தில் ஹர்பஜன் ஓர் ஆறு, இரண்டு நான்கு அடித்தார். இர்பான் பந்தில் மெக்காய் (8) ஆட்டமிழந்தார். ஆர்.பி. சிங் (0) ஏமாற்றினார். சிறிது நேரம் அதிரடி காட்டிய ஹர்பஜன் (33), மோர்னி மோர்கல் பந்தில் வெளியேறினார். மும்பை அணி 19.2 பந்துப் பரிமாற்றங்களில் 92 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து சரணடைந்தது.

போகிற போக்கில் எட்டக்கூடிய இலக்கை விரட்டிய டில்லி அணிக்கு சேவாக், நமன் ஓஜா இணைந்து நல்ல தொடக்கம் கொடுத்தனர். முனாப் பட்டேல் வீசிய முதல் பந்து பரிமாற்றத்திலேயே சேவாக் ஓர் ஆறு ஓட்டம் அடித்தார். மெக்காய் பந்து பரிமாற்றத்தில் இருவரும் தலா ஒரு நான்கு ஓட்டம் அடித்தனர். ஆர்.பி.சிங் வேகத்தில் நமன் ஓஜா (13) ஆட்டமிழந்தார். அடுத்த வந்த பீற்றர்சனும் (9) ஆர்.பி.சிங் பந்தில் வீழ்ந்தார்.

பின்னர் சேவாக், ஜெயவர்தனா சேர்ந்து நிதானமாக ஆடினர். ஒன்று, இரண்டு ஓட்டங்களாக சேர்த்த இவர்கள், ஓட்ட எண்ணிக்கையை நகர்த்தினர். பிரக்யன் ஓஜா சுழலில் சேவாக் (32) சிக்கினார். விவேகமாக விளையாடிய ஜெயவர்தனா (17-ஆட்டமிழக்காமல்), ரோஸ் ரெய்லர் (11-ஆட்டமிழக்காமல்) இணைந்து வெற்றியை உறுதி செய்தனர். டில்லி அணி 14.5 பந்து பரிமாற்றங்களில் 3 இலக்குகளுக்கு 93 ஓட்டங்கள் எடுத்து சுலப வெற்றி பெற்றது. ஆட்ட நாயகன் விருதை டில்லி வீரர் நதீம் வென்றார்.

### அதிரடி மந்தம்

ஐ.பி.எல்., தொடரில் பொதுவாக ஆறு ஓட்டங்கள் பறக்கும். ஆனால், நேற்று முன்தினம் ஆடுகளம் பந்து வீச்சாளர்களுக்கு ஒத்துழைக்க, இரண்டு ஆறு ஓட்டங்கள் மட்டுமே அடிக்கப்பட்டன. மும்பை சார்பில் ஹர்பஜனும், டில்லி சார்பில் சேவாக்கும் தலா ஓர் ஆறு ஓட்டம் அடித்தனர்.

### குறைந்த ஓட்ட எண்ணிக்கை

டில்லி அணிக்கு எதிராக 92 ஓட்டங்களுக்கு சுருண்ட மும்பை இந்தியன்ஸ் அணி, ஐ.பி.எல்., அரங்கில் தனது இரண்டாவது குறைந்த ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. முன்னதாக கடந்த ஆண்டு மொகாலியில் நடந்த கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில், மும்பை அணி 87 ஓட்டங்களுக்கு சகல இலக்குளையும் இழந்திருந்தது.

* இது, இந்தத் தொடரில் இதுவரை நடந்துள்ள ஆட்டங்களில் எடுக்கப்பட்ட குறைந்தபட்ச ஓட்ட எண்ணிக்கை. முன்னதாக டில்லி அணிக்கு எதிராக ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த ஆட்டத்தில் கொல்கத்தா அணி 9 இலக்குகளுக்கு 97 ஓட்டங்கள் எடுத்தது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோனி மும்பையில் ?

சென்னை சூப்ப கிங்ஸ் அணியின் அணித் தலைவர் டோனி மும்பைக்குச் சென்றுள்ளார், காயம் காரணமாக சிகிச்சைக்குச் சென்றதாகக் கூறப்பட்ட தகவல்களை அணி நிர்வாகம் மறுத்துள்ளது.

ஐந்தாவது ஐ.பி.எல். 'ரி-20' கிரிக்கெட் தொடரில் சென்னை சூப்ப கிங்ஸ் அணிக்கும், புனே வாரியர்ஸ் அணிக்குமிடையில் கடந்த சனிக்கிழமை புனேயில் நடைபெற்ற ஆட்டத்தில் டோனி முழுமையான உடற்தகுதியுடன் காணப்பட்டிருக்கவில்லை.

அவர் சில தருணங்களில் நடப்பதற்குச் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் மும்பையை நோக்கி தனது மனைவியுடன் பயணமாகியுள்ளார். அவர் வைத்தியரை பார்ப்பதற்காக மும்பைக்குச் சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.



சூரிய ஒளியிலிருந்து இலவசமாக வீட்டிற்கு SOLAR மூலம் மின்சாரத்தினை பெற்று இதிலிருந்து

Radio, Computer, Dish antenna, CFL bulb, T.V
பயன்படுத்தலாம்
விலை 30,000/= - 75,000/= வரை
(வங்கி மூலம் மாதாந்தம் செலுத்தலாம்)
எரிபொருள் (டீசல், மண்ணெண்ணெய்) செலவில்லாமல் நீரைப் பெற்றுக்கொள்ள வேண்டுமா ?
முந்திரிகை, தென்னை, மரக்கறி பயிர்ச் செய்கையாளர்கள்
விலை 215, 000/= முதல்.....
(வங்கி மூலம் மாதாந்தம் செலுத்தலாம்)
விபரங்களுக்கு
NEW ASIAN CENTER
T.P : 077 8249949, 071 8561654
56/15, ஸ்ரான்லி வீதி, சம்பத் வங்கி அருகில் யாழ்ப்பாணம்

DCS
மாணிப்பாய் மகளிர் கல்லூரி அருகில்
G.A.Q- B.A. (பேராதனை)
G.A.Q- B.A. (Part - I
B.A - Final (யாழ்)
துரித மீட்டல்
வினா- விடை விரிவுரைகள்
ஆரம்பம்: 19.04.2012
வியாழக்கிழமை 4.P.m

காணி விற்பனைக்கு
யாழ் மாநகரசபை எல்லைக்குள் வண்ணார் பண்ணையில் நாச்சிமார் கோயிலுக்கும் பூநாரி மரத்தடிக்கும் இடையில் காரைக்காட்டு 2ஆம் ஒழுங்கையில் 1 பரப்பு 3 குளியில் இரண்டு காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
நேரடித் தொடர்புகளுக்கு:-
0773608652, 0212227623

வேலை ஆள்கள் தேவை
சாவகச்சேரியில் இயங்கும் பிரியன் உணவகத்துக்கு பின்வரும் வேலை ஆள்கள் தேவை.
1. றொட்டி வேலை செய்பவர்
2. உணவு பரிமாறுபவர்
3. தேநீர் தயாரிப்பவர்
நேரில் தொடர்பு கொள்ளவும்.
"பிரியன் உணவகம்"
இல. 245, கண்டி வீதி, சாவகச்சேரி.
தொ.பே. 021 791 3750.

SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE
ஆங்கிலம், பிரெஞ்சு புதிய பிரிவு
ஆரம்பம் 21.4.2012 சனிக்கிழமை
ஆங்கிலம் பிரெஞ்ச்
பிரிவு 1 - காலை 8 - 9
பிரிவு 2 : மாலை 3 - 4
காலை 10 - 11
MyWay 182, STANLEY RD, JAFFNA 077 33 63 456

மருத்துவ உதவியாளர் பயிற்சி
O/L வரை கற்றிருக்கும் அனைவருக்கும் கே.யு வின் பிரபலமான தொழில் வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்ட பயிற்சி நெறி.
M.B.B.S வைத்தியர்களிடம் நேரடியாக கற்கும் அரிய வாய்ப்பு.
பயிற்சிக்கட்டணம் : 12,500/= (6 Months)
லாவா வைத்தியசாலையில் செயன்முறைப் பயிற்சிகள்
Knowledge Universe
No 75,Temple Road,Jaffna
Call : 0213208342
www.kugroup.info

SAAMSON ENGLISH 3 மாத சனி,ஞாயிறு பயிற்சிநெறி
கொழும்பில் சிலகாலம் தங்கிவிட்டு வருபவர்கள், சிங்களத்தில் சரளமாக பேசுவதை நீங்கள் பார்த்திருக்கிறீங்களா? அந்நபர் சில வேளை 5ஆம் வகுப்புக் கூடப் படிக்காதவ ராக இருக்கலாம்.
உலகில் எந்தவொரு மொழியைப் பழகுவதற்கும் "தகைமை" தேவையில்லை பலரும் ஆங்கிலத்தை பிழையான வழியில் கற்றுக்கொண்டதனாலேயே ஆங்கிலம் பழகுவதை இன்றும் வெறுக்கின்றனர்
எமது ஆங்கிலப் பயிற்சி முற்றுமுழுதாக வேறுபட்ட ஒரு முறையிலானதாகும்.
கரும்பலகை, வெண்கட்டி, கணினி புத்தகம், CD எதுவுமின்றி எமது ஆசிரியர்கள் உங்களுடனிருந்து ஆங்கில வசன அமைப்பு, பிரயோகம், இணைக்கும் சொல், சொற்றொடர் என்பவற்றை பேச்சுப்பயிற்சியின் மூலம் உங்கள் மனதில் பதியவைக்கும் ஒரு"Practical" ஆன பயிற்சியாகும்.
இது நீங்கள் சிறு குழந்தையாக இருந்தபோது (2-4 வயது) எப்படி உங்கள் பெற்றோர் பேசியதை அவதானித்து தமிழைப்பேசப்பழகினீர்களோ அதே போலானதாகும்.
கடந்த ஆண்டில் மாத்திரம் 2000 இற்கும் அதிகமானவர்கள் பயிற்சிபெற்ற எமது நிறுவனத்தில் பயிற்சி பெற விரும்பும் இளைஞர், யுவதிகள், தொழில்தேடுவோர், A/L, O/L பரீட்சை எழுதியோர் தொழில்புரிவோர், வெளிநாடு செல்லவிருப்போர், பாடசாலை உயர்கல்வி மாணவர்கள் 22.04.2012 இற்கு முன் நேரடியாக பதிவு செய்யுங்கள் (எமது நிறுவனம் வாரத்தில் ஏழு நாள்களும் திறந்திருக்கும்.)
சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I 08 - 10
பிரிவு II 10 - 12
பிரிவு III 01 - 03
பிரிவு IV 03 - 05
3 மாத பயிற்சிக் கட்டணம் ரூபா 3000.00
SAAMSON ENGLISH 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம். தொ.பே. 0776214567

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

மணல் விற்பனைக்குண்டு
நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்
4 ரெக்ர - 23,000/- அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு. (கல்லு 1 - 38/-)
தொடர்புகளுக்கு கண்ணா 0776766499

தொழிற் பயிற்சிகள்
•Electronics சகல இலத்திரனியல் பொருள்கள் இயங்கும் முறை பழுதுகள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும்
காலம்: 10 மாதம்
•Mobile Phone Repairing
சகல Phoneகளும் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும் காலம்: 3 மாதம்.
•Air Conditioning
சகல குளிர்சாதனங்கள் இயங்கும் முறைகள். பழுதுகள் திருத்தும் முறை பயிற்சி அளிக்கப்படும். காலம்: 6 மாதம்
சகல பயிற்சிகளும் முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படுவதுடன் பயிற்சி முடிவில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்படும்.
மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்: 21.04.2012 சனி 9.30 a.m.

சிங்கள வகுப்புக்கள்
சிங்கள மொழியில் சரளமாக பேச, எழுத, வாசிக்க புதிய பிரிவுகள் ஆரம்பம்
21.04.2012 மாலை 4.30, காலம்: 10 மாதம்
உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழகம் செல்ல உள்ள மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆர்வமுடையவர்கள் அனைவரும் பயில அரிய வாய்ப்பு.
ஆசிரியர்-K.R சூரி

Special English Course
விசேட ஆங்கில வகுப்புக்கள்
ஆங்கிலம் சரளமாக பேச எழுத வாசிக்க ஏற்றவாறு ஆரம்பத்தில் இருந்து அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படும். வகுப்புக்கள் திங்கள், செவ்வாய் புதன், வியாழன் ஆகிய நான்கு நாள்களிலும் காலை 9 மணி முதல் 12 மணி வரை நடைபெறும்.
ஆசிரியர்: செல்வி வல்லிபுரம் தியாகேஸ்வரி
ஆரம்பம்:- 23.04.2012 காலம்:- 03 மாதம்
பல்கலைக்கழகம் செல்ல உள்ள, பாடசாலை செல்லாத மாணவர்கள் மற்றும் ஆர்வமுள்ள அனைவரும் / பயில அரிய வாய்ப்பு. ஒரு பிரிவில் 10 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
விபரங்களுக்கு:-
Jaffna Technical Institute
இல. 7, பலாலி வீதி, யாழ்ப்பாணம். T.P:-0718561654, 0778249949
கிளை:New asian center 56/15B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P: 0779254078
குறிப்பு: வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.


## தூய யூஜின் டி மசனட் ஒன்றுகூடல் - 2012

### சிறுவர், இளையோர் சங்கமம்



அமலமரித் தியாகிகளின் (OMI) நிறுவுனர் தூய யூஜினின் விண்ணகப் பிறப்பின் 150ஆவது ஆண்டு நிறைவு விழா.

யாழ்., கிளி., முல்லை., மன்னார், வவுனியா, மலையகம் மாவட்டங்களில் இருந்து 1000 சிறுவர், இளையோர் பங்கேற்பு!

இடம் : புனித பத்திரிசியார் கல்லூரி.

முற்பகல் நிகழ்வுகள்: 9 மணி - 12.30 மணி வரை கலந்துரையாடல்களும் கருத்தமர்வுகளும்.

பிற்பகல் நிகழ்வுகள் : 2.30 மணி - 5.30 மணிவரை அரங்க நிகழ்வுகள்.

யாழ். ஆயர், நல்லை ஆதீனக் குருக்கள், இஸ்லாமிய, பௌத்த மதத் தலைவர்கள், அரச அதிபர், நீதிபதிகள் கலந்து சிறப்பிக்கிறார்கள்.

அமதிகள் (OMI) குழுமம்,
யாழ். மாகாணம்.


இறுக்கமாகியது
UK STUDENT VISA
வேலைவாய்ப்பென்ற பேச்சிற்கே இனி இடமில்லை
எனவே ஆஸ்திரேலியா சென்று கல்வி கற்போமா?
Australia Airport இல் Pick up
குறைந்த கட்டண தங்குமிட வசதி,
ஆஸ்திரேலியாவில் பகுதிநேர தொழில் வாய்ப்பு
ஆலோசனைகளிற்கு
யாழ். மக்களின் அபிமானம் வென்ற
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட் (PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
தலைமைக்காரியாலயம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 2219016
கிளைகள் : 23 - 1/3, மகேஸ்வரி லேன், கொழும்பு 06,
011 2366925, 075 6438553
(சனி, ஞாயிறு விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)
115A, இந்திரபுரம் வீதி, கிளிநொச்சி, 021 2285544
மெல்போன் - ஆஸ்திரேலியா
Land Line: 0061390437100
www.thisaikaddi.lk thisaikaddi@sltnet.lk

அனைத்து கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்
21.04.2012 / 23.04.2012 காலை 10.00 மணி
IIS INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

உடனடியாக கட்டடம் தேவை
கிளிநொச்சி A9 வீதியை அண்டிய பகுதியில் (கரடிப்போக்கு சந்திக்கும் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கும் இடையில்) 2500-3000 சதுர அடி பரப்புள்ள கட்டடம்/ மாடிவீடு வாகன தரிப்பிட வசதியுடன் உடனடியாக தேவை.
Tel : 0750472386


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.